T. D. R. C. 417.
R. L. 332/2.1905
[illegible]
[illegible]

O22:417.2112K
NOB
[illegible]

No 352

ஸ்ரீ

காஞ்சி வரதராஜ மாஹாத்மியம்.

ஸ்ரீமத் வேதவியாசரால் சொல்லப்பட்ட பிரம்மாண்ட புராணத்திலிருக்கும் சத்தியவிரத க்ஷேத்திர அத்திகிரி மாஹாத்மியாதி பதினெட்டு அத்தியாயங்களை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து

[illegible]—ருமய்யரால்
எழுதப்பட்டு,

பண்டித சதாவதானம்-
சக்கிரவர்த்தி கிருஷ்ணமாசாரியாரால்,
பரிசோதிக்கப்பட்டது.

முதற்பதிப்பு 1,000 காபி.

சென்னை
டெண்டன் கம்பெனியாரால்
அச்சிடப்பட்டது.

[ரிஜிஸ்டர்ட்.] 1908. [விலை அணா 2½.

O22:417.2112K
N08

ஸ்ரீப்ரணதார்த்தி ஹரவரத பரப்ரம்ஹணே நம:

ஸ்ரீ காஞ்சி வரதராஜஸ்வாமி மஹாத்மியம்.

ப்ரம்மாண்ட புராணத்தில் ப்ருகுநாரதஸம்வாதத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் காஞ்சி வர்ணனை.

முதல் அத்தியாயம்.

மகரிஷி சிரேஷ்டராகிய ஸ்ரீ ப்ருகுமஹா முனிவரானவர் தவ சிரேஷ்டராகிய நாரத மகரிஷியைப் பார்த்து சொல்லுகிறார்.

"ஓ! முனிபுங்கவரே? தேவரீர் புராதனங்களான வர்ணாசிரம தர்மங்களையும், ஸ்ரீ விஷ்ணு நாபிக் கமலத்தில் சதுர்முகனுற்பத்தியையும், சகல தேவதிரியக்மனிதோற்பத்திகளையும், தர்மார்த்த காமமோக்ஷ ஸ்வரூபங்களையும், சரீர தாரிகளுக்குண்டான கர்ம பந்தங்களையும், ப்ரக்ருதி விக்ருதி ஸ்வரூபங்களையும், வித்யா வித்யைகளின் லக்ஷணங்களையும், சாலக்கி

ராம குருக்ஷேத்திர பதரிகாசிரமங்களையும், பரமபா
கயாக்ஷேத்திரங்களையும், கண்டக புருஷோத்தமங்க
ளையும், நைமிசாரண்ய க்ஷேத்திரத்தையும், உத்பலாவர்த்
தகம் முதலான புண்ணிய க்ஷேத்திரங்களுடைய
பெருமைகளையும், அயோத்யா, மதுரா, மாயா, காசி,
காஞ்சி, அவந்திகை, துவாரகை முதலிய முக்திக்கு
வித்தான க்ஷேத்திரங்களையும், சோலைகளின்
நிலங்களையும், எனக்கறிவித்தீர்கள். என் மனதில்
நிறைந்திருந்த சந்தேகங்களொழிந்தன. நான் கிருத
கிருத்தியனானேன். சர்வ தர்மங்களையுமறிவிக்கு
மாற்றலுடையாரும் உம்மையன்றி வேறுயாருமெங்கு
மில்லையென்பதுண்மையே. தங்களையுபாசித்து சகல
விஷயங்களையும் அதிகாரஸம்பந்தமான மகிமைக
ளையுமறிந்துகொள்ளலாம். தேவரீரிடத்தில் ஒரு
சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்ள விரும்புகிறேன்.
தாங்கள் எனக்கு முன்கூறிவந்த விஷயங்களில் சகல
க்ஷேத்ரங்களிலும், சத்யவ்ரத க்ஷேத்ரம் உத்கிருஷ்ட
மென்று கூறினீர்கள். அந்த க்ஷேத்திரத்திலுள்ள ஆச்
சரியங்கள் மேன்மையானதையும் சுருக்கிக் கூறினீர்கள்.
அது எந்தக்காரணத்தால் விசேஷமுற்றது? கிருத
யுகத்தில் சதுர்முகன் அந்த க்ஷேத்திரத்தில் அஸ்வ
மேதயாகத்தை யெப்படிச் செய்தார்? அந்த சர்வோ
த்தம புண்ணிய க்ஷேத்திரத்தை விஸ்வகர்மா எப்படி
நிர்மித்தார்? அந்த க்ஷேத்திரத்திலிருக்கும் ஸ்ரீ அத்
திகிரியின் மான்மிய மெப்படிப்பட்டது? அந்த கிரி
யினுச்சியில் மணிமய வேதியில் விஷ்ணுமூர்த்தி யெவ்
வண்ணமாய் விர்ப்பவித்து சதுர்முகனால் பூசிக்கப்பட்

டார்? வேகவதி தீரத்தில் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியானவர்
சர்வஜீவராசிகளையும் எப்படி வரப்பிரசாதம்கொடுத்து
பரிபாலிக்கிறார்? ஸர்வ பிராணிகளுக்கும் வரங்கொடுப்
பதால் வரதன் என்கிற திருநாமத்தோடு இன்றும்
பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். அந்த விதங்களெல்
லாம் விளக்கமாயும் தெளிவாயும் கூறவேண்டுமென்று
பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று
கூறக்கேட்ட நாரத மஹரிஷி கூறத்தொடங்கினார்.

வாரும் தவசிரேஷ்டரே! மிகவும் விசேஷமான
பரம இரகசியமானதுமான விஷயத்தைக் கேட்
டீர். இந்த இரகசியத்தை சொன்னவர்களுக்கும் கேட்
டவர்களுக்கும் மறுபடி பிறவியில்லையென்று புராணங்
கள் முறையிடுகின்றபடியால் நீர் கேட்டது மிகவும்
சரியான விஷயமே! நீர் மிகுந்த சாஸ்திரப் பிரியராத
லாலும் தெய்வபக்தி நிறைந்தவராதலாலும் இவ்வளவு
அரிய பெரிய விஷயத்தைப்பற்றி விரும்பினீர். ஆகை
யால் சொல்லுகிறேன் கேளும். முற்காலத்தில் நான்
அநேக வருஷகாலம் மிகவும் அரிய தவஞ்செய்து விஷ்
ணுவை தரிசிக்க விரும்பி அவரை மனதில் தியானி
த்துக் கொண்டு ஸ்வேத த்வீபத்துக்குப்போய் அவ்விடத்
தில் பரமாத்மாவையும் அவ்வியனையும் எழுந்தருளி
யிருக்கும் ஸாலக்ராமத்தை தரிசித்துக்கொண்டு அவ்வி
டத்திலுள்ள சித்தமுனிவர்களை சேவித்து அவர்
களை ஆஸ்ரயித்து யோகத்தைச் செய்து நிஸ்சல சித்
தனாயிருந்தும் சித்தியும் பல பிரயத்தினங்களாலும்,
விஷயங்களில் விருத்தியுண்டாகாமல் சஞ்சல சித்த

னாய் மேருபர்வதத்தையடைந்து அங்கு சகல ரிஷிகளால் பூஜிக்கப்பட்டவராயும், பிரசன்னராயுமிருக்கிற யாக்ஞவல்கிய ரிஷி புங்கவருக்கு அஷ்டாங்கயோக லக்ஷணமான மகாயோக இரகசியங்களை யறிவித்துக் கொண்டிருக்கிற சதுர்முகனை யஞ்சலிசெய்து இப்படிச் சொல்லத் தொடங்கினான்.

ஓ லோகபிதாவே! சர்வலோகத்துக்கும் ஆதாரமும் கதியும் நீயன்றி பக்தர்களுக்கு சுலபமான தொன்றுமில்லை யென்று உம்மையுபாசித்து முனீந்திரர்களெல்லோரும் பரமரகசியங்களையும் தெரிந்துக் கொள்ளுகிறார்கள். உன் பக்தனான நான் பரமயோக இரகசியத்தை யுணர்ந்து என் சித்தம் எப்படி ஸ்திரப்படுமென்பதை தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன், உன் அநுக்கிரகத்தாலே சித்த சஞ்சலத்தை யொழித்து சர்வ பூதாந்தராத்மியாயிருக்கும் ஸ்ரீ ஜனார்த்தனனை தரிசிக்கக் கோருகிறேன், என்று பிரார்த்தித்தவுடன் பக்தப் பிரியனான கமலாசனன் மனோநிக்ரக சாதகமான பரமயோகத்தை யெனக்கறிவித்தார். அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். சித்த சமாதானத்துடன் கேளும். உமக்குச் சரியான நண்பன் எனக்கு வேறு யாருமில்லை. ஆகையால் சொல்லுகிறேன், கேளும். பூர்வகாலத்தில் நான்முகன் உலகத்தை நிருமாணித்து கிருதயுகத்தில் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியை தரிசிக்கவுந் தேசித்து கங்கைக் கரையில் யோகாப்பியாசியாய் அரியதவம் புரிந்து சாந்தனாயும் நிர்த்வந்தனாயும் நிஷ்காமியாயும் பிராணாயாமபரனாயும் நாசாமுனையில் லக்ஷலோசனனாயும் மவுனியாயிருந்தும் விஷயபர

னாய மனதை விஷ்ணுவினிடத்தில் நிறுத்த முடியாமல் அதி சிந்தா பரவசனாய் துக்காக்கிராந்தனாயுமிருந்த போது ஆகாயவாணி மகாநாதத்துடன் சொன்னதாவது "ஓய் சதுர்முகனே" ஏன் துன்பமடைகிறீர்? மனோதைரியத்தின்மேல் ஒரு உபாயத்தை சொல்லுகிறேன் கேளும். நீர் மகாவிஷ்ணுவை நோக்கி ஆயிரம் அஸ்வமேதயாகங்களைச் செய்வீரானால் சித்த சுத்தியைப் பெறுவீர். இது விஷயத்தில் சந்தேகமில்லை. அப்படிச் செய்யும் விதத்தைச் சொல்லுகிறேன் கேளும். ஜம்புத்வீபில் பாரத வருஷத்தில் கங்கைக்குத் தெற்குப் பக்கத்தில் இருநூறு யோஜனை தூரத்தில் கீழ் சமுத்திரத்திற்கு மேற்கில் ஐந்து யோஜனை தூரத்தில் ஏழு யோஜனை விஸ்தாரமுள்ள புண்ணிய விருக்ஷங்கள்கூடின மனோகர பாப விநாசக விஷ்ணு பிரீதிகரமான சத்திய விரத க்ஷேத்திர மென்கிற திருநாமத்துடன் ஒரு மகாபுண்ணிய க்ஷேத்திர மிருக்கிறது. நீர் அவ்விடம்போய் தேவதேவனைக் குறித்து அசுவமேதயாகம் பண்ணினால் நிஸ்சல சித்த முண்டாகும். அன்றியும் மற்றொரு விசேஷமும் சொல்லுகிறேன் கேளும். அந்த க்ஷேத்திர மஹாத்மியத்தில் அவ்விடத்தில் ஒரு தர்மம் பண்ணினால் அது மூன்றுக் காயிரமாகப் பெருகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கெவ்வளவும் சந்தேகமில்லை. அவ்விடத்தில் ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியானவர் சதாகாலமும் சாந்நித்யனாய் இச்சைக்கேற்ற பலனைக்கொடுத்துக் கொண்டிருப்பார். மேலும் அவ்விடத்தில் யுக்திகிரி யென்கிற பெயருடன்

ஒரு சிறந்த மலையுண்டு. அம்மலையின்மீது ஸ்ரீமந்நா ராயணன் அஷ்டதிக்கஜங்களால் பூஜிக்கப்பட்ட தாகலால் அவரெழுந்தருளியிருக்கும் மலைக்கு அத்தி கிரியென்கிற திருநாமத்தோடு இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வளவு மான்மியம் பொருந் திய மலையின்பேரில் கிழக்கு மேற்கு பாகத்தில் ஒரு வன்மீக மிருக்கிறது. அதில் சேஷன் பூஜிக்கத்தக்க வன். அவ்விடத்தில் சர்வ பாப நிவர்த்திகரமான அநந்தசரசு என்கிற ஒரு தடாகமிருக்கிறது. அதற் குத் தென்றிசையில் யாக சாலையை நிர்மித்து அந்த உத்தரவேதிகையில் அசுவமேத யாகஞ்செய்து பரந் தாமனைப் பூஜைபுரிவீராகில் அது முன்றுக்கு ஆயிரம் பலனைக்கொடுக்கும். ஆகையால் நீர் அவ்விடம்போய் அஸ்வமேதயாகம் புரிவீராகில் பக்தப்பிரியனாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் உம்முடைய அபீஷ்டத்தை நிறைவேற்றுவரென்று கூற, பிரீதியை யடைந்து பிர மகன் அந்த க்ஷணத்திலேயே அந்தக்ஷேத்திரத்தை யடைந்து அநந்தசரசின் கரையின்மீது நெடுங்காலம் தவம்பண்ணி அஸ்வமேதயாகஞ்செய்ய நினைத்து சித் வித்யாதரகந்தர்வாதி தேவகணங்களை அழைப் பித்துப்பின்பு விஸ்வகர்மாவையும் அழைத்துச்சொல்லு கிறார். ஓ சிற்பி நாயகா ? நான் அஸ்வமேத யாகம் பண்ணி ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியை பூஜிக்கவேண்டுமெ ன்று உத்தேசித்திருக்கிறபடியால்மூன்று லோகத் திலுமுள்ள யாவரும் யாகத்தைப்பார்க்க வருவார்கள். அவர்கள் தங்கியிருப்பதற்காக சிறந்த உன்னதமான வும் மனோரம்யமானவும் உத்யானாதிகளால் நிறை

யப்பெற்றனவும் சர்வோபகரணங்களையு முடைத்தா னவுமான வீடுகளோடுங் கூடிய ஒரு பட்டணத்தை நிருமிக்கவேண்டியது. அதி மனோரம்யமான இம்மலை யின்மீது உத்தர வேதிகையைச் செய்யவேண்டியது. கிழக்கு மேற்கு பாகமாகிய இந்த வன்மீகத்தில் அநந்தனால் பூசிக்கப்பட்ட விஷ்ணுவானவர் இந்த அனந்த சரசில் சாந்நித்யமாயிருக்கிறபடியால் இந்த புண்ணிய க்ஷேத்திரத்திற்குச் சமானமான க்ஷேத் திரம் உலகத்திலில்லை. ஆதலால் இவ்விடத்திலேயே யாகத்தைச் செய்வதற்காக ஆநந்தகரமான சோலைகளை யும், நந்தவனங்களையும், தாமரை முதலிய புட்பங்க ளால் நிறைந்த தடாகங்களையும், கொங்கு, இரு வாட்சி முதலிய விருக்ஷாதிகளையும், மல்லிகை, முல்லை, மனோரஞ்சிதம் முதலிய லதாநாயகங்களையும் உண்டாக்குமென்று ஆணையிட்டபடி விசுவகர்மாவான வர் விசாலமான வீதிகளையும் அவ்வீதிகளில் அநேக வித விசித்திரங்களோடும் பற்பல அலங்காரங்களோ டும் கூடிய வீடுகளையும் மேருசமான கோபுரங்களை யும் உடையதும் அநேக வித்வஜனங்களோடு கூடிய அமராவதிக் கொப்பானதும், பொன் மயமானரதாதி சின்னங்களுடனும் பாரத்தியான சமூகத்துடனும் விவித பக்ஷிய போஜ்யாதிகளையுடையதும், ப்ராம்மணக்ஷத் திரிய வைசிய சூத்திரர்களுக்கும் ரிஷி சமூகங் களுக்கும் யக்ஷ கின்னர சித்த வித்யாதராதி தேவ கணங்களுக்கும் தகுந்தபடி இடங்களையுடையதும், இன்னும் பலவித சௌக்யாம்சங்களுடையதுமான ஒரு பட்டணம் உண்டாகும்படி நினைத்த மாத்திரத்தில்

ஒரு திவ்ய தேஜோமயமான பட்டணமுண்டாயிற்று. இப்படிப்பட்ட மாநகரத்தில் அந்த மலையருகில் பகுலக்ஷணத்துடன் யாகசாலையை நிருமித்து அந்த மலையினுச்சியில் மேடு பள்ளமில்லாத சமபூமியில் உத்தரவேதிகையை நிர்மித்து மகாத்மாவாகிய நான்முகனானவர் சகலதேவ கணங்களோடும் ரிஷிக்கூட்டங்களோடும் வேத வேதாந்த பாரங்கதரான விப்ரோத்தமர்களுடனும் மனோநிக்ரக பராளான ஜனகாதிராஜ சிரேஷ்டர்களுடனும் பல ஜனங்களுடனும் வந்து சகல விஷயங்களுக்கும் முனிபுங்கவர்களை வைத்துக்கொண்டு யாககிருத்தியங்களை ஆரம்பித்து அஸ்வமேதக் குதிரையை அலங்கரித்து மந்திர பூர்வகமாக அபிமந்திரித்து விட்டார்கள். அக்குதிரையானது சர்வலோகங்களையும் சுற்றிக்கொண்டு ஒரு வருஷத்தில் திரும்பிவந்து சேர்ந்தவுடன் யாகம் பண்ணத் தொடங்கினார். அதில் மரீசி, அங்கிரசு, அத்திரி, வசிஷ்டர், புலஸ்த்தியர், பர, வசு, கிரது, ஹரித, கண்ணுவர், கர்த்தமாக்கள், சாதாதபஸ்த்தி யயக்கியர்கள், அனுஷாக்ஷ, இத்திரி, ரைப்பியு, முதலான பதினாறு பேர்களில் பிரஜாபதி, ஹோதாவானார். வசிஷ்டர் அத்வரியுவானார். சத்திய யக்கியர் உத்காதாவானார். மரீசி, பிரஜாபதியானார், மிருகுத்வர்கள் ரித்திவிக்களானார்கள். யாக்கியவல்கியர் அத்தியக்ஷரானார். அதற்குள் பிரம்மதேவன் யக்கிய தீக்ஷிதனாய் யக்கிய போக்தாவும் யக்கிய தேவதையுமான புருஷோத்தமனை மனதில் தியானித்துக்கொண்டு யாகஞ் செய்யவாரம்பித்தார். அந்த யாகத்தைப்

பார்க்கப்பார்வர்களும் வந்து சேர்ந்தார்கள். அந்த பட்டணத்தில் பிரம்மதேவனோடு புண்டரீகாக்ஷன் கூடியிருந்தபடியால் காஞ்சீயென்று பேர் வந்தது. அதுவுந்தவிர அந்த நகரத்தில் அநிர்வாச்சியமான புண்ணியகோடி யென்கிற விமானத்தோடே கூடிக்கொண்டிருப்பதால் காஞ்சியாச்சுது. அந்த புரியானது அப்போது யாக சந்தர்சன சந்தோஷாதிசயத்தோடே வந்த நரசுராசுரசமூக சமேதமாய் மந்தரமலையால் க்ஷுபித்த மகாசமுத்திரத்தை யொத்திருந்தது.

முதல் அத்தியாயம் சம்பூர்ணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகு நாரதஸம்வாதத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் ஸரஸ்வதி கோபவாக்யம்

இரண்டாவது அத்தியாயம்.

நாரதபகவான் பிருகு மகாரிஷியைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓய் முனிபுங்கவா! இந்த விதமாக கமலாசனன் யாகதீக்ஷைக்கு உபக்கிரமிக்க—

ஸுரகுருவானவர் சொல்லுகிறார்-ஓய் மகாத்மாவே! இப்பொழுது இவ்விடத்தில் உன் தேவியாகிய ஸரஸ்வதி இருக்கவேண்டும். நான்கு பத்னிமார்களும் இருக்கவேண்டும். அவர்களுக்குள் ஸரஸ்வதிதான் முன்னே இருக்கவேண்டியது. சீக்கிரமாக அழைப்பியுமென்று சொன்னார். அதுகேட்ட சதுர்முகன் வசிஷ்டரை யழைத்து ஓ புத்திரா! பூர்வகாலத்தில் என்னால் அவமானம் பண்ணப்பட்டபடியால் என் பத்னியாகிய கலைமகள் கோபித்திருக்கிறாள். அவளிடம் சென்று வேகத்துடன் அழைத்துவாவென்று சொல்லவும் வசிஷ்டரானவர் அதித்துரிதமாகச் சென்று தன் தாயார் திருவடியில் நமஸ்கரித்து அனேக விதங்களாகப் பூஜித்து பிரீதியான வாக்கியங்களாகச் சொல்லுகிறார். ஓ மாதாவே! ஸர்வபூதங்களுக்கும் ஆதாரம் நீயே; உன்னையே யெல்லாரும் உபாசிப்பார்கள். உன் திருவருளால் ஸகல தர்மங்களும் விருத்தி அடையும். சதுராननன் உனது கிருபையால் ஸர்வலோகங்களையும் சிருஷ்டிக்கிறார். ஆகையால் உன்னை அழைத்துக்கொண்டு வரும்படி என்னை

இப்பொழுது அனுப்பி வைத்தார். நீ யில்லாததால் காந்தியீனனான சூரியன்போலும், திருமகள் நீங்கிய திருமால்போலும், ஒளியிழந்த சந்திரன்போலும், தக்ஷிணையில்லாத யாகம் போலும், வித்யாவீனனான விப்பிரன்போலும், பொறையற்ற தபசுபோலும், எனது இறைவனாகிய விதாதாவானவர் வருந்துகின்றார். ஆகையால் ஸர்வலோகங்களுக்கும் எனக்கும் இதமாய் அதி சீக்கிரமாய் விதாதாவினுடைய சமீபத்திலெழுந்தருள வேண்டும் தாயே! யென்று வசிஷ்டரானவர் வேண்டி, உன்பதியான சதுர்முகன் சத்தியவிரதக்ஷேத்திரத்தில் ஸ்ரீபதியைக்குறித்து அருமையான தபசுகளைச்செய்து அசுவமேத யாகத்தை செய்யும்பொருட்டென்னை யழைத்துவரும்படி யடியேனுக்காக்ஞாபித்தார். இப்போது அனேக முனிவர்களுடன் கூடியிருக்கிறார். அவராக்ஞையால் விசுவகர்மாவானவர் மூன்றுயோசனை விஸ்தீரணமுடைய அதி மனோகரமான காஞ்சியென்று ஒருபட்டணத்தை நிருமாணம் செய்திருக்கிறார். மேலும் அனந்தஸிரத்தில் அதிரமணீயமான யக்கியசாலையை நிருமாணம் செய்தார். யக்ஞோபகரணங்களெல்லாம் இச்சிதமாக இருக்கிறது. அதிவேகத்துடன் வரவேண்டும் தாயேயென்று அழைக்கக் கேட்டு ஸரஸ்வதி தேவியானவள் அதிகோபத்துடன் தான் அவ்விடத்துக்குச் செல்ல இஷ்டமில்லாதவளாய் சொல்லுகிறாள். ஓ வசிஷ்டா! லோகநாதனான அந்த பிரம்மாவுக்கு யான் அனேகமான வந்தனங்களைச் செய்கிறேன். பூர்வம் ஒருக்கால் யான் அவரால் அவமானப்

பட்டு இருக்கிறேன். ஆகையால் இப்பொழுதே வர
யான் சம்மதிக்கவில்லை. அவரே யாகத்தைச் செய்
துக் கொள்ளட்டும். நான் அவருடைய அனுக்கிரகத்
தாலே இவ்விடத்திலேயே ஜீவிக்கிறேன். எனக்கு இவ்
வளவு சவுரியம் இருக்கிறதாவென்று யோசிக்கவேண்
டாம். என்னுடைய பூர்வ விருத்தாந்தங்களை யெல்
லாம் கேட்டு நீயே யுக்தாயுக்தத்தை யோசிப்பாயாக.
பூர்வத்தில் சதுர்முகன் சகலதேவர்கள் ரிஷிகள் நிறை
ந்த சபாமத்தியில் என்னுடன் கூட சிம்மாசனத்தின்
மேலிருந்துக்கொண்டு கின்னரகீதங்களைக் கேட்டு
பேரானந்தத்துடனிருக்கும்போது என் பக்தர்க
ளும் லக்ஷ்மிதேவியின் பக்தர்களும் ஒருவருக்
கொருவர் வாதித்துக்கொண்டு அவ்விடம் வந்து
அந்த சபையிலிருக்கும் முனிவர்களையும் தேவர்களை
யும் மத்யஸ்தர்களாக ஏற்பாடு செய்து லக்ஷ்மிதேவி
ஸரஸ்வதி தேவியாகிய இருவர்களில் யாவர் மேம்பா
டுற்றவரென்று வினவினது கேட்டு அந்த ஸபையி
லுள்ள யாவரும் களிக்க சிம்மாஸனத்தி லிருக்கும்
என்னைப் பார்த்துக்கொண்டு ஒன்றும் சொல்லக்
கூடாமையா யிருக்க, என்னருகிலிருந்த பிதாமகன்
அவர்களுடன் ஓ சபையிலுள்ளவர்களே! கேளுங்கள்
ஸர்வலோகங்களுக்கும் பூர்ணமஹாலக்ஷ்மி ஈஸ்வரியா
யிருக்கிறவள். எங்கும் அந்த ஸ்ரீதேவியானவள் தே
வதையாக இருக்கிறாள். ஆகையினால் எல்லாரிலும் அந்
த தேவியே மேன்மை பொருந்தியவள். அவளுக்குச்
சமானமானவர்கள் கிடையாது. மகளிரெல்லாரும்
அவளைச் சந்ததியே அடைந்திருக்கிறார்கள். புருஷர்

களெல்லாரும் விஷ்ணுதேவாம்சமாகவே உண்டாயி
ருக்கிறார்கள். எத்தன்மையுடையாராகிலும் அத்தே
வியுடன் வாதிக்கத் தக்கவர்களல்லவென்றனர். அந்த
வாக்கியங்களைக் கேள்வியுற்ற யான் மிகுந்த நாணத்
தையடைந்தவளாய் என்பதியை நோக்கி ஓ புவனே
ஸ்வரா! அடியேனுக்கு நதிகளின் மேன்மையைக் கொ
டுத்தருளவேண்டுமென்று கேட்டேன். அதற்கவர் சின
ந்தவராய் என்ன சொன்னாரென்றால், ஓ ஸரஸ்வதி?
விஷ்ணுவினது பாதத்தில் உற்பத்தியான கங்கையு
டன் எந்த நதிகளும் சமமாக மாட்டாது. ஆகை
யால் அதைத் தவிர்த்து வேறே யெந்த வரமாகிலும்
ஒரு வரத்தைக் கேளென்று சொன்னார். அதைக்
கேள்வியுற்ற நான் கோபத்துடன் சிம்மாசனத்தை
விட்டெழுந்திருந்து இவ்விடத்தை யடைந்து என்
அமிசத்தை யுடையதாய் உலகத்தார் போற்றும் என்
பெயரினை யுடைய இந்நதியில் வசிக்கிறேன். என்
னாயகருக் கென்மேயில் அநுக்ரகம் இருந்தால் இந்த
நதி தீர்த்தத்தில் புண்ணிய விருக்ஷங்களுடன் மனோ
கரமாயிருக்கும் இந்த பருவதங்களின் மேல் யாகத்
தைப் பண்ணலாம். நானவ்விடம் வருவதற்குச் சம்
மதிக்கமாட்டேன். ஆகையால் இதுகளையெல்லாம்
அவருக்குத்தெரியச்சொல்லி அவருக்கு இஷ்டமிரு
க்கும் பக்ஷத்தில் அவரை இவ்விடத்திற் கழைத்துக்
கொண்டு வருவாயாகவென்று சொன்னாள். அதைக்
கேட்ட மறையோன் ஓ மாதாவே! சகலமும் உனக்
குத் தெரியும். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.
உனக்கு ஆக்ஞை பண்ணுகிறவர்கள் யாவர்? உன்னை

னுக்கிரகத்தினால் உலகத்தின்கண்ணுள்ள ஆன்மகோடிகளெல்லாம் ஞானத்தை யடைந்தன. ஆயினும் யான் ஒரு விண்ணப்பஞ் செய்கிறேன். அதைச் செவி கொடுத்துக் கேட்டருளும். அதாவது இவ்விடத்தில் அசுவமேதயாகம் பண்ணுவதற்குத் தகுந்த காலதேசபேதங்களாலே கர்மபலன்களுண்டாகும். சத்திய விரத க்ஷேத்திரமானது கமலாசனனுக்கு கந்தஸ்தானம். அவ்விடத்தில் அந்த பகவானானவர் இடைவிடாது எழுந்தருளி யிருப்பார். மகா யோகீஸ்வரர்களும் சித்தர்களும் முனிவர்களும் அவ்விடத்தில் சதா தபம் புரிந்துகொண்டிருந்துக் கொண்டிருக்கின்றனர். அவ்விடத்தில் எப்படிப்பட்ட பாபியானாலும் அடைந்து யமனுலகினை யடையான். அந்தஸ்தலத்தி லியற்றிய புண்ணியங்கள் ஒன்றுக்கு ஆயிரமாகும். ஞானிகளாயினும் அஞ்ஞானிகளாயினும் அங்ஙனம் வசிக்கின்றவர்களெல்லாருக்கும் மோக்ஷம் கிடைக்கும். பக்தி சிரத்தை யிராதவர்களும் டம்பர்கள் மூர்க்கர்கள் கர்மஹீனர்களும் அநாசாரங்களுடையவர்களும் கிருதக்னர்களும் மாதா பிதாக்களை சேவை செய்யாதவர்களும் ஸ்வகுல வொழுக்கந் தவறி வேறே ஆசாரங்களைக் கைக்கொண்டவர்களும் வேத நிந்தகர்களும் விலோமஜாதிகள் முதலியவர்களும் இந்த சத்ய விரத க்ஷேத்திரத்தை யடைந்து யாகமுதலிய கர்மங்களைச் செய்வார்களாயின் தாங்கள் விரும்பியயாவும் அடைவார்கள். ஆகையால் சதுர்முகன் அவ்விடத்திலே யாகத்தைச் செய்வார். அவ்விடத்தில் திருமகள் கொழுநன் சாந்நித்யமாயிருந்துகொண்டு யாக பல

னைக் கொடுப்பார். எந்த மனிதனாயினும் அந்த அனந்த ஸரஸில் ஸ்நானம் செய்து அந்த மகா விஷ்ணுவை ஆராதிப்பானாயின் அவனுக்குப்பாதகநாச தபோ ஹோம பலன்களுண்டாகும். இப்பூவுலகின்கண்ணுள்ள எந்த க்ஷேத்திரமும் அந்த ஸத்ய விரத க்ஷேத்திரத்திற்குச் சமானமாக மாட்டாது. அந்த க்ஷேத்திரத்தின் பெருமையைப் புகல என் தந்தைக்கே யியலாதாயின் யானோ சக்தன். அவ்விடத்தில் எந்த விரதங்களைச் செய்தாலும் அவைகளெல்லாம் சத்ய விரதங்களாகும். ஆகையால் அந்த க்ஷேத்திரத்திற்கு சத்ய விரத க்ஷேத்திரமென்னும் பெயருண்டாயது. அது நிற்க, அவ்விடத்தில் ஒரு யாகஞ் செய்தால் ஆயிரம் யாகஞ் செய்த பலனுண்டாகு மாகையால் சதுர்முகன் அவ்விடத்தில் ஒரு யாகஞ்செய்யத் துவக்கியிருக்கிறார் ஆகையால் அதி சீக்கிரமாய் அவ்விடத்திற்கு வரவேண்டியதென்று சொல்லவும், சரஸ்வதி அவ்விடத்திற்குப்போக இஷ்டமில்லாதவளாய் கோபத்துடன் சொல்லுகிறாள் :—ஓ! வசிஷ்டா! பூர்வத்தில் என்னை அவமானம் பண்ணினதால் நானவ்விடத்திற்கு வரமாட்டேன். என்னுடைய நாதன் நானில்லாமலே யாகத்தைச் செய்யட்டுமென்று சொல்ல வசிஷ்ட முனிவரானவர் அந்த தேவியின் விடை பெற்றவராய் ஸத்ய விரதக்ஷேத்திரஞ் சேர்ந்து கமலாசனனுக்கு நடந்தவைகளைப்புகல, கமலாசனன் கேட்டு வேத விதிப்படி அசுவமேத மகாயாகத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

இரண்டாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்டபுராணத்தில் பிருகு நாரதஸம்வாதத்தில் ஹஸ்தகிரிமஹாத்மியத்தில் ஸரஸ்வதிதேவி சகியடர்வத்தில் எரிய

மூன்றாவது அத்தியாயம்

இப்படி சொல்லிக்கொண்டு வந்த நாரதபகவானைப் பார்த்து பிருகு மகாரிஷியானவர் சொல்லுகிறார் :— ஓ முனி புங்கவனே! சதுர்முகக்கடவுள் தனக்குப் பதியாகிய ஸரஸ்வதி தேவியைவிட்டு அசுவமேத யாகத்தை யெவ்வாறு செய்துமுடித்தார்? அவைகளை அடியேனுக்குக் கூறவேண்டுமென்று வினவவும், நாரதபகவான் சொல்லுகிறார். இந்தப்படி ஸரஸ்வதிதேவி வசிஷ்டருடன் சொல்லியனுப்பியவசனங்களைக்கேட்டு அவ்விடத்திலிருந்த ரிஷிகளெல்லாரும் சதுர்முகனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். ஓ கமலஜனே! உமக்குத்தெரியாதது என்ன இருக்கிறது? பர்த்தாவினுடைய வாக்கியங்களைத் திரஸ்கரித்த பத்தினியை விடுவதாலே தோஷமில்லை. உலகத்தில் பதியின் வாக்கியங்களை தலைமையாக அங்கீகரியாமல் அதி கோபிஷ்டியான பாரியையை கர்மகாரியத்தின் பொருட்டு விடுகிறது பர்த்தாவுக்கு யுக்தந்தான். ஸர்வலக்ஷணங்களுள்ளவளாயிருந்தாலும் தன் பதிக்கு விரோதம் செய்பவர்களை விடுகிறது புராதனமான தர்மந்தான். நாங்களெல்லாரும் சாஸ்திரங்களுக்கு விரோதமாகச் சொல்லமா

ட்டோம். ஸர்வலோகநாதனான உமக்குத்தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. இப்பொழுது உன் பத்தியானவள் இவ்விடத்திற்கு வராவிட்டால் அதனால் ஒன்றும் குறைவு உண்டாகமாட்டாது. அவளைச் சந்தையுடைய சாவித்திரிக்குச் சமானமானவர்கள் யாருமில்லை. ஆகையால் அவளை பாரியையாகச் செய்துகொண்டு யாகத்தை ஆரம்பஞ்செய்யும். கவிர சிரத்தை தாஷ்டிமதி இம்மூவர்களுமிருக்கிறார்கள். இவர்களையும் பாரியைகளாகவைத்துக் கொள்ளும். யாகமும் பூர்த்தியாகுமென்று முனிவர்கள் சொன்ன வசனங்களைக் கேட்டு; சத்தியிலுதித்தோன் சந்தோஷத்தை யடைந்து சாவித்திரி முதலிய நான்கு பத்தினிகளையும் கூட்டிக்கொண்டு யாகதீக்ஷிதனாய் பனிரெண்டு தினங்களான பின்பு பிரவர்க்கியாதி கர்மங்களைச்செய்து மரீசியாதி ருத்விக்குகளையும் பூஜித்து அந்த யாகமாகிய ஸத்கருமத்தைப் பார்க்கவந்த பிராமணர்களையும் தேவர்களையும் தகுந்த பூஜைகளால் திருப்திசெய்தார். அவைகளையெல்லாம் பார்த்து அசுரர்களெல்லாம் பொறாமைகொண்டு அந்த யாகசாலையிலிருந்து வெளிப்பட்டு குரோதமூர்ச்சிதர்களாய் பலத்தினால் மதித்தவர்களாய் யாகத்துக்கிடையூறுசெய்யும்பொருட்டு தேவர்களுடன் யுத்தம் செய்ய யத்தனம்செய்துகொண்டிருந்தார்கள். அவைகளையெல்லாம் கண்ட அசுரர்களில் ஒருவனான விரோசனன் சொல்லுகிறான். ஓ அசுர கண்பர்களே! யான் சொல்லும் வசனங்களைக் கேட்பீர்களாக. இப்பொழுது தேவர்களுடன் யுத்தஞ்செய்யத்தகாது. பிரம்மதேவன் ஸ்ரீயப்பதியைக் குறித்து யாகஞ்செய்

கிறார். இது விஷ்ணுக்ஷேத்திரம். இந்த க்ஷேத்திரத்தில் மகாவிஷ்ணுவானவர் எப்பவும் சான்னித்யமாயிருப்பார். ஆகையால் நம்முடைய பலன்களுக் கானியுண்டாகும். ஆலோசனை பண்ணாமல் யுத்தஞ்செய்யலாகாது. இந்த யாகபங்கத்துக்கொரு உபாயம் சொல்லுகிறேன் கேளுங்கள். பிதாமகன் ஸரஸ்வதியில்லாமல் யாகஞ்செய்கிறான். ஆகையால் நாம் சென்று அந்த தேவியுடன் போதனை செய்வோமானால் இதற்கு விக்கினம் உண்டாகிவிடுமென்று சொல்ல, அவர்களெல்லாரும் சேர்ந்து விப்பிரரூபங்கொண்டு ஸரஸ்வதியினிடஞ்சென்று அத்தேவியை அநேகமான ஸ்தோத்திரங்கள் செய்தார்கள். அந்தவாணியானவள் அவர்களது துதிக்கிரங்கி அவ்வசுரர்கள் முன்பாகத்தோன்றினாள் அப்படித்தோன்றின தேவியைக்கண்ட அசுரர்கள் சகலவிதங்களாக வந்தனைகள்செய்து சொல்லுகிறார்கள். ஸர்வலோகங்களுக்கெல்லாம் கதி நீயே. சக்தி வித்யாஞானத்தைக் கொடுக்கின்ற மாதாவும் நீயே. உன்னுடைய அனுக்கிரகத்தினாலேதான் சகலலோகமும் கடைத்தேறுகின்றது. பாகசாஸனன் உன் திருவருளினாலே சுராதிபத்யத்தை அடைந்தான் உன் திருவருளில்லையாகில் உலகமெல்லாம் அந்தகாரத்தாலே மூடப்படும். உன் கடாக்ஷத்தினால் சதுர்முகன் நான்குவேதங்களையும் அடைந்தான். உன்னை ஸ்தோத்திரம்செய்ய அல்ப புத்தியையுடைய எங்களுக்கு இயலுமோ? கிருபையினாலே அடியேங்கள் கண்களுக்குக் கோசரமாக தரிசனம் தந்தாய். உன்னை ஸ்தோத்திரம் செய்பவர்களது மனோவியாகூலங்கள் அப்பொழுதே

நாசமாய்விடுமென்று அநேக விதங்களாகச் சிலாகித்துக் கொண்டிருக்கிறவர்களைப்பார்த்து ஸரஸ்வதிதேவியானவள் ஓ திவிஜர்களே! பக்திவினயத்துடன் நீங்கள் வேண்டியவரங்களைக் கேளுங்களென்று சொல்ல, அந்த அசுரர்களெல்லாரும் சந்தோஷத்தையடைந்து ஓ தேவி! உன்னுடைய தெரிசனபலத்தால் யாங்கள் கிருதார்த்தரானோம். உன்னுடைய புகழுக்கு இப்பொழுது தீங்கு உண்டாயிருக்கிறது. அதைச்சகியாமல் உன்னுடன் சொல்லவந்தோம். அதாவது சதுராநனன் சத்யவிரதக்ஷேத்திரத்தில் யாகஞ்செய்யும் பொருட்டு சகலரையும் அங்கு அழைப்பித்தார் நாங்களும் அவ்விடம்சேர்ந்தோம். தர்மபத்தினியாகிய நீயில்லாமல் சாவித்திரியைப் பத்தினியாக வைத்துக்கொண்டு சதுர்முகன் ரிஷிகணங்களுடன் கூடி தீக்ஷிதனாய் யாகத்தைச் செய்கிறார். அதைப்பார்த்து நாங்கள் அதிககோபத்துடன் பிரதிகூலம் பண்ணும்படி உன்னிடம் வந்தோம். இப்படி உனக்குச் சதுராநனன் அபசாரம் செய்தார். இதற்குத்தக்க பிரதிக்கிரியை செய்யவேணுமென்று விஞ்ஞாபனம் பண்ணிக்கொண்டார்கள். அந்த வசனங்களைக்கேட்ட ஸரஸ்வதியானவள் அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு அதிக கோபத்துடன் சதுர்முகன் செய்யும் யாகத்தைப் பங்கஞ்செய்யும்பொருட்டு மகாநதி ரூபத்தைத்தரித்துக் கொண்டு அதிவேகத்துடன் சஹ்ய பர்வதத்தைவிட்டு வெளியில் புறப்பட்டாளென்று நாரத பகவான் சொல்லியருளினார்.

மூன்றாவது அத்தியாயம் சம்பூர்ணம்.

பிரம்மாண்ட புராணத்தில் ப்ருகு நாரதஸம்வாதத்தில்
ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் ஸரஸ்வதிதேவி
யாகசாலைக்குச் செல்லும்

நான்காவது அத்தியாயம்

நாரத பகவான் ப்ருகு மகாரிஷியைப் பார்த்துச் சொல்லுகிறார்:—ஓய் முனிவரனே! கேளும். இந்தப் பிரகாரம் சகிய பர்வத உத்திர பாகத்தை விட்டுப் புறப்பட்டு ஸரஸ்வதியானவள் அதி வேகத்துடன் ஸத்யவிரத க்ஷேத்திரத்தை அடையவேணுமென்கிற எண்ணத்தை யுடையவளாய் பூமியைக் கிழித்துக்கொண்டு மகா கோஷத்துடன் ஆகாயத்தை யளாவிய அலைகளால் வீசிக்கொண்டு ஸ்வர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்றுலகங்களும் நடுக்கத்தை யடையும்படி வரும் வழியிலுள்ள பர்வதங்களை யெல்லாம் வெள்ளப் பெருக்கினால் மறைத்துக்கொண்டு அலைகளாகிய புஜங்களினால் தள்ளிக்கொண்டு மீன்களாகிய கண்களை யுடையவளாய் நுரைகளாகிய புன்சிரிப்பினை யுடையவளாய் வண்டுகளால் அலங்கரிக்கப்பட்டவளாய் மதுரம் பொருந்திய அம்ஸத்வனிகளை யுடையவளாய் தாதுக்களாகிய சந்தனங்களால் பூசப்பட்டவளாய் சைவலங்களாகிய கூந்தல்களை யுடையவளாய் தீரவிருக்ஷசமுத்கிரண புஷ்ப பத்திரிகையாய் பெருஞ் சுழிகளாகிய நாபியை யுடையவளாய் மிகுந்து செல்லுகின்ற பர்வதங்களாகிய ஸ்தனங்களை யுடையவளாய்

நாயகன் சமீபத்துக்குச் செல்லுகின்ற குலமகள்போலும் கொழுத்தப்பட்ட அரணியத்தில் துஷ்ட ஜன ஸகவாசத்தை யடைந்த யோகி மனதைப்போல் கலக்கத்தை யடைந்துக்கொண்டும் ஸ்படிக சிலா சம்பந்த பிரதேசத்தில் விஷ்ணுபக்தியை அடைந்த யோகிகளின் மனம்போல் அதிக நிர்மலமாயும் கொஞ்சதூரம் நீலமேகம்போல் கருப்பு ஆகியும் சில தூரம் அக்னிபோல் பிரகாசித்துக்கொண்டும் சிலதூரம் அதி வேகத்தோடும் சிலதூரம் மந்தமாகியும் சிலதூரம் விசாலமாகியும் சிலதூரம் குறுகியும் சிலதூரம் மேற்றிசை நோக்கியும் சிலதூரம் கிழக்கிசை நோக்கியும் சமீபத்திலுள்ள மரங்களை வேருடன் பிடுங்கிக்கொண்டும் நகர கிராமவனங்களை முழுகடித்துக் கொண்டும் இந்தப்படி வேகத்துடன் அதி பயங்கரமாய் சதுர்முகன் யாகஞ் செய்துகொண்டிருக்கும் சத்ய விரத க்ஷேத்திரத்துச் சமீபத்தில் அரை யோசனை தூரம் விசாலமாய் அதி பயங்கரமாய் இரைச்சலிட்டுக்கொண்டு வரும்போது, அவ்விடத்திலிருந்தவர்களெல்லாரும் பயத்தை யடைந்து இதென்ன ஆச்சரியமென்று பிரமித்த சித்தர்களாய் யாகஞ் செய்துகொண்டிருக்கும் கமலாசனனுடைய சமீபத்தை யடைந்து ஓ கமலாசனா! ரக்ஷியும் ரக்ஷியும் பச்சிம சமுத்திரம் பூமியை முழுகடித்துக் கொண்டு வருகிறது. பிரளய காலம்போலே பொங்கி வருகிறது. [illegible] தெரியவில்லை. இந்த உபத்திரவத்தை நாங்கள் சகிக்க மாட்டோமென்று முறை[illegible] பிறகு அதிக நெருக்கமாகும்போது

[illegible]

யிருந்த பூமியை உத்தாரணம் பண்ணும் பொருட்டு வராக ரூபத்தை தரித்தவன் நீயே. மஹா வஜ்ராயுதம் போலிருக்கும் நகங்களினாலே இரண்யகசிபுவின் மார்பைப் பிளந்து பிரக்லாதனை ரக்ஷிக்கும்பொருட்டு நரசிம்ம ரூபத்தை யடைந்தவன் நீயே. சொர்க்கலோகத்துக்கு இம்சை செய்கிற ராக்ஷஸனை அதம் பண்ண மஹாபலியின் யாகசாலையைச் சேர்ந்து அவனை யாசித்து திரிலோகங்களையும் மூன்றடியாக் அளக்கும்படி வாமன ரூபத்தைத் தரித்தவன் நீயே. பரசுவாயுதத்தால் க்ஷத்திரிய குலத்தவரை சம்மரித்து அவர்களுடைய உதிரங்களினாலே பிதுரு தர்ப்பணம் செய்த பரசுராமனும் நீயே. லோகங்களை யெல்லாம் ஜெயித்து மத்தனாயிருக்கிற இராவணனை சம்ஹரிக்கும்பொருட்டு இராமாவதாரம் செய்தவன் நீயே. யது வம்சத்திற் பிறந்து கம்ஸாதிகளை நிர்மூலமாய் பண்ணின ஸ்ரீ கிருஷ்ண ரூபத்தை உடையவன் நீயே. ஜனங்களெல்லாம் நிஜ தர்மங்களை விட்டு பாஷாண்டியானவர்களைப் பார்த்து அதிக உக்கிரத்துடன் அவர்களை சம்மரித்த கல்கியும் நீயே. அப்படிப்பட்ட ரூபங்களை யடைந்திருக்கும் உனக்கு அனேகமான வந்தனங்களைப் பண்ணுகிறேன். உன்னைப் புகழ என் தரமாவென்று அனேக விதமாக வேண்டிக்கொண்ட சதுர்முகனுடைய ஸ்தோத்திரங்களுக்கிரங்கி கமலநாபன் அந்த யக்யசாலைக்கு மேற்றிசையில் ஆவிர்ப்பவித்து சங்கு சக்ரதரனும் நீலமேக நிறத்தானுமாய், மகாயோகிகளால் சூழப்பட்டவனுமாய் இலக்ஷ்மி சமேதனுமாய் வெண்மையான ஆயிரம் பணாமணியினையு

டைய அரவணையில், வருகிற நதிக்குக் குறுக்காய்ப் படுத்துக்கொண்டிருக்க, ஸரஸ்வதி நதி இரண்டு யோசனை தூரத்தில் நின்று பார்த்து இந்த மகா புருஷன் ஸர்வலோக நாதனான ஸ்ரீமந்நாராயணனே. இவன் சதுரானனுடைய யாக ஸம்ரக்ஷணைக்காக அணை போல என்னைக் குறுக்கே மறித்து படுத்துக்கொண்டிருக்கிறானென்றறிந்து, அம்மகா புருஷனைக்கண்டு நாணி அவனைக் கடந்து செல்ல சக்தியற்றவளாய் மனதில் ஆலோசித்துத் தன் வேகத்தை விட்டு யாகசாலைக்குப் போகமாட்டாமல் மேற்கு முகமாய்த் திரும்பி சிலதூரம் சென்று அவ்விடத்திலிருந்து அநேக முகங்களாய் பூர்வமுகமாய்ச் சமுத்திரத்தைச் சேர்ந்தாள். இப்படி தக்ஷிணோத்தர பாகங்களில் அந்த ஸரஸ்வதி நதி சக்தி, கனகை, நிருப வேகை, பிரவேகை, அஞ்சனை, சண்ட வேகை யென்று ஏழுவித நாமங்களை யடைந்தாள். இன்னும் அந்நதியானவள் வேகத்துடன் வந்தபடியால் வேகவதி யென்னும் பெயரினால் பிரசித்தி பெற்றாள். தவிர விஷ்ணுவினால் தடுக்கப்பட்டு இரண்டு யோசனை தூரத்திலிருந்து பூர்வ பக்ஷப் பிரவாகத்தாலே சாகரம் சேர்ந்தாள். இந்தப் பிரகாரம் அநேக விதங்களாக ஸரஸ்வதி நதியானவள் சமுத்திரத்தைச் சேர்ந்தனள். அப்போது ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் சயனித்துக் கொண்டிருக்கும் பிரதேசத்துக்கு ஸரஸ்வதி தேவி பரிசுத்தமான காத்திரதாரியாய் வந்து அந்த தேவ தேவனை ஸ்தோத்திரம் செய்து அவனெதிரிலிருக்கும் தீர்த்தத்தைச் சேர்ந்தாள். அந்த தீர்த்தம் குண்டின தீர்த்தமென்று

பிரசித்தியை அடைந்தது. அந்த தீர்த்தத்தில் யாராயினும் ஸ்நானம் செய்வார்களாயின் அவர்கள் ஜனனமரணத்தினின்றும் நீங்கி விஷ்ணு உலகத்தைச் சேருகிறார்கள். இப்படி யாகசாலைக்கு எவ்வித கெடுதியுமில்லாமற் போயிற்று. அப்போது தேவதைகளெல்லாரும் பிதாமகனைப் பார்த்து ஓ மகாத்மாவே! உன் பக்திக்கு மகிழ்ந்து விஷ்ணுதேவன் இந்த மகா ஜலபூரங்களெல்லாம் நிவர்த்தி செய்தார். விஷ்ணு பக்தியுடையவர்களாகிய யாவருக்கும் இவைகள் துர்லபமல்லவென்று புகழ்ந்தார்கள். இவைகளைக்கேட்டு சதுர்முகனானவர் சந்துஷ்டனாய் எழுந்திருந்து படுக்கையிலிருக்கும் மகாவிஷ்ணுவைச் சேவித்து அநேக விதங்களாக ஸ்துதித்து அசுவமேதயாகத்தைப் பண்ண ஆரம்பஞ்செய்தார்.

நான்காவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகுநாரதஸம்வாதத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் சதுர்முகனுக்கும் தேவதைகளுக்கும் நடந்த ஸம்வாத ரூபமான ஐந்தாவது அத்தியாயம்.

பிருகு மகாரிஷியானவர் நாரத பகவானைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓய் நாரதபகவானே! அப்படி வந்த சரஸ்வதி தேவியை திசைமுகக்கடவுள் எவ்வாறு அழைத்துக்கொண்டார்? பின்பு அந்த யாகத்தை யெப்படி பூர்த்திசெய்தார்? அவைகளைத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கவும், நாரதபகவான் சொல்லுகிறார். ஓய் முனீந்திரனே! கேளும். இந்த விதங்களாக வந்த சரஸ்வதிதேவியை முனீஸ்வரர்களெல்லாரும் பார்த்து பிதாமகனிடஞ்சென்று ஓ ஐயனே! நதிரூபமாக வந்திருக்கின்ற தேவரீரது தேவியை அழையும் இது தர்மமென்றார்கள். அதுகேட்ட பிதாமகன் மிகுந்த பிரீதியை யுடையவனாய் ஓ முனிசிரேஷ்டர்களே! என் பத்தினியாகிய அவள் பூர்வத்தில் நதிகளுக்கெல்லாம் ஆதிபத்தியத்தைத் தர வேண்டுமென்று கேட்டாள். அதை யப்போது கொடுத்தேன். நீங்கள் சென்று நல்ல வசனங்களைச்சொல்லி உபாயமாய் அந்த கலைமகளை அழைத்து வாருங்களென்று சொல்ல, அவர்களெல்லாரும் வேகவதி நதியின் உத்தரபாகத்தைச் சேர்ந்து அந்த பாரதியை அனேகவிதங்களாகத் துதித்தார்கள். அதற்கு அந்த அம்

மணியானவள் சந்தோஷத்தை அடைந்தவளாய் நதியின் மத்தியில் சுத்த வஸ்திர தாரணியாய் தொண்டையங்கனிபோன்ற வாயினையுடையவளாய் சர்வாபரண பூஷிதளாய் மனதினைக் கவரும் வனப்பினையுடையவளாய் திருப்பாற்கடலின் மத்தியிற்றோன்றி வருகின்ற ஸ்ரீ மகாலக்ஷ்மியைப் போல் அவர்களுக்கு முன்னே தோன்றினள். அவ்வாறு தோன்றிய அன்னையைக் கண்டு முனிவர்களெல்லாரும் அனேக விதங்களாகப் புகழ்ந்து அம்மணி! யாங்கள் உனக்கு அனேக வந்தனங்களைப் புரிகின்றோம்! நீ யாகசாலைக் கெழுந்தருள வேண்டும். உன் விருப்பத்தின்படி உனது பதியானவர் நதிகளின் ஆதிபத்தியத்தை இன்று உனக்குக் கொடுத்தார். இந்த சத்தியவிரத க்ஷேத்திரத்தில் புருஷோத்தமன் எப்பொழுதும் நீங்காமல் எழுந்தருளியிருப்பார். அவர் கிருபாகடாக்ஷத்தினால் உன்னைவிட அன்பினர் யாரும் இல்லை. ஆதலால் இந்த கிரியின் இருபக்கத்திலும் அனந்த தீர்த்தமென்றும், பிரம்ம தீர்த்தமென்றும், பொற்றாமரையென்றும், அக்னி தீர்த்தமென்றும், குசதீர்த்தமென்றும், ஐந்து தீர்த்தங்களுள்ளன. அவற்றுள் வாயுதிக்கில் அனந்த தீர்த்தமும், அதன் கிழக்கில் பிரம்ம தீர்த்தமும், அதன் கிழக்கில் பொற்றாமரையும், ஆக்னேயத்தில் ஆக்னேய தீர்த்தமும், வருணதிக்கில் குசதீர்த்தமும், பொலிவுற்று விளங்குகின்றன. பூர்வத்தில், பாகசாசனன் அனந்த தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணித் தேவர்களுக்குத் தலைவ

றுயினன். வஸுவானவன் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி ஞானத்தையடைந்தான். பொற்றாமரையின் விசேஷத்தினால் மதங்கன் முக்தியடைந்தான். ஆக்னேய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி அக்னிதேவன் விப்பிரசாபத்திலின்றும் நீங்கினன். குச தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி ரிபுவானவன் திரிகாலக்கியானத்தை யடைந்தான். எல்லா தீர்த்தங்களிலும் அனந்த தீர்த்தமானது மிகுந்த புனிதத்தை யுடையது. இந்த ஐந்து தீர்த்தங்களுக்கும் சமானமான ஆறுவது தீர்த்தமாக நீர் இருந்தருளவேண்டும். எந்த நாளிலும் இந்த வேகவதி தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் கங்காசாகரசங்கமத்தில் ஸ்நானம் பண்ணின பலனைக்காட்டிலும் ஆயிரமடங்கு அதிக பலனை அடைவான். யாராகிலும் இந்த தீர்த்தத்தில் ஒரு தடவையாகிலும் ஸ்நானஞ்செய்தால் ஸர்வபாபங்களினின்றும் நிவர்த்திக்கப்படுவார் என்று வசிஷ்டாதி முனிவர்கள் தெரிவித்தார்கள். அந்த வாக்கியங்களைக்கேட்ட சரஸ்வதி தேவியானவள் மிகுந்த அன்புடன் அவ்விடமிருந்து புறப்பட்டு யாகசாலையைச் சேர்ந்தாள். அப்பொழுது பங்கஜாசனன் சிரத்தையுடன் சாவித்திரி சமேதனாய் அஸ்வமேதத்தைப் பண்ணினார். ருத்விக்கள் பிரவர்க்கியாதிகர்மங்களை அநுசரித்தார்கள். அப்பொழுது சதுர்முகனானவர் சகல தேவமுனிமனுஷ்யாதிகளை வஸ்திராபரணங்களாலே பூஜித்து நாநாவித ஷட்ரஸோபேதங்களான அன்னங்களால் புசிப்பித்து தனதான்யங்களாலே சன்மானங்களைச் செய்தார். மற்றும் அண்பாலர் பெண்பாலர்,

சிறுவர்கள் முதலிய யாவரும் அன்புடன் பூஜிக்கப்பட்டார்கள். ருத்விக்களும், முனிவர்களும், தேவர்களும், நாநாவிதமான பூஜைகளை அடைந்தார்கள். இத்தனை சிறப்புகளோடும் நடந்த அஸ்வமேதயாகத்தில் அவரவர்களுடைய அதிகாரானு குணங்களுக்குத் தகுதியாகிய வஸ்திர தான்ய பூஷணாதிகளை யெய்தப்பெற்றார்கள். அன்னதானங்கள் எல்லாருக்கும் சமமாய் நடைபெற்றன. சர்வஜனங்களும் இந்த யாகமாகிய ஸத்கர்மத்தினால் பேரானந்தத்தை யடைந்தார்கள். அப்பொழுது ருத்விக்கள் முனிவர்கணங்களுடனே கூடி இஷ்டிகள் முதலான கர்மங்களைச் செய்தார்கள். எல்லா கர்மங்களும் விக்னங்களின்றி நடைபெற்றன. பிரதிதினங்களிலும் பிரவர்க்கியாதி கர்மங்களைச் செய்துகொண்டு வந்தார்கள். அப்பொழுது வேதங்களையுணர்ந்த மேலோர் யாவரும் ஒன்றாகக்கூடி இருபத்தொரு யூபஸ்தம்பங்களை வரிசையுடன் நாட்டி வஸ்திர புஷ்பாதிகளால் அர்ச்சித்து அக்கிரியையும் யாகசாலையையும் அலங்காரஞ்செய்து அக்னிஷ்டோமம் செய்து பதினொரு பசுக்களைக் கொண்டுவந்து அந்த யூபஸ்தம்பங்களில் கட்டி வேதவிதிப்படி அந்த பசுக்களுக்கு ஸ்நானம் செய்வித்து அவைகளை விசஸனம் செய்து அக்கினியில் ஹோமத்தைச்செய்தார்கள். நான்முகக்கடவுள் யக்ஞேச்வரனை வரதனை அந்த அக்னிமத்யத்திலிருப்பதாகத் தியானித்து அவன் சந்தோஷப்படும்படி எல்லாவற்றையும் அவனுக்கு நிவேதனம் செய்தார். பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன் அந்த பிரம்மன் செய்த நிவேதனாதிகளை ஏற்றுக்கொ

ண்டார். எந்தெந்த மந்திரத்தால் எந்தெந்த தேவதையை அழைக்கவேணுமோ அந்தந்த மந்திரத்தால் அந்தந்த தேவதைகளை அழைத்து அவர்களுக்குச் சேரவேண்டிய அவிர்ப்பாகங்களைக் கொடுத்தபோதிலும் அவைகளை யெல்லாம் ஸர்வாத்மாக்களிடத்திலும் வியாபகமா யிருக்கின்ற பகவான் அன்புடனே ஏற்று உட்கொண்டார். அப்பொழுது அமரர்கள் எல்லாரும் தங்கள் தங்களுக்குச் சேரவேண்டிய அவிர்ப்பாகங்களை அடையாமல், என்ன காரணத்தினால் இந்த பங்கஜாசனக்கடவுளானவர் நமக்குச் சேரவேண்டிய அவிர்ப்பாகத்தை கொடாமற் போனாரென்று மிகுந்த கோபங்கொண்டவர்களாய் எழுந்திருந்து யஜமானனை பத்மஸம்பவனைப் பார்த்து ஓ நான்முகனே! எங்களுக்கு வரவேண்டிய யாகபாகங்கள் யாது காரணத்தால் எங்களுக்கு வரவில்லையென்று கேட்க, அப்போது கமலாசனன் ஆச்சரியமடைந்து ஒரு க்ஷணகாலம் யோசித்துத் தன் மனதில் பகவானைத் தியானம் செய்துக்கொண்டு சொல்லுகிறார். ஓ தேவதைகளே! உங்களுக்குச் சேரவேண்டிய யாகபாகங்கள் உங்களுக்கு வராமலிருக்கிற காரணங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள். உலகத்தில் கர்மங்களை விரும்புகிறவர்களெல்லாரும் உங்களுக்காக யாகத்தைச் செய்யமாட்டார்கள். சமுசாரமாகிய கடலைத்தாண்ட விரும்பியவர்கள் ஸ்ரீ வைகுண்ட வாசனாகிய ஸ்ரீமன்நாராயணனைக் குறித்துயாகஞ்செய்வார்கள். ஆகையால் நான் உங்களுக்காக யாகத்தைச் செய்யவில்லை, ஜகந்நாதனை அந்த கருடத்வஜனைக் குறித்து யாகத்

தைச் செய்தேன். ஸர்வலோகங்களுக்கும் ஆதாரம் அவனே. அவ்வுலகங்களில் உள்ள ஆன்மகோடிகளை சிருஷ்டிப்பவனும் அவைகளை இரக்ஷிப்பவனும் அந்த கேசவமூர்த்தியே. இந்த யாகமாகிய அற்புதம் வாய்ந்த ஸத்கருமத்திற்கு உங்களையெல்லாம் யான் அழைத்தேன். எப்படிப்பட்டவனுக்கும் அருமையான தேவதரிசனம் உங்களுக்கு இங்கு கிடைக்கும். உலகத்தில் ஸ்வர்க்கங்களை அடைய விரும்புகிறவர்கள் செய்யும் யாகத்தில் அவிர்பாகத்தை ஸ்ரீமன்நாராயணன் உங்கள் முகத்தால் புசிப்பார். மோக்ஷத்தையடைய விரும்புகிறவர்கள் செய்யும் யாகத்தில் தானே புசிப்பார். எல்லாருக்கும் பலத்தைக் கொடுப்பவன் அந்த குதரனே. அப்படிப்பட்ட பகவானுக்கு ஸ்தூல சூக்ஷ்மபேதத்தால் இரண்டுருபமுண்டு. ஸ்தூலரூபமானது ஸ்வர்க்காதி போகங்களைக்கொடுக்கும். காமெல்லாம் அந்தஸ்தூலரூபமே. சூக்ஷ்மரூபமானது மோக்ஷத்தைக் கொடுக்கும். ஸ்ரீவத்ஸலாஞ்சிதனுயுள்ள உலகங்களினுடைய கிரியைகள் சம்சார பலத்தைக்கொடுப்பதென்றும் மோக்ஷபலத்தைக் கொடுப்பதென்றும், இரண்டு விதங்களாக இருக்கும். அதில், உங்களைக்குறித்துச் செய்யும் கர்மங்கள் சமுசாரபலனைத் தருகின்றது. ஸ்ரீமன்நாராயணனைக் குறித்துச் செய்யும் கர்மங்கள் மோக்ஷத்தைத் தருகின்றது. மனிதர்கள் அறிவில்லாதவர்களாய் காமாதிகளை யபேக்ஷித்து யாகங்களையும் தானங்களையும் செய்தால், அவர்களுக்கு ஸ்வர்க்காதி போகங்கள் உண்டாகின்றது. அந்த போகங்களைக் கொடுப்பவனும் அவனே.

அநிககாமமில்லாமல் அறிவுடன் எப்படிப்பட்ட
கர்மங்களைச் செய்தாலும் அது மோக்ஷத்தைக் கொ
டுக்கும். அந்த மோக்ஷத்தைக் கொடுப்பவனும் ஸ்ரீ
வைகுண்டவாசனே என்று பிரம்மாவானவர் சொல்ல,
தேவர்கள் கேட்டு ஓ கமலாசனா! ஒரு கிரியை ஸ்வர்க்க
போகத்தைக் கொடுக்குமென்றும் மற்றொரு கிரியை
மோக்ஷத்தைக் கொடுக்குமென்றும் சொல்லுகிறீர்.
அது எப்படிக் கொடுக்கும்? அது எங்களுக்கு மிரு
ந்த சந்தேகத்தைத் தருகின்றது. ஆகலால் அதனை
நிவர்த்திசெய்தருளவேண்டுமென்று தேவர்கள் வே
ண்ட, கமலாசனன் சொல்லுகிறார். ஓ தேவர்களே! அஞ்
ஞானமான உங்கள் சமுசயத்தை ஒழிக்க சுருக்கமா
ய்த் தெரிவிக்கிறேன் கேளுங்கள். வித்தியாவித்தியை
களென்னுமிரண்டும் மோக்ஷபோகங்களைத் தராநிற்
கும். அவைகளில் வித்தியையானது ஞானரூபமாயிரு
க்கும். அவித்தியையானது கரும ரூபமாயிருக்கும்.
இந்த இரண்டில் ஒரு பேதமுண்டு. அதாவது ஞான
ரூபமாயிருக்கும் வித்தியையோடு சேர்ந்து செய்
யும் கர்மங்களானது மோக்ஷத்தைத் தருகின்றது.
அந்த கர்மங்களையே அவித்தியையுடன் சேர்ந்து
செய்தால் போகங்களைத் தருகின்றது. அவித்தியை
யானது கவுணமென்றும் முக்கியமென்றும் இரண்டு
விதமாக இருக்கும். அதில் கவுணமானது முக்தி
யைக் கொடுக்கும். முக்கியமானது ஸ்வர்க்க போகத்
தைக் கொடுக்கும். வித்தியையானது அவித்தியையுட
ன் கூடிநின்றால் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாது.
அவித்தியையானது சனமான பலனைக்கொடுக்கும்.

வித்தியையானது மோக்ஷத்தைக்கொடுக்கும். ஞான
முடையவனும் அசுவமேதத்தைப் பண்ணினவன் முக்
தியை அடைகிறான். இதில் யாதொரு சந்தேகமும்
கிடையாது. விஷ்ணுவினிடத்தில் பக்தியுடையவ
னுக்கு அசுபம் உண்டாகமாட்டாது; சமுசாரபந்தங்
களினின்றும் விலகி அஞ்ஞானத்துடன் கூடினவன்
மூடன். விஷ்ணுதேவன் சமஸ்த பூதங்களுக்கும்
அதீசுவரன். சர்வலோகங்களுக்கும் காரணமாயிருப்
பவன். அவனாலே சராசராத்மகமாயிருக்கும். இந்த
ஜகத்தெல்லாம் சிருஷ்டி ஸ்திதி சம்மாரங்களை அடை
யைப்பெறும். அவைகள் அவனுக்கு லீலையாயிருக்கு
ம். சமுத்திரத்தில் அலைகள் நுரைகள் முதலிய யாவும்
எப்படி உண்டாகின்றனவோ அப்படி அந்த விஷ்ணு
தேவனாலே சகலரும் உண்டாவார்கள். சிலந்தியின்
செய்கையைப்போல் சர்வாத்மாக்களும் அந்த கேச
வமூர்த்தியால் சிருஷ்டி ஸ்திதி சம்மாரத்தை அடை
யும். அவனாலே சர்வமும் வியாபிக்கப்பட்டிருக்கும்.
சர்வமும் அவனே. அவனில்லாமல் ஒன்றுமே கிடை
யாது. சகலதேவதைகளும் பரப்பிரம்மாவும் அவனு
டைய மாயையை உடையவர்கள். அவன் சத்தியஸ்வ
ரூபன், நிற்குணன், அவ்யயன், அமிர்தஸ்வரூபன், சாந்
தன், நிராதரன், ஆதிமத்தியாந்தரகிதன், சிவன், பர
மாத்மா, கர்த்தா, ரக்ஷிப்பவன். அவ்விய கவ்வியங்கள்
முதலான கர்மங்களுக்கும் பலன்களுக்கும் அவ்விய
வாஹன் அவனே என்னும் ஞானத்தையுடையவன்
முக்தனாவான். விஷ்ணுதேவனைக் குறித்துச் செய்யும்
கர்மங்கள் ஞான சம்பந்தமாய் மோக்ஷத்தைக் கொடு

க்கும். உங்களைக் குறித்துச் செய்யும் கர்மங்கள் ஸ்வர்க்காதி போகங்களைக் கொடுக்கும். ஆகையால் அந்த தேவதைப்ரார்த்த உபேக்ஷித்து இந்த அஸ்வமேதத்தைப் பண்ணினேன். நீங்கள் துக்கத்தை அடையவேண்டாம். அகங்காரத்தை விடுங்கள். ரஜோகுண சம்பந்தமான அந்த அகங்காரம் ஸர்வபாபங்களுக்கும் காரணமாகவிருக்கும். அதினுடன் கூடின அந்த ஆத்மன் குருக்களையும் கொல்லுவன். அஞ்ஞான சம்பந்தமான ஆத்மஞானமில்லாதவர்களுக்கு நானென்கின்ற புத்தியுண்டாகும். அதுவே அகங்காரம். மனிதன் அந்த அகங்காரத்துடன் கூடி சிரேஷ்ட மனைவாதிகளோ ரிஷாயுதனாய் வைத்தவாரங்களில் உடையவனாய் அவித்தியனாய் அசுசிய அக்கிரமத்தாக்கிராந்தனுமிருந்து துன்பங்களுக்கு பாத்திரனாய் மகா வியாதியையுடையவனாய் பஞ்சபூதமயமான தேகத்தின்மேல் மமதையடைந்து அதற்காக அநேக பாபங்களைச் செய்வான். மிகவும் சகிக்கக்கூடாத பாபகாரணமாயிருக்கின்ற அந்த அகங்காரத்தை விடுகிறவர்களல்லது அத்துடன் கூடினவனுடைய மனதானது துக்கத்தை உடைத்தாயிருக்கும். என்றைக்கும் அவனுக்கு சந்தோஷமே கிடையாது. ஆகையால் நீங்கள் சகஜசத்துருவாய் சங்கடங்களுக்குக் காரணமான அகங்காரங்களை விடுங்கள். அதனாலே காமக்குரோத லோபமோக மத மாத்சரியாதிகள் அடங்கி உங்களுக்கெல்லாம் சுகங்களுண்டாகுமென்று பிரம்மதேவன் தேவதைகளுக்குச் சொல்லியருளினர்.

ஐந்தாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில்
அகங்கார ஸ்வரூப நிரூபகமான
ஆறாவது அத்தியாயம்.

நாரத பகவான் பிருகு மஹா முனியைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓ பிருகு முனியே! கேளும். தேவதைகளெல்லாரும் கமலாசனனால் தெரிவிக்கப்பட்டு பிரசன்ன சித்தாளாய் அகங்காரத்தை ஜயிக்க அபேக்ஷித்து மறுபடியும் நான்முகனைப்பார்த்துச் சொல்லுகிறார்கள். ஓ மகாத்மாவே! துஸ்தரமான அகங்காரத்தை யெப்படி ஜயிக்கலாம்? அதைத் தெரிவித்தருளவேண்டுமென்று தேவர்கள் வேண்ட, சதுர்முகன் சொல்லுகிறார். ஓ தேவர்களே! கேளுங்கள் குணத்திரையாத்மகமாய் விஸ்வஜனகமான பிரதானமாய் மாயாமகத்தென்று சொல்லப்பட்ட புத்தியானது சாத்விக ராஜஸ தாமதமென்று சொல்லப்பட்ட மூன்று குணங்களை யுடையதாயிருக்கும். அந்த புத்தியினின்றும் பூதாதியென அகங்காரமுண்டாயிற்று. அதினின்றும் சப்த ஸ்பரிஸரூப ரஸகந்தமென்னும் பஞ்சதன் மாத்திரைகளும் உண்டாயின. அவைகளினின்றும் ஸகல சராசர ஜந்து ஜாலங் கூடியிருக்கும் பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்று சொல்லப்பட்ட பஞ்சபூதங்களும் உண்டாயின. பின்னும் அந்த அகங்காரத்தினின்றும் ஏகாதசேந்திரியங்கள் உண்டா

யின. அவைகளின் பகுதியாவது மெய், வாய், கண், மூக்குச் செவியென்னும் ஞானேந்திரியங்களைந்தும் வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தமென்று சொல்லப்பட்ட கர்மேந்திரியங்களைந்தும் இதோடுகூட மனதும் சேர்ந்து பதினொன்றாயின. பிரகிருதி இருபத்திநான்கு தத்துவங்களையுடைத்தாயிருக்கும். இவைகளுடன் ஸர்வமும் கூடியிருக்கும் புருஷன் நிர்த்வந்தவன், நிஷ்களங்கன், நிஷ்பரிக்கிரகன், அதீந்திரியன், நிர்க்குணன். இருபத்தைந்து தத்வாத்மகனாய் மாயாவசிதனாய் நித்திரை பண்ணுகிறவனைப்போலிருப்பன். அவன் சின்மாத்திரன் ஆண், பெண், அலி அல்லவென்று அறிவீர்களாகவும். மனிதனானவன் ஜனன மரண விருத்தாப்பிய வியாதிகளால் பீடிக்கப் பட்டவனாய் குணமாயாவசமேதனாய் யந்திரத்தில் கட்டப்பட்ட பசுவைப்போல் சிந்தனை செய்துகொண்டு தன்னை மறந்து பிராகிருத துக்கங்களை அனுபவித்துக்கொண்டு இராகத்வேஷாதிகளுடன் கூடினவனாய் சரீர போஷண நிமித்தம் ஸ்மரணையில்லாமல் அனேக புண்ணிய பாபங்களைப் பண்ணிக்கொண்டு ஸ்வாதீன ரஹிதனாய் ஆதியாத்மிக துக்கங்களை அடைந்து விருப்பும் வெறுப்பும் உடையவனாய் அகங்காரத்தோடு கூடினவனாய் சமுசார பந்தத்தினால் இராப்பகல் பிறர்களுக்கு இம்சை செய்துகொண்டு அனேக துக்கங்களை அடைந்து வலையிலகப்பட்ட மச்சங்கள் போல பசுபுத்திர இராம க்ஷேத்திர பந்து மித்திராளிடங்களில் மமதை அடைந்து மிருகங்களைப்போல் நாலு பக்கங்களிலும் திரிந்துகொண்டும், தூங்கிக்கொண்

டும், விழித்துக்கொண்டும் புசித்துக்கொண்டுமிருக்கப் பட்டவன் தனிகனானாலும், நிர்த்தனிகனானாலும், பண்டிதனானாலும், பாமரனானாலும், ஸ்வபசாதிகளா லுண்டாகும் சுகமெல்லாம் துக்கமாகும். இதற்கு சந்தேகமில்லை. சரீரதாரிகள் ஸாத்விகரென்றும், ராஜஸரென்றும், தாமஸரென்றும் மூன்று விதங்களாக இருப்பார்கள். அதுகளில் ஞான சந்தோஷ விசுவாஸ ஸமேதராய் நித்தியாசாரங்களை யுடையவர்களாய், சாந்தரா யிருக்கிறவர்கள் ஸாத்விகர்கள். இராகத்வேஷ பயக்குரோத சோகாதிகளுடன் கூடி அகங்காரத்துடன் கூடினவர்கள் இராஜஸர்கள். அதர்மங்களைச் செய்துகொண்டு மூர்க்கராயும், வேதநிந்தராயும், மோஹாந்தகராயும் இருக்கிறவர்கள் [illegible]க்கத்தை விரும்புவார்கள். ஸாத்விகர்கள் மோக்ஷமார் விரும்புவார்கள். தாமஸர்கள் காமிகளாய் [illegible]கங்களை யனுடையவர்களாயு மிருப்பார்கள். சாத்வீகர்கள் நிஷ்காமிகளாய், பரிசுத்தராய், நியதர்களாய், ஞானயோக பரர்களாய், ஆசாரத்தை யுடையவர்களாயும் மௌனிகளாயும் சாந்தராயும், மிதாசனர்களாயும் ஸர்வபூத சமர்களாய் லோபடம்பங்களை விட்டு வருணாச்சிரம ஆசாரங்களை யுடையவர்களாய் இராகத்வேஷாதிகளை அடையாதவர்களாய் ஸர்வபூதங்களில் அனேக ரூபங்களுடனிருக்கும் பரமாத்மாவைப் பார்த்துக்கொண்டு ஸர்வபூத ராசிகளில் கருணையுடையவர்களாய் துக்கங்களை விஸர்ஜனஞ்செய்து சங்குசக்கர கதாகட்கசாரங்கதாரனான புருஷோத்தமனைத் தங்

கள் இருதய கமல மத்தியிலிருக்கும் ஸர்வ [illegible] ரக்ஷகனை அந்த தேவனைக் குறித்து யாகாதிகளைச் செய்துகொண்டு ஞானத்துடன் கூடிய பரிசுத்தமான மனதை யுடையவர்களாய் பக்தி விசுவாசங்களை யுடையவர்களாய் சுவதர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மங்களை ஆசரித்துக்கொண்டு ஸர்வதேவரூபனாய் ஸர்வாதாரகனான விஷ்ணுதேவனைக் குறித்து ஜபஹோமாதிகளைப் பண்ணிக்கொண்டு நிர்மலர்களாயிருந்துகொண்டு சலன மற்ற புத்தியுள்ளவர்களாய் காலங்களை சயிப்பித்து சரீராந்தத்தில் சூரிய துவாரத்தால் நியதாத்மகளாய் காமக் குரோதாதிகளை விட்டிருப்பார்கள். விஷ்ணு பக்தர்களானால் பரம பதத்துக்குப் போவார்கள். மறு ஜன்மம் எடுக்கமாட்டார்கள். ராஜஸர்கள் கர்மலாலஸனாய் அகங்காரதி டம்பார்த்த தங்கள் கர்மக்காதிகளை விரும்பி உங்களைக் குறித்து யக்ஞங்களைப் பண்ணி உங்களால் தரப்பட்ட ஸ்வர்க்காதி பலன்களை யடைந்து ஸ்வய மிச்சை யுடையவர்களாய் துர்மானிகளாயிருப்பார்கள்.

அவர்கள் ஸர்வ ஐச்வர்ய ரக்ஷகனாய் மோக்ஷத்தைக் கொடுப்பவனாய் பரமாத்மாவைப் பார்க்கத் தக்கவர்களல்லர்.

இன்னும் அவர்கள் பிதுருதேவர் ரிஷிகள் மனிதர் பூஜிக்கப்படாமல் வாசுதேவனுக்குச் சமானமாக எல்லா தேவதைகளும் சொல்லிக்கொண்டு விஷ்ணு தேவனைப் பூஜியாமல் காரிய பரனாயிருந்தால் முடி-

வில் பூமியாதி மார்க்கத்தாலே புண்ணிய லோக பலன்களை அடைந்து புண்ணியாந்தத்தில் மாயானுகுணராய் இயமபுரத்தில் அனேக பாதைகளை அடைந்து பிறகு பசு மனிதர்கள் யோனியில் ஜனித்து துன்ப சாகரத்தில் மூழ்கி ஒருக்காலும் சுகத்தை யடைய மாட்டார்கள். புண்ணிய பாபங்களை யியற்றி அவற்றிற்குத் தக்க இன்ப துன்பங்களை யனுபவித்தும் ஜனித்தும் மரித்தும் இந்திரியங்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு எப்பொழுதும் பந்த நிவர்த்தியானது உண்டாகமாட்டாது. தாமஸன் ஜடனாய் பசு ஸமானனாய் சௌச ஆசாரங்களை விட்டு சிசுனோதர பராயணனாய் அன்னபானாதி போகங்களால் மதித்தவனாய் விஷயாஸக்தனாய் துர்மதத்தால் வைதிகாசார நிந்தனைகளைப் புரிந்து மிருந்த வியாபகன் போலாடிக்கொண்டு ஜனன மரணாதிகளை அடைந்து கர்ப்பத்தில் வசிக்கும் காலங்களில் அனேக துன்பங்களை அனுபவித்து அவன் மரணகாலத்தி லடையுந் துன்பங்களோ அளவில்லாதவைகள். அதாவது அவன் மரணாந்தத்தில் சுவாசங்களடைக்கப்பட்டு உலர்ந்த நெஞ்சுள்ளவனாய் பாதைகளாலே கண்களில் ஜலத்தை விட்டு புத்திர மித்திர களத்திராதிகளை விட்டுப்போக முடியாமல் துன்பப்பட்டுக்கொண்டு அதி பயங்கரமான சூலமுத்கரதாரிகளான யமகிங்கரர்களாலே பீடிக்கப்பட்டவர்களாய் கரங்களையும் கால்களையும் பரப்பிக்கொண்டு கயிறுகளால் கட்டப்பட்டு சிலா மயங்களாயும் கண்டகமயங்களாயும் மேடு பள்ளங்களாயும் உள்ள வழியால் இருட்டில் பசி தாகத்துடன் சிம்மம்

புலி முதலான மிருகங்களாலே பக்ஷிக்கப்பட்டு அதி பயங்கர ரூபங்களான யமகிங்கரர்களாலே அனேக விதங்களாகப் பிடிக்கப்படுவார்கள். எந்த மனிதனானும் பரஸ்திரீகளை ஆசையுடன் பார்ப்பவன் கண்களை பக்ஷி முதலானதுகள் பிடுக்கும். யாவன் மிகுந்த பசியுடன் தன் வீட்டுக்கு வந்த அதிதிகளை கர்வத்தாலே நிராகரிப்பானோ அவன் முகத்தில் வஜ்ராயுதத்தினால் அடிக்கப்படுவான். யாவன் பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை யிடாமலிருப்பானோ அவன் கண்கள் அக்கினிக்கிரையாகும். பல ஆயுதங்களாலும் இம்சிக்கப்படுவான். எந்த மனிதனாயினும் பரத்திரவ்யங்களை அபகரித்துண்பானாயின் அவனை யமகிங்கரர்கள் கட்டியடிப்பார்கள். இன்னும் யாவனாயினும் ஆசாரியர்களையும் பசுக்களையும் ஆதரியாமலிருப்பானாயின் அவன் சூலங்களால் குத்தப்படுவான். இந்தப் பிரகாரம் அனேக துன்பங்களை யடைந்து அதி பயங்கரமான யம பட்டணம் சேர்ந்து அனேக துன்பங்களை யடைந்து தாங்கள் செய்த கர்மங்களை சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். நானந்த நரகபாதகங்களைச் சொல்லச் சமர்த்தனல்லேன்.

அப்படிப்பட்ட பாபங்களைச் செய்த ஜீவர்களுக்கு யமதரிசனம் அதிக பயங்கரமாயிருக்கும். யமகிங்கராள் அப்படிப்பட்ட பாபங்களைச் செய்தவர்களை குடாரமென்னும் ஆயுதத்தால் துண்டித்து உப்புச் சேற்றி லமிழ்த்தி மகாஜ்வாலையை யுடைய நெருப்புத் தணல்களில் புரட்டி கூர்மை பொருந்திய கத்திகளால்

வெட்டி சூல நுனிகளாலே குத்தி சிம்மம் புலி முதலானதுகளாலே பக்ஷிக்கும்படிச் செய்து அனேக விதங்களாகப் பிடிப்பார்கள். இப்படி அனேக துன்பங்களை யடைந்து பின்னும் பூலோகத்தில் அனேக யோனிகளில் அனேக விதங்களாகக் கருப்பத்தில் வருந்தி ஜனித்தும் மரித்தும் மறுபடியும் சண்டாளாதி ரூபங்களாகப் பிறந்து வேதத்தின் குரு முதலானவர்களை தூஷித்தவர்களாய் நாஸ்திகளாய் மரியாதைகளில்லாமல் மூர்க்கராய் துர்மானியாய் காமக்குரோதாதிகளில் மிகுந்த பற்றுடையவர்களாய் விருபராய் குலஹிம்சகராய் லஜ்ஜையில்லாதவராய் ஸ்நானாதி கர்மங்களை விட்டவர்களாய் அனேக காலங்களாக பிராமணருடைய பொருளை அபகரித்தவர்களாய் இப்படி அனேக காலங்களிலிருந்து பிறந்து மரித்தும் ஜனித்தும் சமுசாரசக்கரத்தில் சுழன்றுகொண்டிருப்பார்கள். அவனுக்கு கற்பகோடி காலங்களிலும் நிஷ்கிருதி கிடையாது. ஓ தேவதைகளே! குணபேதங்களாலே மனிதர்களிப்படி வேறுவேறுவினைகளைப் பண்ணிக்கொண்டிருப்பார்கள். ஸாத்விகர்கள் நிரகங்காரிகளாய் மாத்சரியங்களை விட்டு மோக்ஷ தர்ம பராயணர்களாவார்கள். ராஜஸர்கள் அகங்காரத்தை யுடையவர்களா யிருப்பார்கள். தாமஸர்கள் தாமஸங்களுடன் கூடினவர்களா யிருப்பார்கள். அகங்காரங்களெல்லாம் அனர்த்தங்களுக்கு மூலமாயிருக்கும். அதனுடன் கூடினவன் துன்பங்களுக்கு இருப்பிடமாய் அனித்யமான தேகத்தையே ஆத்மாவாக எண்ணி

மூடனாயிருப்பான். அவனுக்கு எந்த காலத்திலும் மோக்ஷம் கிடைக்கமாட்டாது. ஆகையால் சுஜனனானவன் அந்த அகங்காரத்தை யொழித்து துன்பமடையாமல் நிச்சல சித்தனாய் நித்தியமாய் பரந்தாமனான விஷ்ணுவைப் பூஜித்துக்கொண்டு தேகாந்தத்தில் பரம பதத்தை அடைவான். ஆகையால் நீங்களெல்லாரும் அகங்காரத்தை விட்டு அஸூயை இல்லாதவர்களாய் குரோதலோபங்களை விட்டு நான் செய்யும் இந்த அசுவமேத யாகத்தில் ஹரிபூஜையைப் பார்த்து பரம சந்தோஷத்தை யடையுங்களென்று சதுர்முகக் கடவுள் உபதேசித்த பிரகாரம் தேவர்கள் அகங்காரத்தை யொழித்து தோஷங்களில்லாதவர்களானார்கள்.

ஆறுவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்டபுராணத்தில் பிருகு நாரதஸம்வாதத்தில்
ஹஸ்திகிரிமஹாத்மியத்தில்
ஸ்ரீ பகவானுற்பத்தியாகின்ற

ஏழாவது அத்தியாயம்

நாரத பகவான் பிருகு மகாமுனியைப்பார்த்துச் சொல்லுகிறார். ஐய! முனீந்திரா! அந்த தேவதைகளெல்லாரும் பிதாமகன் வாக்கியத்தைக் கேட்டு சாந்தரா இருக்க முனிவர்களெல்லாரும் பிராதஸ்மன மென்கிற கிரியை மாத்யந்தினத்தை ஆன்னிக முதலான கர்மங்களைச் செய்து,

அசுவத்தை யூபத்தில் கட்டி அதை விசஸனம் பண்ணி மந்திர பூர்வமாக ஹோமங்களைச் செய்து அதின் லோகிதங்களை சிருதங்களை கிருப்தங்கள் முதலான ஆமிசங்களை ருத்விக்கெல்லாரும் முனிவர்களுடன் கூடி இருக் யஜுர் சாமம் என்னும் வேதங்களைக் கோஷிக்க த்வனிகள் பிரம்மாண்டங்களெல்லாம் நிறைந்தனகள். அதைக்கேட்டு திரிலோகங்களிலுள்ள ராக்ஷஸ பிசாசு முதலியவைகள் பயத்தை யடைந்து பலவழிகளாய் ஓடிவிட்டனகள். இத்தப்படி அந்த சதுர்முகனுடைய அசுவமேதமகாயாகமானது நடந்த வைபவங்களைக்கண்ட திரிலோகாதிபதிகளும் பேரானந்தத்தை யடைந்தார்கள். அப்போது வசிஷ்ட மகாமுனி யானவர் அந்த அசுவ வபயை ஹோமம்பண்ணினார். கமலாசனன் திம்மதியான

சித்தனைப் புருஷோத்தமனுக்கு அந்த வபையை நிவேதனம் பண்ணினார். அந்த அக்கினிக் கருகில் அஞ்சலியஸ்தனாய் நிமீலித லோசனனாய் மனதில் புண்டரிகாக்ஷனைத் தியானித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த அக்கினிதேவன் உத்தரவேதிகையில் பிரத்யக்ஷனார்ச்சியாய் விளங்கினார் அப்பொழுது யாவரும் மிகுந்த களிப்படைந்தார்கள். ஆகாசமானது மகாயோகிகளின் மனதைப்போல் நிர்மலமாயிருந்தது. திக்குகள் பிரகாசித்தன. வாயுதேவன் திவ்வியகந்தவாஹனாயிருந்துக்கொண்டு கந்தத்தை வீசினான். அப்பொழுது அந்த அக்கினி மத்தியத்திலிருந்து பிரகாசமாய் கோடி சூரியர்களுடைய மண்டலம்போல் ஓர் தேஜஸ்ஸு உண்டாயிற்று. அதைப்பார்த்து எல்லாரும் இதென்ன அதிசயமென்று ஆச்சரியத்தை அடைய, பரம ஏகாந்தி சமூகங்கள் புண்டரீகாக்ஷா! ஓ தேவதேவா! ஓ பிரணதார்த்திஹரா! ஓ ஜனார்த்தனா! ஓ வாசுதேவா! அடியேங்களுக்கெல்லாம் தேவரீரே கதி. இந்த உலகங்களெல்லாம் உம்மிடத்திலேயே அடங்கியிருக்கிறது. உமது வடிவினை யடியேமுக்குக் காட்டியருளக் கிருபா நேத்திரத்தினால் எங்களைப் பார்த்தருளமென்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அப்போது ஆகாயத்தில் துந்துபிகோஷங்களுண்டாயின. அப்போது அந்த உத்தரவேதிகையில் அக்கினி மத்தியினின்றுமொரு திவ்வியமான விமானம் வெளிப்பட்டது. அந்த விமான மத்தியில் ஸகல பூதாயப்பிரதானனாவும் நீலமேக சாமளரூபனனாவும் பூரணச்சந்திரனைப்பொத்த முகாரவிந்தத்தையுடையவனாகியும் திவ்ய மால்யம்

பரதாரியும் திவ்யகந்த தாரியுமான கிரீட கேயூரஹார முனிவர்கள் ஸேவிதனாயிருக்கும் பகவான் சுவர்ண முதலிய திவ்யாபரண பூஷிதனை ஸனகஸனந்தநாதி மயமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மியென்ன, மின்னலைப்போல் பிரகாசிக்கும் ஸ்ரீபூதேவி என்ன, இவர்களால் சேவிக்கப்பட்டிருப்பவனை சகலலோகத்தின் கண்ணுள்ளவர்களும் ஜயஜயவென்று கோஷிக்க பிரணதார்த்திஹரன் கிருபாகடாக்ஷத்தினால் அந்த சனாதனனைப்பார்த்து மேற்கு முகமாய் அந்த அவிசையப்புசித்துக்கொண்டு எழுந்தருளவும் அவரைப்பார்த்து தேவர்களெல்லாரும் புளகாங்கிதர்களாய் கிருதாஞ்சலியர்களாய்ப் பரம சந்தோஷத்துடன் இந்தப்பிரகாரம் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். ஓ! புராணபுருஷோத்தமா! தேவரீர் விசுவங்களுக்கு தேவன், விசுவ நிர்மாணத்தைப்பண்ணுகிறவன், விசுபாலகன், பராத்பரன், ஸர்வகாரணன், நிர்குணன், நிமலன், சாந்தன், நிரபேக்ஷன், நிராமயன், ஸர்வலோகநாதன், அனந்தன் ஆதிமத்தியாந்தரகிதன், உன்னிடத்தில் இந்த உலகங்களெல்லாம் உண்டாகும் விருத்தியடையும் உன் மகிமைகளை யெடுத்துக்கூற எங்கள் தரமல்ல. நாங்கள் அனன்னிய சரணர்களாய் உம்மைச்சரணடைந்தோம் பிரசன்னனாய் எங்களை ரக்ஷியும். ஓ! மகாத்மா பரமாணு ஸ்வரூபன். நித்தியன் பராத்பரனாய் லோககாரணனுமான உன்மாயையாலே பரமார்த்தத்தை யறியமாட்டாமல் எல்லாரும் அஞ்ஞானத்தையுடையவர்களாயிருப்பார்கள் மகாயோகிகள் பாபமனஸ்தத்தையும் நசித்து உன்னை வேண்டிக்கொண்டு

ருப்பவர்கள் உன்மாயையால் ஸ்தாவர சங்கமரூபமா
ன இந்தலோகங்களெல்லாம் நாமரூபங்களை யடையும்
பரமார்த்த விசாரணைச் செய்பவன் யாருமில்லை. ஸ்ரி
ஷ்டி, திதி, ஞானம், ஜயம், வேதங்கள் சாஸ்திரங்கள்
சகல புராணங்கள், இதிகாசங்கள் முதலிய யாவும்
நீயே. ஸ்தம்ப முதல் பிரம்ம பரியந்தம் இந்த லோக
மெல்லாம் நீயே தரித்துக்கொண்டிருப்பவன். உனக்
குச்சமான மானவர்கள் யாருமில்லை. இந்த உலகங்
களுக்கெல்லாம் ஆதி மத்தியம் அந்தம் சூத்திரத்தில்
கோர்க்கப்பட்ட மணிகளைப்போல இந்த உலகங்க
ளெல்லாம் உன்னிடத்திலேயே அடங்கியிருக்கிறது.
இந்த மகானுபாவனாகிய கமலாசனனும் யோகிக
ளாலும் அருமையாயிருக்கின்ற உன்னைப்பார்த்து கிரு
தார்த்தர்களானோம். இந்த பிதாமகனால் கொடுக்கப்
பட்ட அவியை அன்புடனேற்றாய். இவருடைய பாக்
கியத்தை யாங்களெவ்வளவு புகழ்வோம். எக்கிய
தபோதனாதி கர்மங்களாலும் காணக்கூடாத தேவரீர்
அடியேங்களுக்கு தரிசனத்தைத் தந்தீர் ஓ புண்டரீ
காக்ஷா! ஓ தேவ தேவா! சரணாகதங்களாகிய எங்
களை ரக்ஷியுமென்று தேவதைகளெல்லாரும் அந்த
வரதனுடைய பாதகமலங்களிற் சரணம் அடைந்தார்
கள். இப்படி கிருத யுகாதியில் ஜம்பூத்வீபத்தில்
தக்ஷிணபாகத்தில் பாரத வருஷத்தில் ஸத்தியவிரத
க்ஷேத்திரத்தில் சைத்ரமாச சுக்கில பக்ஷத்தில் ரவி
வாஸர ஹஸ்த நக்ஷத்திர யுக்த சதுர்த்தசி தினத்தில்
உத்தரவேதிகையில் வபா ஹோமத்தில் விஷ்ணுதேவன்
வரதனாய் ஆவிர்ப்பவித்தான். தேவர்களும் ரிஷிகளும்

மானுஷீயும் அந்த வேதியத்தியால் விமானத்துடன்
தோன்றிய பிரணதார்த்தீக வரதனைப்பார்த்து சந்தி
ரனைக்கண்ட சாகரம்போல் பேரானந்தத்தை யடைந்
தார்கள்.

ஏழாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகு நாரத ஸம்வாதத்தில் அஸ்தகிரி மஹாத்மியத்தில் பிரமஸ்தவ ரூபமான.

எட்டாவது அத்தியாயம்.

நாரத பகவான் பிருகு மகாரிஷியை நோக்கிச் சொல்லுகிறார். ஓ முனீந்திரரே! இப்படியாக எக்ஞவேதிகையில் பிரதிஷ்டா கலசத்தினில் ஆவிர்பவித்து கோடி சூரியகாந்திகளை யுடைத்தாய் நிர்மலனாய் சித்த கோசரனாய் சூரியசந்திரர்களைப்போலே சங்கு சக்கர கதாதாரியாய் பிரகாசிக்கிற கிரீடதாரியாய் இந்திர சாபரீதியாய் பிரகாசித்துக்கொண்டு இரண்டு புருவங்களை யுடைத்தானதாய் கொண்டு இந்திர நீல சமானமாய் நெற்றியில் பிரகாசிக்கிற திலகத்தை யுடைத்தானதாயும் உதார சிதாவதம்சனாய் லலாட சஞ்சலாலக விபாசமானனாய் காஞ்சனமாகு பந்தனத்தை உடைத்தாய் சுவர்ண மயமான இரண்டு நூபுரங்களை யுடையவனாய் பங்கஜங்கள் போல பாதங்களை யுடையவனாய் விபக்தகுல்பங்களையுடையவனாய் ஸ்மிதவக்த்ர சோபிதாதரனாய் பங்கஜ விசாலலோசனனாய் சௌபாக்கிய கபோலங்களை யுடையவனாய் சுநாசிகாதரனாய் மகா புஜங்களை யுடையவனாய் சர்வாங்க சுந்தரனாய் அதசி புஷ்பசமான பாகர சரீரத்தை யுடைத்தானவனாயிருக்கும் ஸ்ரீ ஹரியைப்பார்த்து சதுர்முகன் ஆனந்தாப்புதியில் நிமஜ்ஜனனாய் கிருத்தியாகிருத்திய

ங்களைத்தெரிந்து கொள்ளமாட்டாமல் கொஞ்சகாலமிருந்து திரும்பியும் எழுந்திருந்து கீர்த்தனங்கள் செய்துக்கொண்டிருக்க, ருத்திரன் வந்து அந்த வரத்தைப் பார்த்து ஆனந்த பூரணமான மனதை யுடையவனாய் மிகவும் ஆனந்தப் பட்டுக்கொண்டிருக்கிற பிரமதேவன் அந்த சந்திர சேகரனுடன் கூடி விஷ்ணு தேவனுக்கு பிரதக்ஷணமாய் நமஸ்காரம் பண்ணி புஷ்பங்களை மேலே யிறைத்துகொண்டு கரங்களால் சரீரங்களை யெல்லாம் துடைத்துகொண்டு பிரியமாய் காடாலிங்கனம் பண்ணி உச்சிமோந்து பிரதக்ஷணம் பண்ணி பாதங்களில் விழுந்து அனேக விதமாய் ஸ்தோத்திரங்கள் செய்து பக்தாஞ்சலி யுடையவனாய் பிரசன்ன மானசனாய் இவ்விதமாய்த் தவஞ் செய்தார்கள். ஓ தேவதேவா! ஓ பிராணதாரத்திஹரா! மனோவாக்குகளுக்கு அகோசரமான நீ எங்கள் கண்களுக்கு விஷயமானாய். ஆகையால் நான் கிருதார்த்தனானேன். நீ ஆதி மத்தியாந்தரஹிதன் அஜன், பரமபதசொரூபன், அக்ஷரன், சிவன், நிற்குணன், பரஞ்சோதி, ஆத்மக்கியானமயன், அணுரூபன், மகத்சுசொரூபன், பராத்பரன், காரண காரணன், நிராசன், அக்கினி தப்தங்களாயிருக்கும் பயங்கரலிங்கங்கள் ஸர்வத்திரம் பிரகாசிப்பது போல ஜீவகோடிகளெல்லாரும் சகல ரஜஸ்தமோ குண சகிதங்களாய் உன்னிடத்தில் லீனமாய் பிரகாசித்து கொண்டிருக்கிறதுகள். நீயாகபதி யாகபோகத்தர் நீ யாக பலதன், நீ அகில லோகங்களுக்கெல்லாம் காரணபூதன், நீ கியானஸ்வரூபன், குணாதிகன், ஸத்ஸ்வரூபன், நிரஸ்தசோசன

னாலே ஆகாசரூபனாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உன்னை நானடுத்தேன். மேகங்கள் பர்வத குஹாந்தரங்களில் வர்ஷித்த ஜலமானது சமுத்திரத்தைச் சேருவதுபோல எவ்விடத்தில் ஓமம் பண்ணுகிறதும் உன்னைச் சேரும். உன் மாயையால் இந்த லோகங்களெல்லாம் உண்டாகும், விருத்தியை அடையும், லயிக்கும், இந்த லோகங்களுக்கெல்லாம் ஈஸ்வரன், குரு, நீ சர்வத்திர வியாபித்திருப்பவன். இருதய புண்டரீக மத்தியத்தில் இருப்பவன். உன்னை எப்படி நேத்திரங்களினாலே பார்க்கக்கூடும். நீ அசிந்திய ரூபன், அவ்வியயன், நிர்மயன், அப்பிரமேயன், விகார ரஹிதன், பிருத்திக்கு பரனாயிருப்பவன், விஸ்வரூபன், அதிர்ச்சியன், அக்ஷுவதியன், அகோத்திரன், பராத்பரன். அஜன், சிவனைப் பிரகாசிப்பவனான உன் பிரபாவங்கள் புவனதிரித்தங்கள் உன் ரூபங்கள் சாங்கிய யோகிகள் தெரிந்துகொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் தெரிந்துகொள்ள முடியுமா? சராசரங்கள், மனுஷர்கள், சர்ப்பங்கள், சைலங்கள், நதிகள், சமுத்திரங்கள், பிசாச யக்ஷ ராக்ஷஸ கணங்கள், தாரகங்கள், சா விருக்ஷங்கள், மேகங்கள், பூமி, வாயு, ஜலம் அஷ்டதிக்குப்பாலகர்கள், திக்கஜங்கள், குலாசல பர்வதம் முதலானதுகள் சர்வமும் உன் ரூபங்கள். உன் சங்கல்ப மாத்திரத்தினாலே உண்டாகும் லயிக்கும் ஜன்ம ஜராதி துன்பங்களெல்லாம் விட்டு நிர்வாணத்தை அபேக்ஷிப்பார்கள், உன்னை சரணமடைவார்கள் அனேக ஜன்மங்களில் செய்த புண்ணிய பாபங்களினாலே ஒரு சமயத்திலாகிலும் என் சித்தமானது உன்

னிடத்தில் நிற்காது. நிருத்த கீதவாதி போகாதிகளாலே உன்னை அறிய அசக்தியமான போதிலும் என்னிடத்தில் கருணையாமல் அனேக தினங்களுக்கு என் கண்களுக்கு விஷயமானாய். ஜனங்கள் ஆசரிக்கும் கர்மங்களெல்லாம் பாபங்களுக்கு காரணங்களாகும். துன்ப ஜலங்களுண்டாய் பயசோகாதி பூர்ணமாய் பிரியாபிரிய ரசாதி கரடமான சம்சார சமுத்திரத்தில் முழுகியிருக்கும் என்னை உத்தரியும். க்ஷேத்திர மித்திர தனங்கள் புத்திர தார பசு கிரஹங்களெல்லாம் உன் சரண பக்தி பரிதனாவனுக்கு பிரதிகூலமான அஞ்ஞான மோஹாந்தர தமோ தூஷிதர்கள் உன்னை அறியமாட்டார்கள். ஜன்ம ஜரா பய துன்பங்களில் முழுகி யிருக்கிறவர்களுக்கும் கதி நீயே. எனக்கு தாயார் தகப்பனார் பந்து சர்வமும் நீயே. எனக்கு எப்பவும் உன் பாத கமலங்களில் நிச்சலமாக பக்தியையும் உன்னை பார்க்கும்படியான திருஷ்டியையும் உன்னுடைய நாமங்களை சங்கீர்த்தனஞ் செய்யும்படியான வாக்கும் பாட வசனையும் கொடுத்து ரக்ஷியும். மாயா மோஹிதனாய் கிருத்தியா கிருத்தியங்களையும் ஹிதாஹிதங்களையும் தெரிந்துகொள்ள அசக்தனாயிருக்கிற நான் உன் பாதகமல தரிசனத்தில் மோக மில்லாதவனாய் உன்னை சரணமடைந்தேன். எனக்கு நீயே கதி. நான் அனேக ஜன்மங்களில் பண்ணிய பாபங்களை எண்ண முடியாது. அதுகளையெல்லாம் நீயே அறிவாய். நான் பூர்வத்தில் உன் நாபி கமலத்தில் உண்டானவன். உன்னை ஸ்தோத்திரஞ் செய்ய என்னால் தரமல்ல. தேஜோ வீரிய பலா

திக மூர்த்தியைப் பரஞ்சோதியான உன்னை சரணமடைந்தேன். என்பேரில் கிருபைசெய்யும் என்று இப்படி பரிபூரண மனோரதனைப் கொண்டு புரோவர்த்தியாய் நிர்க தோஷியாய் பக்தர்களுக்கு சுலபனாய், அநகனைப், அச்சுதனை, அஜனும் ஹிரண்யனாயிருக்கும் புருஷோத்தமன் பாத கமலங்கள் பேரில் விழுந்து கமலாசனன் ஸ்தோத்திரஞ் செய்தான்.

எட்டாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகு நாரத சம்வாதத்தில் ஹஸ்தகிரி மகாத்மியத்தில் கமலாசனனுடைய அஸ்வமேதயாகத்தின் பிருதஸ்னான கதாரூபமான

ஒன்பதாவது அத்தியாயம்

நாரதபகவானானவர் பிருகு மகாமுனியைப் பார்த்து இந்தப்படி சொன்னார். அப்பொழுது சதுர்முகனுக்கு மகாவிஷ்ணுவானவர் பிரசன்னமாகவே மேக கம்பீரசப்தத்துடன் இந்தப்படி சொன்னார். ஓ கமலாசனா! எழுந்திரும், எழுந்திரும். வெகுகாலமாய் நீ பண்ணின தபசுக்கும் அஸ்வமேதயாகத்துக்கும் உன் பக்திக்கும், நீ பண்ணின ஸ்தோத்திரத்துக்கும் சந்துஷ்டனாய் என் ரூபத்தை உனக்குக் காண்பித்தேன். இந்த ரூபத்தை சகல தேவதைகள், மகாயோகிகள், எக்கிய தான தபோ ஹோமாதிகளையும் செய்தவர்களும் பார்க்கமுடியாது. அனன்னியனாயிருக்கும் யென்னிடத்தில் பக்தியை உடைத்தாயிருக்கும் பிரம்மவாதிகளும், இந்த ரூபத்தை பார்க்கத் தக்கவர்களல்ல. உனக்கு என்னிடத்தில் அனன்னியமான பக்தி இருக்கிறது. ஆகையால் உன்னிடத்தில் பிரீதியினாலே நீ செய்த அபிஸ்ஸைகளை பூர்த்திக்கவே வியக்த ரூபத்தை அடைந்து வந்தேன். இந்த திவ்விய விமானமானது புண்ணியகோடி என்கிற பெயரை உடையது. இதைப்பார்க்க மகாயோகிகளுக்கும் கிடைக்காது. சகல பாபங்களையும் நாசப்பண்ணும்

உன்னிடத்தில் மகா விசுவாசத்தாலே இந்த விமா
னத்தைக் காட்டினேன். இந்த விமானத்தின் மத்தியி
லிருக்கும் என்னைப் பார்ப்பவர்கள் பிரம்ம ஹத்தி
யாதி பாவங்களில் நின்றும் விடுபடுவார்கள். இவ்
விடத்தில் என்னைக் குறித்து யாகாதிகளைப்பண்ணின
வர்களுக்கும் பிரீதனாவேன். உனக்குச் சமானமான
பக்தன் எனக்கு யாருமில்லை. நீ அபேக்ஷித்த வரங்
களெல்லாம் கொடுப்பேன் சேனும். இதற்குச் சந்தே
கங் கிடையாது. என்று பிரீதனாய்ச் சொல்லிக்கொண்
டிருக்கும் விஷ்ணுதேவனைப் பார்த்து கமலாசனன்
சேவித்து வணங்கி இந்தப்படிச் சொன்னார். ஓ தேவ
தேவா! உன் அநுக்கிரகத்தினாலே எனக்கு எல்லாம்
பரிபூரணமாயிருக்கிறது. உன்னுடைய தரிசனத்
தைக் காட்டியும் அபேக்ஷிக்கத்தக்க வரம் ஒன்று
மில்லை. நான் அனேக காலமாய் திவ்வியமான உன்
ரூபத்தைப்பார்க்க அபேக்ஷித்து இருந்தேன். அந்த
ரூபத்தைப் பார்க்கயிப்பொழுது சமயம் நேரிட்டது.
ஜிதேந்திரியாளான மகா யோகிகளாலே பிரார்த்திக்க
உன்னுடைய பாவங்களை அநுபாசமாகவே நான் பார்
த்தேன். சர்வபூததயாளுங்களும் உத்கிருஷ்டமான தப
சை செய்கிறவர்களும், யாகங்களைச்செய்கிறவர்களும்,
பிராணாயாமபரர்களும், சகல தீர்த்த சேவகர்களும்,
நியதாசாரர்களும் கந்த புஷ்பாதிகளாலே நித்தியம்
உன்னை பூஜிக்கிறவர்களும், பூத நூரேதர்களும், ஜிதே
ந்திரியர்களும், பரிக்கிரஹ பராங்முகர்களும், தபோ
ஹோம ஸ்வாத்தியாயபரர்களும் இவர்களெல்லோ
ரும் உம்மைப்பார்க்க அபேக்ஷிப்பார்கள். உம்மைப்

பார்க்க தேவேந்திரன் இதோ வந்திருக்கிறான். எல்
லாருக்கும் துர்லபமாய் சவும்பியமாயிருக்கிற உன்
ரூபத்தைப் பார்த்தேன். என் தபசு ஈடேறிற்று.
நிறைவேறிற்று. சொற்பனத்திலேயாகிலும் இப்ப
டிப்பட்ட ரூபத்தை ஒருநாளும் பார்க்கவில்லை.
ஓ புண்டரீகாக்ஷா! ஓ சதுர்புஜா! உன் தரிசனத்தைக்
காட்டியும் மற்றொரு வரத்தையும் கோரமாட்டேன்.
ஆனால் உன்னை அபேக்ஷிக்கிறேன். என்னிடத்தில்
அநுக்கிரகத்தினாலே கேழ்க்கவேணும். திவ்வியமான
இந்த ரூபத்தோடே சர்வலோக ஹிதமாய் தேவதி
ரீபமனுஷியாதிகளுக்கும் பிரத்தியக்ஷ கோசரனாய்
சகலபூத பயப்பிரதனாய் வரதனென்னும் பிரசித்தனாய்
இந்த சத்திய விரத க்ஷேத்திரத்தில் இந்த ஹஸ்தி
சைலத்தின்பேரில் இந்த புண்ணிய கோடி விமானத்
தோடே வைகுண்டத்திலும், திருப்பாற் கடலிலும்,
இருக்கும் விதமாய் இரும். தேவதைகளெல்லாரும்
உம்மை சேவித்துக்கொண்டிருப்பார்கள். மனிதர்க
ளெல்லாரும் உம்மை சேவித்து கிருதார்த்தர்களாவார்
கள் என்று வேண்டிக்கொண்டிருக்க, வரதன் பிரசன்
னமாய் கமலாசனனைப் பார்த்து இப்படிச் சொன்னார்.
ஓ பத்மாசனா! நீ கேட்டபடி வரத்தைக்கொடுத்தேன்,
உன்னிடத்தில் பிரீதியாலே இவ்விடத்தில் அபிவியக்
த விக்கிரஹமனாய் எவன் யென்னைக்கேட்டாலும் அதுக
ளெல்லாம் கொடுத்துக்கொண்டு சர்வலோகங்களாலே
பூஜிக்கப்பட்டவனாய் கொண்டிருக்கிறேன் எவர்
கள் சிரத்தை பக்தியுடன் என்னை பூஜிப்பார்
களோ அவர்கள் எல்லா அபேக்ஷைகளையும் அடை

வார்கள். ஜனங்கள் தார்மிகர்களானாலும் அதார்
மிகர்களானாலும் எவ்விடத்திலிருந்தாலும் இந்த
புண்ணியகோடி விமானத்தில் இருக்கும் என்னை
ஸ்மரிப்பார்களே யானால் அவர்களுடைய பாபங்
கள் போய்விடும். அயனாதி புண்ணிய காலங்களில்
நியதமான மனதை உடைத்தானவனாய் என்னை ஸ்ம
ரித்தவர்களுக்கு பாபங்களெல்லாம் நசிக்கும். எந்த
சனனமாகிலும் யிந்த க்ஷேத்திரத்தைச் சேர்ந்து
திரிராத்திரம் உபவாச மிருப்பவனுடைய பிரம்மஹத்
தியாதி பாபங்களெல்லாம் போய்விடும். எந்த மனு
ஷியனாகிலும் தன கனக வஸ்து வாகன க்ஷேத்தி
ரத்தியாதியங்களால் பத்திர புஷ்பாதிகளை சிரத்தை
யோடே யிந்த க்ஷேத்திரத்தில் பூஜிப்பவர்களை நான்
பிரீதியுடன் கிரகித்து அவனுடைய அபீஷ்டத்தைக்
கொடுப்பேன். ஜனங்கள் எவ்விடத்திலாவது இருந்து
கொண்டு பிராதக் காலத்தி லெழுந்திருந்து யிந்த
க்ஷேத்திரத்தில் யிந்த புரத்தை ஸ்மரித்துக்கொண்டு
அவாள் என் லோகத்தைச் சேர்ந்து மறுபடி ஜன்மாதி
களை அடையவே மாட்டார்கள். என்னைப் பூஜிக்க
யிந்த புரத்தை நிர்மித்தாய் ஆகையால் இந்த புரமா
னது எல்லா பட்டணங்களுக்கு ஸ்ரேஷ்டமாயிருக்கும்.
இவ்விடத்தில் ஜனிப்பவர்களும் இறக்கிறவர்களும்
அவர்கள் எப்படிப்பட்ட பாபாத்மாக்களாயிருந்த
போதிலும் என் லோகத்தைச் சேருவார்கள். இவ்வி
டத்தில் ஜனித்த சுவான கழுதை யியான பசு பக்ஷி
மிருகாதிகளானாலும் என்னிடத்தில் பக்தியுண்டாய்
முக்தியை அடையும். ஜனங்கள் இந்த க்ஷேத்திரத்

தில் அசர்த்தையாலே யாகிலும் பண்ணின கர்மங்கள
னந்த பலன்களைக் கொடுக்கும். பால் சமுத்திரத்தில்
இருக்கும் விதமாய் நித்தியம் சன்னிதனாய் இவ்வி
டத்திலிருப்பேன். பூர்வத்தில் திக்கஜங்கள் இவ்வி
டம் வந்து கந்த புஷ்பாதிகளாலே என்னைப்பூஜித்தது
கள். நான் வராக ரூபத்தைத் தரித்து ரசாதலத்திலிரு
க்கும் ராக்ஷதர்களைக்கண்டித்து பூதேவியை உத்தரித்
தேன். அப்பொழுது அனந்தன் என்னைப் பூஜிப்பதற்
காக பாதாளத்திலிருந்து பூமி வியாளனத்தைச்செய்து
கொண்டு வந்து என்னைப் பார்த்தான். அன்று முதல்
இந்த விவரமானது அனந்த தீர்த்தமென்று பிரசித்தி
யை அடைந்து சர்வ பாபஹாரியாய் புண்ணிய ஜல
பூரிதமாய் இருக்கும், அது இவ்விடத்தில் ஒரு வல்
மீகத்தில் எனக்கு பிரியமான தீர்த்தாதி தேவதை
யான பன்னகேந்திர னிருப்பன். எவனாவது இந்த
சரோவரத்தில் விழுந்த போதிலும் அவன் சர்வ
லோக பூஜ்ஜியனாவன். இந்த க்ஷேத்திரம் சத்திய
விரத க்ஷேத்திரம். சகல புண்ணியங்களையும் கொ
டுக்கும். சித்தர்களால் சேவிக்கப்பட்டிருக்கும். இவ்
விடத்திலேயாவது புண்ணிய கோடி விமானத்தில்
நான் சன்னிதனாய் கொண்டிருப்பேனாகையால் ஜன
ங்க ளிவ்விடத்தில் அசரத்தையாலும் பண்ணின
கர்மங்கள் அனேக கோடி குணிதமாய்ப் பலன்
களைக் கொடுக்கும். உனக்காகவே நான் வியர்த்த ரூபத்
தாலே அவிசை கிரகித்தேன். ஆகையால் லோகங்க
ளெல்லாம் என்னைப் பார்த்து பவித்திரமாவார்கள். சக
ல தேவ முனி மனுஷியாதிகளான என் பக்தர்க

ளெல்லாம் உன்னையும் பூஜிப்பார்களென்று உனக்கு நான் பண்ணின மரியாதை நீ யாகப்பூர்த்தியாய்ப் பண்ணு, இதில் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியக்ஷ ரூபத்துடன் அபேக்ஷித்த சுகங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பேன். உன் அஸ்வமேத யாகத்தைப் பார்க்க வந்தவர்களெல்லாரும் எனக்கும் பிரியராய் சகல சித்தியும் அடைவார்கள். இதற்குச் சந்தேகங் கிடையாது. பிரணதார்த்தி ஹரனென என்னைப் பூஜியும். உனக்கு இருக்கும் துக்கங்களெல்லாம் நசித்து சுகமுண்டாகும். நீ எப்பவும் சைத்திரமாச சுக்லபக்ஷ சதுர்த்தசி தினத்தில் இவ்விடத்திலிருக்கும் என்னைப் பூஜியும். எந்த மனுஷியனாகிலும் மாதவமாசத்தில் திருவோண நக்ஷத்திரத்தில் இந்த அனந்த சரோசரத்தில் ஸ்நானம் பண்ணி என்னைப் பூஜித்து என் கதையை கேட்கிறானோ, அவன் அகிலஜன்ம பந்தங்களைவிட்டு உத்தம கதியை அடைவான். மனுஷன் ஒரு இராத்திரியானாலும் மூன்று இராத்திரியானாலும், ஏழு இராத்திரியானாலும் இவ்விடத்திலிருந்தால் சகல பாபங்களும் போகும். பிரம்மசாரியானாலும் கிருஹஸ்தனானாலும் வானப்பிரஸ்தனானாலும் பிக்ஷுகனானாலும் இவ்விடத்திலிருக்கும் என்னைப் பூஜிப்பார்கள் சகல பயங்களினின்றும் விடுபடுவார்கள் என்று வரதன் வசனத்தைக்கேட்டு பிரீதனான பிதாமகன் அனேக வந்தனங்களை ஆசரித்து கிருத கிருத்தியனாய்க்கொண்டு இப்படிச் சொன்னார். ஓ தேவ தேவா! நான் தன்னியனானேன். நீசொன்னால் ஜனங்களுக்கு துர்லபமானது எது? உனக்கிஷ்டமிருந்தால் நான்

பண்ணின பூஜைகளைக் கிரகியுமென்று பக்தியாலே பிரார்த்தனாய் கமலாசனன் பக்தவச்சலனாத வரதனை பரிசுத்தங்களான மனோஹரங்களான கந்த புஷ்பாதிகளாலே ஆம்னாயசமன்விதமாய் சகல சித்தி பிரதமாய் மோக்ஷ காரியாய்ப் பிரகாசிக்கும் பஞ்சராத்திரோக்த விதியாலே சகல பிரஜோபசாரங்களால் பூஜித்து அந்த மகாதேவன் அனுக்கிரகம் பெற்று மஹரிஷிகளும் கூடி யாக சேஷத்தைப் பூர்த்தி பண்ணினார்கள். அப்பொருத்விக்கள் முனிகளுடன் கூடி அதிராத்திரம், ஆன்னீகம் முதலானதுகளை விதியுடன் செய்து அவன் பாதாம்புஜாதாரமாய் சமுஜ்ஜவலமாய்ப் பிரகாசிக்கும் சுதர்சனனிடத்தில் சுத்தமான அவிஸ்ஸுக்களை யெல்லாம் வரதன் பூஜித்துக்கொண்டிருந்தான். அதைப் பார்க்க சகல தேவ முனி சங்கங்கள் மனுஷியர்கள் வந்து கிருதாஞ்சலியர்களாய் அந்த தேவ தேவனைப் பார்த்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது கமலாசனன் முனிகணங்களுடன்கூடி அக்கினிஷ்டோம அதிராத்திரங்கள் அபிஜித்து விசுவஜித்து ஆப்தோரியாமங்களை விதிபூர்வகமாய் பூர்த்திபண்ணி, ருத்விக்களுக்கு சமுர்த்தியாய் தக்ஷிணைகளைக்கொடுத்து சபையிலிருக்கும் பிராமணர்களுக்கெல்லாம் தனதான்னிய வஸ்திராபரணங்களைக் கொடுத்து பூமிகளையெல்லாம் நான்கு பாகங்களாகச் செய்து ருத்விக்களுக்கு அனேக கோதான பூதானங்களாகக்கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு பிரீதராய் அந்த பூமியையும்கோக்களெல்லாவற்றையும் தேவராஜனை வரதராஜருக்குக் கொடுத்தார்கள். இப்படிப்பிர

காசிப பிதாமகன் அசுவமேதத்தைச் செய்து கிருத
கிருத்தியனாய் தேவரிஷி கணங்களுடன் கூடி, அவ
பிருதஸ்நானத்தைச் செய்ய அந்த யாகசாலையை
விட்டு உத்தர பச்சிமபாகத்தில் முப்பதடி தூரத்தில்
பிரசன்ன சலிலங்களையுடைய புண்ணிய விருத்தி
யைச் செய்துகொண்டு தாரகங்களுடன் பிரகாசிக்
கும் சுவர்ண பத்மங்களையுடைய ராஜ அம்சங்களா
லே சேவிக்கப்பட்ட மத்தகாசனையாகுலமாய்ப் பிரகா
சிக்கும் அனந்த சரோவரத்தைச் சேர்ந்தார். அது
பூர்வத்தில் மகா வராக ரூபனை விஷ்ணு தேவனைச்
சேவிக்க, பன்னகேந்திரரான அனந்தன் பாதாளத்
தில் நின்றும் வந்த இடம் ஆகையாலே அனந்த
தீர்த்தமென்று பிரகாசிக்கிறது. அப்படிப்பட்ட
சரோவரத்திற்கு எல்லாரும் வந்தார்கள். அப்
பொழுது முனீந்திரர்கள் சர்வதீர்த்தங்களையும் ஆ
வாகனம்பண்ணி, கங்காதி நதிகளெல்லாம் பிரசன்ன
ஜலோபேதங்களாய் அந்த அனந்தத்தைச் சேர்ந்து
அந்த சரோவரமானது அதிக ஜலத்துடன் பிரகா
சித்ததைப்பார்த்து முனிகளெல்லாரும் பிரீதராயி
ருக்க, பிதாமகன் அனந்தத்துடன் சுவர்ண கும்பத்
தாலே அந்த ஜலத்தைக்கொண்டு வந்து வரதன் பாதங்
களில் சேர்த்து அபிஷேகம் பண்ணினார்கள். எல்லா
ரும் அந்த தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி அந்த பிர
பாவத்தாலே பரஸ்பரஞ்சொல்லி குணத்தை யிப்படிச்
சொன்னார். எந்த மனுஷியனாகிலும் இந்த தீர்த்தத்தி
ல் ஸ்நானம்பண்ணி வரதனைப் பூசிப்பானே யாகில்
அவன் சர்வ பாபங்களினின்றும் விடுபட்டு பரமபதத்

தை சேருவான். அப்பொழுது புலஸ்தியர் யிப்படிச்
சொன்னார். இந்த அனந்த தீர்த்தத்தில் பக்தியுடன்
ஸ்நானஞ்செய்து வரதனைச் சேவித்தவனுக்கு சகல
பாபங்களும் நசிக்குமென்று சொன்னார். பிரகஸ்பதி
அந்த தீர்த்த ராஜ்யத்தில் அவசானாய் விழுந்தபொதி
லும் அவன் அதிக புண்ணியாத்மகன் ஆவான் யெ
ன்று அப்பொழுது வசிஷ்டர் இந்த தீர்த்தத்தில் பி
தாமகன் அவப்ருதம ஸ்நானம் பண்ணினபடியாலே
இதில் ஸ்நானம் பண்ணினவர்களெல்லாம் பாபங்
களினின்றும் விடுபடுவார்கள் யென்று சொன்னார்.
இப்படி அவர்களெல்லாரும் சொல்லும்போது பிதா
மகன் அந்த முனிகளுடன்கூடி அவபிருத ஸ்நானம்
பண்ணி கிருத கிருத்தியனாய் சம்பிராப்த சர்வமனோர
திதனாய் அந்த வரதனை ஸ்தோத்திரம் பண்ண, அந்த
யாகத்தை பார்க்கவந்த சுரமனிதர்களெல்லாரும்
அந்த பிதாமகன் ஆசியைப் பெற்று அந்த மகியன்
சரித்திரத்தையும் வரதன் அவிர் பாகத்தையும் பரஸ்
பரஞ்சொல்லிக்கொண்டு யதேச்சம் போனார்கள். அப்
பொழுது பிதாமகன் ஏகாக்கிர சித்தனாய் தேவ தேவ
னை வரதனை கந்த புஷ்பாதிகளால் பூஜித்துக் கொண்
டிருந்தான்.

ஒன்பதாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகுநாரத ஸம்வாதத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் பிரமதேவன் தன் லோகத்துக்குப்போகிற கதையை உடைய

பத்தாவது அத்தியாயம்.

பிருகுமகாரிஷியானவர் நாரத பகவானைப் பார்த்து ஓ முனீந்திரா! பத்மாசனன் வரதனை எவ்வளவு காலம் பூஜித்தார் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன் என்று சொல்ல, நாரதபகவான் சொல்லுகிறார். ஓ மகாத்மா! கேளும் நான்முகன் ஜிதேந்திரியனாய் நியதவாக்காய மானஸனாய்க் குரோரத்தைவிட்டு திவ்விய போகங்களாலே இராத்திரியும் பகலும் பிரதக்ஷிண நமஸ்காரங்களினாலே ஸ்தோத்திரத்தைச் செய்துகொண்டு அந்த தேவதேவனைப் பூஜித்துக்கொண்டிருக்க, கிருதயுகமானது பூர்த்தியாய் திரேதாயுகமானதுவர, அப்பொழுது விஷ்ணுதேவன் பிரீதி பூர்வமாய் பிதாமகனுடன் இப்படிச் சொன்னார். ஓ சதுர்முகா! நீ அனேக தினங்களாய் யோகிகளுக்கு துர்லபமான பக்தியினாலே என்னை ஆராதித்தாய். ஆகையால் நான் பிரீதனானேன். உனக்கு இஷ்டமானவரத்தைக் கேள் கொடுக்கிறேன். எல்லாருக்கும் வரங்களைக் கொடுக்க இவ்விடத்திலிருக்கிறேன் என்று சொல்ல, பிதாமகன் இப்படி சொன்னார். ஓ மகாத்மா! உன் பிரசாதத்தாலே எனக்கு எல்லாம் சமிர்த்தமாயிருக்கிறது. நான் கிருதார்த்தனானேன். நான்

அபேக்ஷிக்கத் தக்கது ஒன்றுமில்லை. நான் அனேக காலம் தபசை பண்ணினேன். கடைசியில் உன் ரூபத்தைப் பார்க்க யோக்கியனானேன். உன் பாத பத்ம ஸ்மரணத்தைக் காட்டிலும் ஒரு வரமும் வேண்டாம். நான் நிரந்தரம் உன்னை சேவித்துகொண்டிருக்கிறேன். என்னிடத்தில் அனுக்கிரகத்தை உடைத்தாயிருக்கிற அந்த வரத்தையாவது கொடு. உன்னை ஆராதித்துக்கொண்டு உன் பாதங்களைச் சேவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும் நீ இல்லாமல் ஸத்திய லோகத்தில் நானிருப்பது மேலாகுமோவென்று கிருதார்த்தனாய் அந்த வரதன் பாதங்களில் விழுந்து பாகுக்களாலே ஆலிங்கனம் பண்ணிக்கொண்டிருக்க, ஜகன்னாதனிப்படிச்சொன்னான். ஓசதுரானனா! இந்த லோகத்தில் உற்பத்தி ஸ்திதி லயங்கள் எனக்கு லீலமாயிருக்கும். ஆதிகாலத்தில் உன் ரூபத்தாலே எல்லாவற்றையும் சிருஷ்டிப்பேன். ருத்திரனாயிருந்து கொண்டு நாசங்களைச் செய்வேன். அ[illegible]ன் சுராசுராதிகளுக்கு அகப்படாதவன். அசந்திய மகிமையை உடையவர் நான் வாமனனாயிருந்துகொண்டு இந்திரனை ரக்ஷித்தேன். நான் அக்கினி, வாயு, வருண, இந்திரன், சந்திராதி ரூபங்களாலே பிரகாசிப்பேன். சக[illegible]தேவதைகள், மனுஷாள், பசு, பக்ஷி, விருக்ஷம், திருணம், குல்மாதிகள் சர்வங்களும் என்னம் சமாகவே ஜனிக்கும். நானல்லாமல் ஒன்றுமில்லை. வர்ணாசிரமாசாரங்களுக்குக் கர்த்தன் நானே. எல்லாரும் என் ஆக்கினையாலே சுருதி ஸ்முருதிகளில் சொல்லப்பட்ட கர்மங்களை ஆசரிப்பார்கள். யாரும் என் ஆக்கினையை

வில்லங்கனம் பண்ணமாட்டார்கள், அப்படிச் செய்தவர்களை யமனாகிலும் சம்மரிப்பான். எவனாகிலும் சாஸ்திர மார்க்கத்தை விட்டு உன்னை பூஜித்தபோதிலும் அவன் பாபியாவான். என் ஆக்கினையை பரிபாலனம் பண்ணுவதே எனக்குப் பிரீதிகரம். என் ஆக்கினா ரூபங்களாயிருக்கும் சுருதி ஸ்மிருதிகளுக்கு பிரதிஷித்த கர்மங்களைத் தர்ம புத்தியாலே ஆசரிப்பவன் பரம கியானவானாய் நரகத்தில் விழுவான். ஆகையால் ஓ சதுரானனா! என்க்கிஷ்டத்தைக்கோரி என்னுஞ்ஞையைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டு சொஸ்த சித்தனாய் என்னை ஸ்மரித்துக்கொண்டு பிரமலோகத்துக்குப்போய் ஜகன்னிர்மாண கர்மங்களை ஆசரித்துக் கொண்டிரும் சிந்தனையை அடையாதே. நான் சர்வ காலமும் இங்கேயே இருப்பேன். பிரளய காலத்தில் சர்வமும் விலயமாயிருக்கும். என்னை சேரவருவாய் போகிறனாய் கொண்டிரு. பூர்வமே நியமித்த பிரகாரம் பிர—சிருஷ்டையைப் பண்ணிக்கொண்டு சகல தேவதைகளிலும் எனக்குப் பிரியனாய் கொண்டு பிரதி வருஷங்களிலும் சைத்திர சுத்த சதுர்த்தசிதினம் இவ்விடத்துக்கு வந்து பௌர்ணமிதினம் இராத்திரியும் பகலும் என்னை ஆராதித்துக்கொண்டிரும். உன்னாலே நிர்மிக்கப்பட்ட இந்த காஞ்சிபுரத்தில் சகலலோக பிரசித்தமாய் எனக்கு வேண்டியவற்றை உண்டுபண்ணிக்கொண்டு எவ்வளவு காலமாகிலும் நசியாமல் இரு. நீ எப்பவும் இந்த புண்ணியகோடி விமானத்தில் இருந்த என்னை நினைத்துக்கொண்டிரு. கிருதயுகம்போய் திரேதாயுகம் வரும்போது என் லோகத்

துக்குப் போ. என் பக்தன் கஜேந்திரனென்று ஒருவனுண்டு. அவனுக்கு திரேதாயுகத்தில் பூஜையை முன்னமே கொடுத்திருக்கிறேன். இனி யவன் எனக்குபூஜை பண்ணத்தக்கவன். திரேதாயுகம்போய் துவாபர்யுகம் வந்தால் தேவகுருவாகிய பிரகஸ்பதி இவ்விடத்துக்கு வந்து துவாபரயுகாந்தரம் வரையில் என்னை ஆராதிப்பன். பின்பு கலியுகம் வந்தால் சகஸ்ரபணா சோபிதனான சேஷன் என்னை ஆராதிப்பன்.

நடக்கும்போதும், தூங்கும்போதும், புசிக்கும்போதும், என்னை ஸ்மரித்துக் கொண்டிரும் சகல மந்திரோத்தமமாய் ஓங்கார பூர்வமாய் யார்த்தி நிவாரமான என் மந்திரத்தை எப்போதும் ஸ்மரித்துக் கொண்டிரும். எந்த மனிதியனாகிலும் என் மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருப்பானோ அவன் சரீரந்தத்தில் சகல பாபத்தில் நின்றுவிடுபடுவன். அவன் சமீபத்தில் பிசாசகிரகபயங்கள் ராக்ஷச சோர வியாக்கிராதிபாதைகள் சேரமாட்டாது. இந்த புண்ணியகோடி விமான தரிசனம் பார்த்தவர்களுக்கு பூதரக்ஷ: பிசாசாதி பயங்கள் கிடையாது. இந்த இரகசியமான நம்முடைய சம்வாதங்களைப் படித்தவனும் கேட்டவனும் எனக்குப் பக்தராவார்கள் என்று இவ்விதமாக வரதன் சொற்களைக்கேட்டு, கமலாசனன் அந்த தேவதேவனுக்கு அனேக பிரதக்ஷண நமஸ்காரங்களைச் செய்து அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு அதிக பிரயாசத்துடன் அவரை விட்டு சகல முனிகளுடன் கூடிக்கொண்டு சின்னரி தானங்களைக் கேட்டுக்கொண்டு தன் லோகம்போய்ச்

சேர்ந்தார். பூர்வத்தில் சத்தியலோக வாசிகளெல்லாரும் பிரமனுடன் கூடிவந்து அவனிருக்கும் வரையில் இந்த காஞ்சி புரத்தில் வரதனை ஆராதித்துக் கொண்டிருந்து அந்த கமலாசனனுடன் கூடிக்கொண்டு அவர்களெல்லாரும் திரும்பி பிரமலோகத்தை சேர்ந்தார்கள்.

பத்தாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் வரதராஜ பிரகஸ்பதி சம்வாத ரூபமான பதினோராவது அத்தியாயம்.

பிருகு மகரிஷியானவர் நாரதபகவானைப்பார்த்து ஓ முனீந்திரா! கிருதயுகம்போய் திரேதாயுகத்தில் கஜேந்திரன் எந்த விதமாய் வரதனை ஆராதித்தார். அதை சொல்லுமென்று கேட்க, நாரதபகவான் சொல்லுகிறார். ஓ மகாத்மா! கேளும் கமலாசனன் தன்லோகஞ்சேர்ந்து திரேதாயுகாதியில் வரதன் பக்ஷிராஜனான, கருடனும், மகாகாந்திகளுடன் கூடின சுதர்சனசக்கரமும் ஜலாதீசனான மகாத்வனிசனாதனாய் பிரகாசிக்கும் பாஞ்சஜன்னியமும் சகல துஷ்ட பயங்கரமான கௌமோதகியும் சகலராக்ஷச விநாசகாரியான நந்தகமும் தனுர்வேத தாரியான சார்ங்கமும், விஷ்வக்சேனாதிபரி ஜனங்களும், சர்வ ஐசுரிய தாயியான லக்ஷ்மீதேவி, நீலோற்பல சமானமான பூதேவியும் முதலானவர்களாலே சேவிக்கப்பட்டு அதி வைபவங்களுடன் இருக்க, இப்படி அனேக காலம் சென்ற பின்பு, அந்த காஞ்சீபுரமெல்லாம் விந்தியாரண்ணியம்போலே அதிபயங்கர ஆரண்ணியமாயிற்று. சந்தன கரு புன்னாக சம்பகாதி அனேக விருக்ஷங்களுடன் கூடினதாய். சர்வ ருது தர்மங்களுமுடையதாய் கோகில சுரங்களால் சுந்தரமாய் மத்த ஷட்ப ஜங்காரங்களையுடையதாய் மத்த

மாதங்க பயங்கரமாய் சித்த சாரண கந்தர்வர்களால்
சேவிக்கப்பட்டு நிர்மல ஜலஸம்பூரண தடவாபிக்
களுடன் கூடினதாய் நதீபுலின தேசங்களில் விவரிக்
கும் இராஜ ஹம்ஸங்களை யுடையதாய் சூரிய கிர
ணங்களால் பிரகாசிக்கும் கமலா மோதங்களை யுடை
யதாய் சுகந்தங்களால் ஜெயிக்கப்பட்ட அமரோத்தி
யானத்தை யுடைத்தானதாய் கேதகீ கந்த சுகந்த
மாருத சேவிதமாய் மனோஹரமாய் இருக்கும் அந்த
வனத்தில் ஒரு நாள் வரதன் லக்ஷ்மியுடன்கூடி, அதி
விநோதமாய் வேகவதி தீரத்தில் விஹரித்துக்கொண்டி
ருக்கும்போது அதிகோஷ்ண தப்தமான பூமியி லெல்
லாம் வலாஹகங்கள் வர்ஷித்தனகள். அந்த ஸ்ரீ
விஷ்ணுபகவான் சஞ்சரிக்கும் இடமெல்லாம் கருட
னுனவர் தன் பக்ஷங்களால் மூடிக்கொண்டிருந்தார்.
அப்போது வனசரர்களெல்லாம் அந்த மகா புருஷோ
த்தமனைப் பார்த்து கிருதார்த்தர்களானார்கள். விருக்ஷ
ங்களெல்லாம் புஷ்பங்களை வர்ஷித்தனகள். அந்த பூமி
களெல்லாம் தாராகண யுதமான ஆகாசம்போல் பிர
காசித்துக்கொண்டிருந்தது. கமலகல்ஹாரமோத
சீதளமான வாயுவானவன் வீசினான். சூரியன் தபியா
மலேயிருந்தான் பூரணசந்திரனானவன் பிரகாசித்தான்
வசந்த ருதுவில் சரக்கால தர்மங்கள் சரக்காலத்தில்
வசந்த கால தர்மங்கள் உடைத்தாயிருந்தன.
மேகங்களும், மின்னல்களும், கொடிகளும் பிரகா
சித்தனகள். அந்த லக்ஷ்மிநாராயணன் இருவர்களை
யும் எல்லாரும்பார்த்து சந்தோஷித்தார்கள். அந்த
வனத்தில் பூர்வத்தில் விஸ்வகர்மா நிர்மிதங்களான

தடவாபிகளெல்லாம் குமுதாம்போஜ லலிதங்களாய்
பிரகாசித்தனகள் சித்திரவிசித்திரங்களான மிருக சமூ
கங்கள் நவபங்கில் பூமியில் சஞ்சாரஞ் செய்தனகள்.
இப்படி சர்வ லோகநாயகனை தேவ தேவன் அந்த
வனத்தில் உண்டான விசித்திரங்க ளெல்லாவற்றை
யும் லக்ஷ்மிதேவிக்குக் காண்பித்துக்கொண்டு சில கா
லம் விவரித்து அனந்த சரோவர தீரம் சேர்ந்து,
அதில் ஒரே காலில் நின்று ஊர்த்துவ பாதமாய் நின்
றுகொண்டு புண்ணியகோடி விமானத்தை நினைத்
துக்கொண்டு வேதமாதாவான காயத்திரியை ஜபித்
துக்கொண்டு நிவாத தீபம்போலே நிரஹங்காரனாய்,
குரோதலோப வர்ஜிதனாய், அசஞ்சலனாய் நிர்ந்தாம்
மசகாதிகளாலே பீடிக்கப்பட்ட அனுகுலனாய், சமஸ்த
பூதங்களையும் ஆத்ம சமானமாக எண்ணிக்கொண்
டும், அதிகோர தபசை செய்துக்கொண்டு முனிரூபமா
யிருக்கும் சுரகுருவைப்பார்த்து லக்ஷ்மி தேவியும் தா
னும் பதினாறு வருஷமுடைய மனுஷிய ரூபத்தைத்
தரித்துக்கொண்டு ஸ்ரீவராஜலக்ஷண சமேதனாய் சர்
வாபரண பூஷிதனாய் பத்மபத்திர விசால நயனங்களை
உடைத்தாய் சந்திரபிம்ப சமான முகத்துடன்
கூடிக்கொண்டு ஹம்சம்போல நடந்துகொண்டு சர்வா
பரண பூஷிதனாய் பிரகாசிக்கும் லக்ஷ்மீதேவி சே
விக்க, அந்த முனியுடன் ஓ பிராமணோத்தமா! ஜன
சூன்னியமாயிருக்கும் ஆரண்ணியத்தில் இப்படிப்
பட்ட உக்கிரமான தபசை எதைக்கோரினவனாய்
செய்கிறாய்? தெரியும்படி சொல்லுமென்று கேட்க,
அந்த தபசி இப்படிச்சொன்னான். ஓ ராஜநந்தனே.

நிராயுதனுன்னியனாய் சிம்மவியாக்கிராதி கோர மிருக பயங்கரமாயிருக்கும். இந்த மகாரண்ணியத்துக்கு ஸ்திரியுடன் கூடிக்கொண்டு என் வந்தாய்? இந்த சிறு வயதில் நிர்ப்பயனாய் இவ்விடத்தில் ஏன் சஞ்சரிக்கிறாய்? நீ வருகிறது உன் பந்துக்கள் அறியமாட்டார்களா? இவ்விடத்தில் புலி முதலானதுகள் என் சரீரம் நிஸ்ஸாரமென்றெண்ணிவிட்டிருக்கிறதுகள். அதுகள் ஜலபானம் பண்ணவரும் உன்னைப் பார்த்தால் பிடிக்குதும். ஏனிருக்கிறாய்? அதிவேகமாய்ப்போய்விடுமென்று சொல்ல, அந்த வரதன் சிரிப்புடன் இப்படிச் சொன்னார். ஓ தாபசோத்தமா! சர்வ பூதங்களுக்கும் ஹிதத்தைக் கோரிக்கொண்டு சர்வ பூத பயப்பிரதானவைங்களுக்கு அரண்ணியத்திலானாலும் கிரகத்திலானாலும் சஞ்சரித்தால் பயம் எப்படி உண்டாகும். உன் விருத்தாந்தத்தை சொல்லுமென அந்த முனி இவ்விதமாய்ச் சொன்னார். ஓ ராஜநந்தனா! நான் பரத்வாஜ புத்திரனுக்கும் பவுத்திரன். பூர்வ ஜன்மத்தில் சுர குருவான பிரஹஸ்பதி எனக்கு பூர்வ ஜன்மக்கிடானம் உண்டு. நான் அனேககாலமாய் தபசைப் பண்ணிக்கொண்டிருப்பவன். நான் தபசு பண்ணுவதற்கு காரணங்கேளும். பூர்வத்தில் என்னை சரணமாக அடைந்த பெண் நாயை கர்வத்தாலே அடித்தேன். அந்த நிவாரணார்த்தமாக இப்படிப்பட்ட உக்கிர தபசை பண்ணுகிறேன். இந்த க்ஷேத்திரத்தில் பண்ணும் கர்மங்கள் கோடி குணிதமாய் பலன்களைக் கொடுக்கும். ஓ பாலகா! அதிக காந்தியுடன் கூடிக்கொண்டிருக்கும் விமானத்தைப் பாரும். அதை

ஸ்மரித்தால் சகல பாபங்களும் நசிக்கும். இந்த க்ஷேத்திரத்தில், விதாதா அஸ்வமேத யாகத்தைப் பண்ணினார். இதில் வியக்த ரூபமாய் வரதனிருக்கிறார். நான் பூர்வத்தில் பண்ணின அதிக பாபங்களாலே என் கண்களுக்கு அகப்படவில்லை. ஆகையால் என் பாபங்களெல்லாம் நசிக்க இந்த தபசைப் பண்ணுகிறேன். இந்த க்ஷேத்திரத்தில் அனேக முனிகள் தபசுகளைச் செய்து கர்ம பந்தங்களை விட்டுயோக சித்தியை அடைந்தார்கள். இந்த பர்வத சிகரத்தில் வரதன் திவ்விய பரி ஜனங்களால் சேவிக்கப்பட்டு இருப்பான். என்னைப்போல யிருக்கும் பாவிகளுக்கு கண்ணில் படமாட்டான். ஸ்வதர்ம மார்க்கத்திலிருந்து சாந்தராய் தபசை செய்பவர்கள் இரண்டு யோசனை தூரம் வரையில் விஷ்ணு தூதர்கள் சஞ்சாரஞ் செய்துக்கொண்டு பாபங்களை ஹரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய பயத்தாலே இவ்விடத்தில் ரக்ஷ பிசாச பயங்கள் கிடையாது. நீ யிந்த சரோவரத்தில் உன் பாரியையுடன் கூடி ஸ்நானம் பண்ணி வரதனை அபேக்ஷைகளைக் கேள். எவனெதை அபேக்ஷித்தபோதிலும் அதுகளெல்லாம் கொடுப்பான். ஆகையால் இராஜ்ஜிய விஜயத்தைக் கேள். நீ மகா சுகத்தை யுடையவன். இவ்விஷயத்துக்கு என்னகாரணத்தாலே வந்தாய். இந்தப்பிரதேசம் எப்படிப்பட்டவர்களுக்கும் அகம்மியந்தான். உன்னை பார்த்ததினாலே என்மனது மிகவும் பிரசன்னமாயிருக்கிறதென்று சொல்ல வரதன் சிரித்துக்கொண்டு பாரியையுடன் கூடி அந்தகிரி சிகரத்தை யேறினார்கள். என்

பதைக் கேட்டு, பிருகு ரிஷியானவர் இப்படிச் சொன்னார். ஓ நாரத மகாரிஷியே! அந்த தேவ குருவுக்கு வரதன் ஸ்ரீ சமேதனாய்ப் பிரத்யக்ஷமானான் ஆயினும் அவனுக்கு ஒன்றும் என் சொல்லவில்லை. அதை எனக்குத் தெரியச்சொல்லுமென, நாரதர் இப்படிச் சொல்லுகிறார். ஓ மகாத்மா! அதிரகசியமாயிருக்கும் அதைக் கேட்டாய். ஹிதத்தை அபேக்ஷிக்கிறவன் இதை கேட்க வேண்டியது தெரியப் படுத்துகிறேன். சமாஹித சித்தனாய்க் கேள். விஷ்ணுவானவன் கட்டையில் பிரகாசிக்கும் நெருப்பு போலே எள்ளில் இருக்கும் எண்ணெய்ப்போலே சர்வத்திலும் சமானமாய் இருப்பவன். அவனில்லாதது ஒன்றுமில்லை. பக்தியால் அவன் அறியத்தக்கினவன். குருடன் கரஸ்தமான இரத்தினத்தை அறியாமல் எப்படி மூடனாய் தபஸ்ஸானால் கூடியவனாய் இருந்து சர்வாதனான விஷ்ணு தேவனைத் தெரிந்துகொள்ள மாட்டான். ஜனங்களுக்கு பாபங்கள் விஷ்ணு தரிசனத்தாலே குறுக்கப்படக்கும். பாபங்கள் நசித்தால் அந்த பகவான் கண்ணிதக்கினவன். ஆகையால் அந்த தேவ குருவானவன் அனேகபாபங்களைச் செய்தவனானதால் தேவதேவனை வரதனைப் பார்த்துத் தீர்த்துக்கொள்ளாமற் போனான். வரதன் அவனுக்கு, பிரத்தியக்ஷமாய் வார்த்தைகளை ஆனபோதிலும் தன் நிஜ ரூபத்தைக் காண்பிக்கவில்லை.

பிரமாண்ட புராணத்தில் பிருகு நாரதசம்வாதத்தில்
அஸ்தகிரி மகாத்மியத்தில் திவிஜ பாரத்வாஜ
சம்பாஷண ரூபமான கதைகளையுடைய

பன்னிரண்டாவது அத்தியாயம்

பிருகு மகாரிஷியானவர் நாரதபகவானைப் பார்த்து ஓ மகாத்மா! தேவகுருவான பிரகஸ்பதிக்கு அப்படிப்பட்ட பாவம் எப்படி உண்டாயிற்று. பின்பு அந்த பாபம் வரதர் தரிசனத்தால் எப்படி நசித்தது. அந்த விதத்தைத் தெரிவிக்க வேணுமென்று கோற, நாரதபகவான் சொல்லுகிறார். பூர்வத்தில் தேவேந்திரன் குருவுடன் கூடி சகலதேவதைகள் வசிஸ்டாதி முனிகள் கூடி சபை நிறைந்து இருக்கும் சமயத்தில் சகல புண்ணிய கதைகளை கேட்டுக் கொண்டிருக்கும் போது முனீந்திரர்களைப் பார்த்து யிப்படிச்சொன்னார். ஓ முனிசிரேஸ்டர்களா! ஒருவன் தன் வீட்டிலிருந்துகொண்டு சதா சாரங்களை உடைத்தாய் எக்கியயாகாதிகளைப் பண்ணிக்கொண்டு அதிதி பூஜைகளைச் செய்துக்கொண்டு சத் பிராமணர்களுக்கு கோ, பூ, ஹிரண்ணியாதி தானங்களைக் கொடுத்துக்கொண்டு நித்தியதவாக்காய மனதுகளுடன் கூடிக்கொண்டு நித்திய தர்மாதனாய் சர்வபூத பயப்பிரதனாய் சாங்கியயோகத்தையுடையவனாய் ஸ்வதாராதனாய் காமகுரோதங்களை விட்டு சத்கதைகளைக் கேளாமல் தர்மமார்க்கத்

தாலே புத்திரர்களைப் பார்த்துக்கொண்டிருப்பவன்
மற்றொருவன். உன்னிலு மிச்சையில்லாமல் புத்திர
களத்திராதிகளை விட்டு ஸ்வதேக போஷணத்தைப்
பண்ணிக்கொண்டு தீர்த்த யாத்திரைகளைப் பண்ணிக்
கொண்டு விருதங்களைச் செய்துகொண்டு ஜிதேந்திரி
யனாய் சீலாசாரங்களை உடையவனாய் சாந்தியை
யடைந்து சத்தியத்தையே சொல்லிக்கொண்டு மித
போஜனத்தை யுடையவனாய் அன்ன போஜனத்தைத்
விட்டு அதிதி பூஜைகளை ஆசரியாமல் புண்ணிய க்ஷே
த்திரங்களில் சிராத்தாதிகளைப் பண்ணிக்கொண்டு
சுரோத்திரியர்களுக்கு யதாசக்தி கொடுத்துக்கொண்டு
தபஸ்வாத்தியாய பரனாய் தியானயோகத்தை அடை
ந்து ஓரிடத்திலிராமல் லப்தமானத்தை அனுபவித்
துக்கொண்டு அகங்கார பயசோகங்களைவிட்டு யிருப்
பவன். இவர்களிரண்டு பேர்களில் சிரேஷ்டன் யார்
தெரியச்சொல்லுமென்று கேட்க, அந்த முனிகளெ
ல்லாரும் சந்தேகப்பட்டு தேவதா குருவான பிரகஸ்
பதியைப்பார்த்து ஓ மகாத்மா! இந்திரன் கேட்ட
தைச்சொல்ல நீரே அருகர் என்று பிரார்த்திக்க
பிரகஸ்பதி அவர்களைப் பார்த்து அசாரமான சம்சா
ரத்தைவிட்டு தீர்த்த யாத்திராபரனானவனே உத்தம
னென்று சொல்ல, அந்த முனிகளெல்லாரும் வேத
நிந்திதமான பிரகஸ்பதி வசனத்தைக் கேட்டு குரோ
தத்துடன் ஓ ஆசாரியரே! நீ யக்ஞானத்தாலே
அசாஸ்திரியமான வார்த்தைகளைச் சொன்னீராகை
யால் பூலோகத்தில் அதிகதுக்கியாய் ஜனி என்று சபி
த்தார்கள். அப்போது அந்த பிரகஸ்பதியானவர் நர

மதா நதிதீரத்தில் நல்ல போஜனமில்லாத மந்திரஜித்
தென்னும் விப்பிரனுக்கு புத்திரனாகப் பிறந்தான்.
அவன் ஜனித்த க்ஷணத்திலேயே தாயார்மரணத்தை
அடைந்தாள். அப்போது அந்த பாலன் மெதுவான
சயன ஸ்நானங்களில்லாமல் அசுசியாய் மசகாதி
களால் பீடிக்கப்பட்டு அவரவர்களால் ரக்ஷிக்கப்
பட்டு பால்லியகாலமெல்லாம் சகல கஷ்டங்களை
யனுபவித்து யௌவன காலத்தில் கட்டத் துணியில்
லாமல் அனேக புத்திரர்களை அடைந்து தரித்திரத்
தாலே அனேக கஷ்டங்களை அடைந்து அனேக
வியாதி பீடிதனாய் பந்துக்களெல்லாரும் ஜீவன் மிரு
தனாயிருக்கிறானென்று சொல்ல, நிர்வேதத்தாலே
பூர்வ புண்ணிய வசத்தாலே சகல சாஸ்திரார்த்தங்
களை தெரிந்துகொண்டு யிப்படி துக்கப்பட்டுக்கொண்
டிருக்கையில் அவனிருக்கும் கிராமத்தில் ஒரு
நரேந்திரன் தன் சேனைகளுடன் கூடிக்கொண்டு வந்
தான். அந்த ராஜன் புத்திரன் ஏழுவயதானவன்.
பாலனுன் தாயாருடன் கூடியிருக்கும்போது நாய்க்
குட்டியைப்பார்த்து அதிக சந்தோஷத்துடன் பிடித்
துக்கொண்டுபோய் ஒரு குளத்தில் போட்டான்.
அந்தக் குட்டிக்கு தாயான சுனிகையானது அதிக
கோபத்துடன்வந்து அந்த ராஜபுத்திரனைத் தொடை
யில் பல்லாலே கடித்தது. அதைக்கண்டு அதிக
கோபத்துடன் அந்த ராஜபடர்கள் சூலம் முத்கரம்
முதலான ஆயுதங்களைத் தரித்துகொண்டு அதைக்
கொல்ல யெத்தனிக்கும்போது அதைக் கண்டு அந்த
சுனிகையானது மற்றொரு குட்டியை வாயால் கௌ

விக்கொண்டு அந்த பிராமணனை ரக்ஷியும் ரக்ஷியு
மென்று சரணமடைந்தது. அப்போது அந்த ராஜ
கிங்கர்கள் அந்த விப்பிரன் வீட்டிலிருந்ததை அறி
யாமல் வீதிகளில்தேடிக்கொண்டிருந்தார்கள். அந்த
பிராமணன் புஜித்துக்கொண்டிருக்கையில் பயத்
தாலே நாலு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு தன்
னெதிரிலிருக்கும் சுனிகையைப் பார்த்து அதிக
கோபத்துடன் இதை வெளியில் அடியுங்களென்று
புத்திரருக்கு ஆக்கியாபித்தான். அப்பொழுது அந்த
சுனிகை அந்த பிராமணனைப்பார்த்து ஓ விப்பிரா!
என்னைக்கொல்ல ஆயுதங்களுடன் ராஜபடர்களிரு
க்கிறார்கள். க்ஷணமாத்திரம் க்ஷமியுமென்று சரண
மடைந்து, பிரார்த்திக்கிற சுனிகையைப் பார்த்து
மறுபடி அதிக கோபத்துடன் அதிக துஷ்டர்களான
புத்திரர்களை நோக்கி வீட்டிலிருந்து வெளியில் அடி
த்துத் துரத்துங்களென்று சொன்னபோது அவர்கள்
நிர்தயையாய் உலக்கையாலே அதை அடித்துத் தெ
ருவில் தள்ளி தலை சாய்ந்தபோது அந்த சுனிகை
தன்னுடைய பூர்வ ஜன்ம கர்மங்களை நினைத்துக்கொ
ண்டு அழுதுகொண்டு பயத்தாலே அந்த ராஜபடர்
களைப் பார்த்துக்கொண்டு இப்படிக் கூச்சல் போட்
டது நான் பூர்வத்தில் என் வீட்டுக்குவந்த பிக்ஷுகளை
அடித்துத்துரத்திவிட்டேன். அந்த பாபம் சாஸ்திரகு
ஸரிதமாய் இப்பொழுது அநுபவிக்கலாயிற்று மனுஷி
யன் தான் அக்கியானத்தாலே தானாகட்டும் கியானத்
தாலேதானாகட்டும் பண்ணின பாபங்களுக்கு பிராய்ச்
சித்தம் பண்ணிக்கொள்ளவேண்டியது. எந்த மனித

னாகிலும் பயத்தினாலே தன்னை சரணமடைந்தவனை
ரக்ஷியாமற் போனால் அவனுடைய பாபத்துக்கு பிரா
யச்சித்தம் இல்லை என்று வேதங்கள் சொல்லுகிற
தென்று இப்படி சொல்லுகிற சுனிகையைப் பார்த்து
ராஜகிங்கர்கள் அதிக கோபத்துடன் நிர்தயராய்
அதை வைரத்தடிகளாலே அனேக விதங்களாய் அடி
த்தார்கள். அப்பொழுது அந்த பிராமணன் தர்ம புத்
தியுடன் அந்த சுனிகை வசனங்களைக் கேட்டு அதிக
துக்கத்தை அடைந்து நிர்வேதத்தாலே சகல சாஸ்
திரங்களிலும் தன்னுடைய பாபங்களுக்கு பிராய்ச்
சித்தத்தை காணாமல் தப்த மனதையுடையவனாய்
எமன் உபத்திரவங்களை நினைத்து பயப்பட்டுக்கொ
ண்டு பாகீரதி நதிதீரத்தில் தபசைப் பண்ணிக்கொண்
டிருக்கும் பரத்வாஜர் சமீபம் சேர்ந்து அவருக்கு தன்
பாபத்தைத் தெரியப்படுத்த அந்த முனீந்திரர் அந்த
பிராமணனை பிரகஸ்பதியாக தெரிந்துகொண்டு
ஓ விப்பிரா! உன்னை நான் தெரிந்துகொண்டேன் பயப்
படாதே உன்பாபத்துக்குப்பண்ணத்தக்க பிராய்ச்சித்
தம் தெரியப்படுத்துகிறேன் கிரணைக்கொண்டு கேள்.
ஸத்திய விருதமென்று ஒரு மகா க்ஷேத்திரமுண்டு.
அவ்விடத்தில் பண்ணுகிற கர்மங்கள் அப்படியே பலத்
தைக்கொடுக்கும். அவ்விடத்தில் காஞ்சீபுரமென்று
ஒரு பட்டணமுண்டு. அவ்விடத்தில் பூர்வத்தில் பிதா
மகன் அசுவமேதயாகம் பண்ணினார். ஜகன்னாத
னான வரதன் பிரத்தியக்ஷமானான். அவ்விடத்தில்
பூர்வத்தில் திக்கஜங்கள் ஜகன்னாதனை ஆராதித்தார்
கள். தவிர சத்தியகேது என்பவன் அந்த க்ஷேத்

திரத்தில் அநேக காலமாய் புண்டரீகாக்ஷனை ஆராதித்து கிருதார்த்தனானான். அவ்விடத்தில் நூற்றி யெட்டு திவ்விய தீர்த்தங்களும் அநேக தேவாலயங்களுமுண்டு. அந்த க்ஷேத்திரத்துக்குச் சமானம் ஏதுமில்லை. அவ்விடத்தில் புண்ணிய கோடி விமானமென்று ஒன்று யிருக்கிறது. அதைப் பார்த்தால் எல்லா பாபங்களும் நசிக்கும். அந்த விமான மத்தியத்தில் நித்திய சூரி ஜனங்கள் சேவிக்க வரதன் அதிக வைபவத்தோடே யிருக்கிறான். பாபங்களைச் செய்பவருக்கு அவன் அதிக துர்லபன். நீ அவ்விடத்தில் அநந்த தீர்த்தமென்று ஒருசரசு யிருக்கிறது. அதன் தீரத்தைச் சேர்ந்து அந்த விமானத்தைப் பார்த்துகொண்டு ஜிதேந்திரியனாய் கொண்டு காயத்திரியை ஜெபித்துக்கொண்டு திரேதாந்தம் வரையில் தபசை பண்ணும். அப்பொழுது உன் பாபமெல்லாம் நசிக்கும். அப்புறம்வரதன் உனக்குபிரசன்னனாவான். துவாபரயுகத்தில் அந்த தேவ தேவனை ஆராதிப்பாய். இப்படி அருள் பெற்ற பிராமணன் சத்திய விரதக்ஷேத்திரஞ் அடைந்து அனந்த சரோவரத்தைச்சேர்ந்து அதில் ஸ்நானம் பண்ணி நியமத்துடன் விமானாபி முகமாய் அநேக காலம் மகா தபஸ்ஸுகளைச் செய்து பாப ரஹிதனாய் துவாபரயுகத்தில் வரதனை ஆராதித்தார். இப்படி பிராமணனுக்கு லக்ஷ்மி சமேதனாய் மனுஷ்ய ரூபத்துடன் வரதன் பிரசன்னனானான். தன் ரூபத்தை அவனுக்குக் காண்பியாமல் அந்த விப்பிரன் பாபத்துடன் கூடினவனாகையாலே அந்த பரமாத்மாவைப் பார்க்கவில்லை. அந்த வரதனை

கண்டதாலே அவன் பாபமெல்லாம் நசித்தது. அவன் அந்த பரமாத்மாவினிடத்தில் மனசை வைத்து ஸ்திரனாய் காயத்திரியை ஜெபித்துக்கொண்டு அதி துஷ்கரமான தபசைப் பண்ணிக்கொண்டிருந்தான்.

பன்னிரண்டாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரமாண்டபுராணத்தில் பிருகு நாரதசம்வாதத்தில் அப்சரோகண விப்பிரலோப கதையை யுடைய பதிமூன்றாவது அத்தியாயம்.

பிருகு மகா ரிஷியைப்பார்த்து நாரதபகவான் சொல்லுகிறார். இப்படி பிராமணன் தபசு பண்ணிக் கொண்டிருக்க திவ்விய பரி ஜனங்களால் சேவிக்கப் பட்டிருக்க வரதன் இருக்கும்போது தர்மாத்மாவா யும் விஷ்ணுபக்தனாயும் இருக்கிற ஒரு கஜேந்திரன் கரிணீ யூதங்களுடன் கூடி பூமிகளெல்லாம் திரிந்து கொண்டு சுகந்த புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு மஹா விஷ்ணுவை ஆராதித்து மேரு பர்வதத்தில் சில தினங்களிருந்து பின்பு பிரயாக் புஷ்கர பதரிகாச் சிரம கங்காசாகர சங்கம புருஷோத்தமாதி புண்ணிய க்ஷேத்திரங்களில் ஜகன்னாதனை ஆராதித்துக்கொண் டு அனேக காலமிருந்து ஒரு சமயத்தில் சகல புண் ணிய க்ஷேத்திரங்களையும் பார்க்க அபேக்ஷித்து, விஷ்ணுதேவனை நினைத்துக்கொண்டு தக்ஷிணாபி முக னாய் போய் கோதாவரி தீரத்தில் அகோப விஷ் டனாய் வல்கலாஜினங்களைக் கட்டி ஜீவித்துக்கொண்டி ருக்கும் சூரியனுக்கு சமானமான தேஜஸ்ஸை உடை யவனாய் உக்கிரமான தபசைச் செய்துக்கொண்டிரு க்க, மிருகண் மகா முனியைப்பார்த்து அவன் சமீ பத்தில் சேர்ந்த அந்த முனீந்திரன் கஜேந்திரனை ப்பார்த்து பிரத்தியுத்தானம் பண்ணி ரக்ஷிக்க விஷ்ணு

தேவன் யிந்த ரூபத்துடன் வந்தானென்று மனதில் எண்ணிக்கொண்டு அவரை அர்க்கிய பாத்தியங்க ளாலே ஆராதித்து வணக்கத்துடன் இப்படி சொன் னார். ஓ மகாத்மா! நீ வந்தபடியாலே என்தபசு பலித் தது. என் பூர்வ புண்ணிய பலத்தாலே உம்மைப் பார்த்தேன். நான் தன்னியனானேன். நீ அப்படிப் பட்ட விஷ்ணு பக்தர்கள் தரிசனம் எப்படிப் பட்ட வர்களுக்கும் துர்லபம். நீ எப்போதும் நிரஹங்கார னாய், சமதரிசனனாய், நிர்மலனாய், மனோ வாக்காய கர்மங்களில் பரமாத்மாவை நினைத்துக்கொண்டிரு உன் தரிசனம் எனக்கு அநாயாசமாகக் கிடைத்தது. நான் சகல பாபங்களினின்று விடுபட்டேன். நீ அப்படிப்பட்ட விஷ்ணு பக்தர்கள் தரிசனங்களா லே மகா பாபங்களும் நசிக்கும். நீ இந்த சன்மத்தில் விஷ்ணு பக்தனன்று. பூர்வ ஜன்மத்தில் மகா சாந்த னான விஷ்ணு பக்தன் தேவேந்திரன் மாயையாலே உனக்கு இந்த கஜரூபம் கிடைத்தது ஆனால் ரூப மாத்திரமே கஜேந்திரன். நீ சாமானியனன்று. இந்த விதமாய் அந்த மிருகண்டன் அந்த கஜேந்திரனை பக்தியாலே பூஜித்து அனேக விதங்களாக சிலாகித் தான் என்று கேட்டு பிருகு மகாரிஷி நாரதபகவா னைப் பார்த்து தேவேந்திரன் மாயையாலே அந்த மகனீயனான மகா சாந்தன் எப்படி கஜேந்திரனா னான் அதைத் தெரியச்சொல்லு மென்று கேட்க நாரதபகவான் சொல்லுகிறார். ஓ மகாத்மா! கேளும் மகா சாந்தனாய் விப்பிரோத்தமன் எப்போதும் மகா விஷ்ணுவை ஆராதித்து வருகிற மாசார நிரதனாய்

தேவத்விஜ குரு பிரிய்ஞன மௌனியாயிருக்கிற அவன் தேவ தேவனை ஆராதியாமல் எதையும் பூஜிக்கமாட்டான். எவ்வளவு பசியா யிருந்தபோதிலும் விஷ்ணுவுக்கு நிவேதனம் பண்ணாமல் புஜிக்கமாட்டான். விஷ்ணு பாதோதகத்தை யாகிலும் அவன் பானஞ் செய்யமாட்டான். புத்திர மித்திர களத்திர க்ஷேத்திராதிகளை விட்டு ஒருவனாய் சம்சாரசாகரத்தை தாண்ட அபேக்ஷித்து புண்ணிய விருக்ஷ சமேதமான திரிகூடத்தைச் சேர்ந்து நிர்ஜிதேந்திரனாய் கொண்டு, நிராசியாய் ஒருவனாய்ப் பிராணாயாம பரனாய் மூக்கு முனையில் வைக்கப்பட்ட கண்களை உடையவனாய், அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு அதிக உக்கிரமான தபசை செய்து கொண்டு அவன் தபசுக்கு பயந்து பூமி நடுங்கிற்று. சமுத்திரங்கள் க்ஷோபித்தன. சூரியன் தபியாமலிருந்தான் அக்கினி ஜ்வலியாமலிருந்தான். வாயுவானவன் வீச வில்லை. எமன் சிக்ஷியாமலே யிருந்தான். மேகங்கள் வருஷிக்க வில்லை விமானங்கள் ஆகாயத்தில் சஞ்சாரம் பண்ணவில்லை. இப்படிப்பட்ட உபத்திரவங்களைப் பார்த்து தேவதைகளெல்லாரும் பயத்தையடைய, புரந்தரன் அந்த பிராமணனை தபோபங்கத்தைச் செய்ய நினைத்து ரம்பாதி அப்சரஸ்ஸுக்களை அழைப்பித்து சாதுரத்துடன் இந்தப்படி சொன்னான். ஓ சுந்தராங்கிகளே! சதுர்முகன் எல்லா லோகங்களுக்கும் ஹிதமாய் உங்களை சிருஷ்டித்தான். நீங்கள் ரதி சௌந்தரியத்தை உடையவர்கள். மநோரமான கீதங்களுடன் பிரகாசிக்கிறீர்கள். உங்களாலே

சகல லோகங்களும் மோகிக்கப்படும். உங்கள் திருஷ்டி நிபாதங்கள், அஸ்திரங்களினுமேல எப்பவும் சத்துருஜயம் உண்டாகும். எந்த மனிதனுகிலும் எதிரில் ஸ்திரியைப் பார்த்தால் அவனுக்கு ஸமாதி யோகங்கள் உண்டாகுமோ அவன் மனசு வில்லினால் விடப்பட்ட பாணம்போலே அவர்கள் பேரில் விழும். நீங்கள் எனக்கு ஆபத்துக்காலத்தில் சகாயர்களாக ஆகமாட்டீர்கள். உங்களுக்கு சர்வலோகங்களில் அசக்கியமானது ஒன்றும் கிடையாது. எங்களுக்கு அதிக பயங்கரமான ஆபத்துகள் நேரிட்டு இருக்கிறது. நீங்க ளதுகளை போக்கடியுங்கள் என்று கேட்க, அந்த அப்சரஸ்ஸுக்களில் முக்கியமான ரம்பை அந்த சுரேந்திர[illegible] நமஸ்காரஞ் செய்து கரங்களைக் குவித்துக்கொண்டு இப்படிச் சொன்னாள். ஓ தேவா! எங்களையெல்லாம் ரக்ஷிக்கிறவன் நீ அல்லவா? எங்கள் ஜீவிதங்கள் உங்கள் தனங்கள் நீங்களென்ன ஆக்கியாபித்தபோதிலும் செய்யத்தக்கவர்கள். பிரமலோக கைலாசங்களுக்கு ச்வேத த்வீபத்துக்கு ஆனாலும் போய் வரச்சொன்னால் போய் வருகிறோம். உங்களுக்கு விரோதிகள் எங்கே யிருந்தபோதிலும் அவர்களைச் சேர்ந்து எங்கள் திருஷ்டியாகிற பாணங்களாலே பிடிக்கப்பட்டவர்களெல்லாரும் எங்கள் கால்களில் விழுவார்கள் என்று ரம்பையினுடைய சொற்களைக் கேட்டு இந்திரன் தன்னை கிருத கிருத்தியனாய் எண்ணிக்கொண்டிப்படி சொன்னான். ஓ சுந்தரீமணி! திரிகூட பர்வதத்தின் மேலே மகா சாந்தனாய், ஒரு விப்பிரன்

ஜிதேந்திரியனாய், ஸர்வேசுர பராயணனாய், நியமவ
காரனாய் அதிக பயங்கரமான தபசை செய்துக்
கொண்டிருக்கிறான். அவனுடைய தபசினாலே எல்லா
லோகங்களும் பீடிக்கப்பட்டதாய் விட்டது. அவனு
டைய மனோ அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள
வில்லை. உங்களுக்கு பிரியர்களாய் அவன் சமீபஞ்
சேர்ந்து உங்கள் ரூப யௌவனங்களை அவனுக்குக்
காட்டி அவன் தபசை கெடுத்து வாருங்களென்று
சொல்ல, ரம்பாதிகளெல்லாரும் அந்த பாக சாசன
னுடைய ஆக்கினையை தலைமேல் வைத்துக்கொண்டு
அதிக வேகத்துடன் திரிகூட பர்வதஞ் சேர்ந்து அவ்
விடத்தில் காற்றில்லாமலிருக்கும் இடத்திலிருக்கப்
பட்ட தீபம் போலே சலிக்காமல் மூக்கு முனையில்
வைக்கப்பட்ட நேத்திரங்களை உடையவனாய் அதிக
தபசினாலே இளைத்திருக்கும் சரீரத்தை உடையவனாய்
ஜொலித்துக்கொண்டிருக்கும் அக்னி தேஜஸை
இருதய கமலத்தில் புண்டரீகாக்ஷனை வைத்துக்
கொண்டு அதிக தபசை செய்துக்கொண்டிருக்கும்
மகா சாந்தனான முனியைப் பார்த்து அவன் சமீபத்
தில் மதுரமான கானத்தை மனோகரமான நிர்த்தனங்
களையுஞ்செய்துக்கொண்டு சிரித்துகொண்டு பரிகா
சஞ் செய்துக்கொண்டு, அனேக விதமன்மத விலா
சங்களைச் செய்ய அவர்களுக்கு சகாயமாய் இந்திர
னால் ஏவப்பட்டவர்களாய் தபனன் தகிக்கவில்லை.
பவனன் அதிக பரிமளத்துடன் வீசினான். சந்திரன்
அதிக ஆஹ்லாதகாரியாய் இருந்தான். இப்படியெல்
லாம் தங்களுக்கு அநுகூலமாயிருக்க, அந்த அப்சர

சுக்கள் அனேக விதசேஷ்டைகளை செய்தபோதிலும்
அந்த முனி சிரேஷ்டன் மனசில் ஸ்ரீமந்நாராயணனை
தியானித்துக்கொண்டு தனக்கெதிரிலிருக்கிறவர்களை க
ண்களைத் திறந்தாகிலும் பார்க்கவில்லை. அப்பொழுது
அந்த அப்சரசுக்களெல்லாரும் லஜ்ஜையையும், ரோஷ
த்தையும், பயத்தையும் அடைந்து இப்படி சொன்னார்
கள். இந்த துஷ்ட சித்தனையர் நம்மை நிராகரித்து
கண்களைத் திறக்காமல் மூடனாய் இருக்கிறான். தன
க்கு தபசின் பலம் பலித்ததென்று தெரிந்துகொள்ள
மாட்டான். தேவராஜன் நம்மைப் பார்த்து தானெ
ன்ன தன் சஹஸ்ர நேத்திரங்கள் சாபல்யத்தை
அடையும். நமக்காக லோகத்தில் ஜனங்களெல்லா
ரும் எக்கியத்தையும், தானங்களையும், தர்மங்களையும்
உக்கிரமான தபசுக்களையும் பண்ணிக்கொண்டிருப்
பார்கள். எந்த மனுஷியனாகிலும் மனோஹரங்களான
நம்முடைய ஆலாபங்களை கேளாமலிருப்பானா? அவன்
வியர்த்த ஜீவனத்தை உடையவன். எந்த மனுஷிய
னாகிலும் அதி துர்லபமான ருசிராங்கிஸ்தனாலிங்கனங்
களை அடையுவான். அவனே தன்னியன். பிராம
ணன் பால்லியத்தில் வித்தைகளை யௌவனத்தில்
போகங்களை விருத்தாப்பியத்தில் தபசுகளையும்
அடையவேண்டியது. துர்புத்தியை உடையவன்
யௌவனத்தில் இப்படிப்பட்ட ரூபத்தை உடைய
வனா யிருந்துக்கொண்டும் கோரத் தபசைச்
செய்துக்கொண்டிருக்கிறான். இவன் அக்கியானத்
தாலே அக்காலத்தில் செய்யும் தபசு நிரர்த்தமென்று
தெரிந்துகொள்ளமாட்டான். தபசினுடைய பலத்

தாமே சகுந்தலாதேவியினுடைய தரிசனம் அகப்படு
மென்று தெரியாது. இவன் தபசின் பலத்தை
விட்டு என்ன தபசை பண்ணுகிறவன் கையில்
இருக்கும் ரத்தினங்களைவிட்டு அன்னங்களை தேடு
றுகிறவன் எப்படிப்பட்டவன் லோகத்தில் ஜனங்
களெல்லாரும் இவ்விய ஸ்திரிகளை அடைவார்கள்.
இவன் நம்மை நிராகரித்து இருப்பவன். இப்படிப்பட்
ட துர்புத்தி யெங்கேயாவது உண்டா பூஜ்ஜியர்களை
பூஜியாமலிருப்பவன் தபசு நிரர்த்தகமென்று இப்படி
அநேக விதங்களாக சொல்லிக்கொண்டிருக்கும்
ஸ்திரீகளைப் பார்த்து அந்த தபஸ்வீரனைப் இவர்
கள் நம் தபோவிக்கினத்தைப்பண்ண வந்தவர்கள்
எந்த துஷ்டனாலுப்பிறேனோ ஸ்திரீகள் சகல ஆபத்து
களுக்கும் மூலம். சாஸ்திரங்கள் யோசனங்கள் ஆஸ்
திக்கியம் தர்ம சீலத்வம் புத்தி ஸ்திரீகள் தரிச
னத்தினாலே நசிக்கும். சாஸ்திரக் கியானியிருப்
பவன் அதிக தைரியத்தாலே ஸ்திரீகளைப் பார்த்து
மோகிக்கமாட்டான். பிரமாமகன் ஸ்திரீகளை நரகத்
துவாரமாக சிருஷ்டித்தான். அவர்கள் பார்க்கத்தக்க
வர்களல்ல லோகத்தில் ஸ்திரீ புருஷர்கள் சங்கமத்
தில் பிரஜாவிருத்திகளாகும் புருஷர்கள் எப்படிப்
பட்டவர்களானாலும் ஸ்திரீகளைப்பார்த்து மோகிப்
பார்கள். புருஷர்களைப் பார்த்து ஸ்திரீகள் ஒருவருக்
கொருவர் அக்கியானத்தாலே சிரிப்பார்களோ அக்கி
யானத்தைவிட்டு விஷயசுகத்தைவிட்டு ஜனசூன்னிய
ங்களான இந்தக்காட்டில் தபசை பண்ணுகிறவன்
அந்த தபசுக்கு எப்படி விக்னங்கள் வந்தது. ஸ்திரீ

கள் தபோ விக்னகாரிகளல்ல? இப்பொழுது என்ன
செய்யப்போகிறேனோ விஷய மகாஹிராஹங்களையுடை
த்தாய் அதிக பயங்கரமான இந்தசம்சார சமுத்திரத்
தை எப்படி தாண்டுவதென்று இந்த விதமாய் அந்த
தபசி தர்ம லோப பயத்தாலே பீடிக்கப்பட்டு
ஜிதேந்திரியனாய் சர்வ சமதர்சனனாய் கொண்டு அதி
குரூரங்களான மன்மத பாணங்களை ஜெயிக்க, ஆதி
தேவனான மகாவிஷ்ணுவைச் சரணமடைந்தான். அப்
பொழுது அப்சரஸ்திரீகள் சஞ்சலமாயிருக்கும் அந்த
முனியைப்பார்த்து சாப பயத்தினாலே சஞ்சலமான
மனத்தை உடையவர்களாய் விருதாவானப் பிரயாசர்
களாயிருந்தார்கள்.

பதிமூன்றாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகு நாரத சம்வாதத்தில் ஹஸ்தகிரி மகாத்மியத்தில் மிருகண்ட மதங்கஜ சம்வாதத்தை உடைய

பதினாலாவது அத்தியாயம்

பிருகு மகாரிஷியைப்பார்த்து நாரதபகவான் சொல்லுகிறார் :- நாரதமகரிஷே! கேளும் அப்படிப் பட்ட தபஸ்வீரனாய்க் கொண்டு பரமாத்மாவை ஸ்தோத்திரம் பண்ணினார். ஓ தேவதேவா! சூக்ஷம புத்திபிரதனான வரதன் வரேண்ணியனான ; சமஸ்த துக்க நிவாரகனாய் ஆதிமத்தியாந்த ரகிதனாய் புராண புருஷனாய் பராத்பரனாய் நிராச்சிரயனாய் நிஷ்களனாய் அப்பிரமேயனாய் சகல ஹிருதய கதனாயிருக்கும் உன்னை சரணமடைந்தேன். லோகத்தில் ஜன்மவிருத்தி க்ஷயங்களுக்கும் காரணனாய் சங்க சக்ரகதாதாரியாய் குணாச்சிரயனாய் நிர்க்குணனாய் ஜகன்னிவாசகனான உன்னை நான் சரணமடைந்தேன். பிரம ருத்திரேந்திராதிகள் உன்னுக்கிஷியில் இருக்கப்பட்டவர்கள். க்ஷவரேசனாய் பத்மநாபனாயிருக்கும் உன்னை சிலாகிப்போம். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் உன்னை ஆச்சிரச்சியிருக்கும் நீ ஆத்ம திருப்தன் விமலன் சோகமில்லாதவன் சகஸ்ஸிர கைகளை உடையவன் உன்னை ஆசிரிப்பவர்கள் உன்னிடத்தினின்றும் பிரகுருதி விகுருதிகள் உதிக்கும் நீ அவ்

வியன் நீ அஜன் நீ சனாதனன் சஹஸ்திர நேத்திரங்களையுடையவன் நீ துருவன் உன்னை சேவிப்போம். உன்னிடத்தினின்றும் ஜகங்கள் உண்டாயிற்று. உன் முகத்தினின்றும் வேதங்கள் உண்டாயிற்று நீ ஏகரூபி நீயே பதரூபி ப்ரிய ; பதி என்றுமேல் உதாசனன் சூரியன் பிரகாசிப்பார்கள். நீயே பரஞ்சோதி நீ அஜன் சிவனாயிருப்பவன் உனக்கு அனேக வந்தனங்களைச் செய்கிறோம். நீ தேவாதி தேவனாயிருப்பவன் நீ இந்த லோகங்களெல்லாம் நாசம்பண்ணி மகாரண்ணிய மத்தியத்தில் வடபத்திர சாயியாய் தூங்குவாய், சமுத்திரத்தில் அனேகவித தரங்கங்கள் உண்டாகிறதுபோல் உன்னிடத்தினின்றும் சகலங்களும் திரும்பி உண்டாகும். அபார சம்சார சமுத்திரத்தில் முழுகிப்போகிறவர்களுக்கெல்லாம் கதி நீயே. அச்சுதன் பத்மபத்திர விசாலாக்ஷன் சதுர்புஜனாயிருக்கிற உன்னை சரணமடைய பிரார்த்திக்கிறேன் நீ இந்த லோகத்தில் ரக்ஷிக்கக்கோரி நரசிம்மா கிருதியை அடைந்து அதிக உக்கிரனான இரணிய கசிபு வக்ஷஸ்சை நகங்களால் பிளந்தாய். அப்படிப்பட்ட உனக்கு அனேக பிரநாமங்களை செய்கிறோம் பரமகல்யாண குணங்களை உடையபரமாத்மா சஹஸ்ஸிர சிரசை உடையவன் சர்வகாலத்திலும் பிரகாசிப்பவன் கமலநேத்திரன் உனக்கு வந்தனங்களைச்செய்கிறேன் திரிமூர்த்திகள் நீதான் சமஸ்த சுஹிருத்து நீதான் சங்கசக்கரகதாதாரி நீதான் கேயூரமகுடாதி லோகங்களை தரிப்பவன் நீதான் உன்னை ஸ்வாமிக்க என் பூஷணபூஷிதன் நிர்விகாரன் உன்னை ஸ்வாகிக்க என்

தராமா. சரணாகதனான என்னை ரக்ஷியும் சகல பூதங்
களுக்கு ஆசிரியன் நீதானே உன்னிடத்தில் அசஞ்சல
மான பக்தியை பண்ணும்படியான புத்தியைக்கொடும்
உன் பக்தர்களுக்கு என்றைக்காகிலும் பராபவமுண்
டாகுமா. எனக்கு உண்டாயிருக்கும் பயத்தை
போக்கடித்து ரக்ஷியுமே. நீ பாதஸ்மரணம் என்
கே காமவிகாரமெங்கே இந்த இரண்டும் தேஜஸ்தி
மிர நியாயமாயிருக்கும் உன் பாதாரவிந்த மகரந்த
பானாசக்த மனதை உடையவனாய் என்னை காமவிகா
ரம் பற்றாதிருக்காமல் செய்யுமே நீ பிரசன்னமா
னால் அலப்பியமானது ஏதுவுமில்லை. உன் பக்த
னுக்கு சுவர்க்காபவர்க்கங்கள் துர்லபங்களல்ல.
உன்னால் பார்க்கப்பட்டவனுக்கு பக்தி உண்டாகும்.
உன் தரிசனமில்லாதவருக்கு போகத்தில் அபிலா
ஷை உண்டாகும். நான் அனன்னிய சரணன் எவ
னோ என் சமாதிபங்கத்தைச் செய்ய இந்த பிரயத்தி
னத்தைச் செய்தான். எனக்கு நீயே கெதி. என்னை
காத்து ரக்ஷியுமென்று தன் ஹிருத்புண்டரீகத்திலிரு
க்கும் வாசுதேவனை நினைத்துக்கொண்டு அந்த பிரா
மணன் சமாதியில் நிர்த்தனாகவே யிருந்தான். அப்
பொழுது அந்த அப்சரசுக்கள் எல்லாரும் தாபசோத்
தமனைப் பார்த்து நிராசாளாயும் நிர்லஜ்ஜாளாயும் உ
த்சாகமில்லாதவர்களாயும் கௌரமில்லாதவர்களாயும்
அமரேந்திரன் சமீபத்தைச் சேர்ந்து அந்த முனீந்தி
ரன் விருத்தாந்தத்தைத் தெரிவிக்க, விஷண்ணவதனாய்
தேவேந்திரன் கொஞ்சகாலம் விசாரித்து அந்தமுனி
தபோபங்கத்தைப் பண்ண தானொரு கஜரூபத்தைத்

தரித்து அனேககரணி சமூகங்களுடன்கூடி அந்தமுனி
சமீபத்தைச் சேர்ந்து அவனுக்கு எதிரில் மெள்ள
மெள்ள நடந்துக்கொண்டு கரிணிகளுடன் கூடி காம
மோகிதனாய் ரமித்துகொண்டு யதேச்சியாய் திரிந்து
கொண்டிருக்க மகேந்திரன் மாயையாலே அந்த தப
ஸ்ரேஷ்டனை காமமோகிதமான அந்த கஜத்தை
அடிக்கடி பார்த்திருக்க அப்போது பார்த்த தோஷத்
தாலே அந்த முனியானவன் மகாகஜமாய் பிறந்து
மகாபலத்தையுடையதாய் அனேக கரிணிகளுடன்
சேர்ந்து மோகத்தாலே ரமித்துக்கொண்டு தன் பூர்வ
ஜன்ம கர்மத்தை நினைக்காமல் இந்திரன் மாயையா
லே விஷ்ணுவின் பக்தியைவிட்டு காமாந்தனாய் வெகு
காலமாய் சஞ்சாரஞ் செய்கையில் ஒருநாள் தெய்வ
யோகத்தாலே சாளிக்கிராமதீர்த்தம் சேர்ந்து அதி
மதத்தாலே அதில் முழுகினதினாலே எல்லா தோஷத்
தையும்விட்டு பூர்வ ஜன்ம ஸ்மரணம் உண்டாய் ஜித
குமாரனாய் ஜிதேந்திரியனாய் சர்வசங்க விமுக்த
னாய் சர்வ பூதாந்தர்யாமியான விஷ்ணுவை நிரந்தரம்
அர்ச்சித்துக்கொண்டு பூமியில் இருக்கும் புண்
ணிய தீர்த்தங்களெல்லாம் சஞ்சரித்துக்கொண்டு
கோதாவரி தீரத்தில் தபசு பண்ணிக்கொண்டி
ருக்கும் மிருகண்ட மகாமுனி சமீபத்தைச்சேர்ந்து
அந்த தாபசோத்தமன் விஷ்ணு பக்தனான் அந்த
கஜேந்திரனைப் பார்த்து அதி பிரீதியுடன் எதிர்
கொண்டுபோய் அனேக விதங்களாய் பூஜித்து தன்னை
ரக்ஷிக்கும்பொருட்டு விஷ்ணுதேவன் இந்த ரூபத்து
டன் மகாவிஷ்ணு வந்தாரென்று மனதில் என்

வரித்துக்கொண்டு அவரை அனேக விதங்களாய் ஸ்தோ
த்திரித்தான். ஓ மகாத்மா! உன் தரிசனத்தாலே கிரு
தார்த்தனானேன். என் புண்ணியம் பலித்தது நான்
பண்ணின பூர்வ புண்ணிய பலத்தாலே விஷ்ணு பக்
தனான உன் தரிசனம் கிடைத்தது. நீ யெப்போதும்
விஷ்ணு பக்தியை உடையவன் உன் கீர்த்தி சாஸ்வத
மாயிருக்கும். நீ பூர்வ ஜன்மத்தில் மாதவனை ஆரா
தித்தவன். இப்பவும் பூஜிப்பாய். புண்ணிய புருஷர்
களில் உத்தமன். பூஜ்ஜியர்களில் பூஜ்ஜியன். பக்தவச
சலனான புருஷோத்தமன் உன்னிடத்தில் இருக்கி
றான் உன் போலிருக்கிறவர்கள் விஷ்ணுபக்தர்களை ஆராதிக்
கிறது ஸ்மரணை பண்ணுகிறது எல்லா பாபங்களை
நசிக்கப்பண்ணும். விஷ்ணுதேவனை பூஜிக்கிற விஷ்ணு
பக்தர்கள் நல்ல விருத்தியிலிருந்தாலும் கெட்ட
விருத்தியிலிருந்தாலும் எப்படிப்பட்டவர்களுக்கும்
பூஜ்ஜியர்கள். நீ இந்த கோதாவரி தீரத்தில் என்னி
டத்தில் சிலகாலமிருந்து இந்த கமலங்களினாலே
விஷ்ணுதேவனை அர்ச்சியுமே. உன் பிரசாதத்தாலே
நான் அதைப் பார்த்து கிருதார்த்தனாவேனென்று அந்
த மிருகண்டு மகாமுனி பிரார்த்திக்க அந்த கஜேந்திர
னப்படியே அவ்விடத்தில் அனேகவித சுகந்த புஷ்
பாதிகளாலே நிரந்தரம் விஷ்ணு பூஜையைப்பண்ணி
க்கொண்டிருந்தார்கள்.

பதினாலாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் அஸ்தகிரி மகாத்மியத்தில்
கஜேந்திர மோக்ஷ கதையை யுடைய
பதினைந்தாவது அத்தியாயம்.

நாரதபகவான் பிருகு மகாரிஷியைப் பார்த்து
சொல்லுகிறார். ஓ முனீந்திரா! இப்படி அந்த கஜேந்
திரன் கோதாவரி தீரத்தில் நித்தியமாய் கமலங்களி
னாலே சாக்ஷாத் தேவனை அர்ச்சனை செய்து அந்த
முனீந்திரனாலே அனேக விதவிசித்திர கதைகளைக்
கேட்டுக்கொண்டு அந்த முனியுடன் கூடிக்கொண்டு
வெகு காலம் அங்கே யிருந்துகொண்டு ஒரு நாள்
அந்த முனியைப்பார்த்து ஓ மகாத்மா! இந்த லோ
கத்திலிருக்கும் புண்ணிய க்ஷேத்திரங்களையும் புண்
ணிய நதரங்களையும் புண்ணிய பர்வதங்களையும் காண்
பியும் என்று பிரார்த்திக்க, அந்த முனியானவர் இப்
படிச் சொன்னார். கஜேந்திரா! இந்த லோகத்தில்
புண்ணிய நகரங்கள், பர்வதங்கள், அனேகங்களிருக்
கிறதுகள். அதுகளைக் கணக்கிட என்னால் தரமல்ல.
அதுகளில் முக்கியமானதுகளை சொல்லுகிறேன்
கேளும். அயோத்தியா, மதுரா, மாயா, காசி, காஞ்சி,
அவந்திகா, துவாரவதி, யிந்த எழு புரங்கள்
முக்தியைக் கொடுக்கத்தக்கது. மந்தாரம், ரைவதம்,
சஹ்யம், மகேந்திரம், கந்தமாதனம், ஹிமவந்
தம், ஹஸ்தி சைலம், இந்த எழு பர்வதங்களும் முக்
திப் பிரதங்கள். அந்த எழு புரங்களில் காஞ்சிபுரம்,
எழு கிரிகளில் அஸ்தகிரி உத்தமங்கள். அந்த

அத்திகிரியில் கமலாசனன் அசுவமேதத்தைச் செய்தான். அச்சுதன் எப்பொழுதும் வன்னிஹிதனாகயிருக்கிறான். அது எல்லாம் பர்வதங்களுக்கும் சிரேஷ்டமானது. அந்த காஞ்சிபுரத்தில் சதுர்முகன் செய்த யாக வேதிகையால் வரதன் உற்பவமானான். ஆகையினாலே அந்தப்புரம் எல்லா புரங்களுக்கும் சிரேஷ்டமானது. அந்த சத்திய விருத க்ஷேத்திரத்தில் வேகவதி தீரத்தில் விஷ்ணுவானவர் வரதனாய் ஆவிர்ப்பவித்து எல்லாருக்கும் அபீஷ்டங்களைக் கொடுத்துக்கொண்டு எப்பவும் இருக்கிறவன் ஆகையால் அந்த சத்திய விருத க்ஷேத்திரத்தில் சகல பாபநாசகரங்களான எந்த க்ஷேத்திரங்களும் அதற்கு சமானமாகமாட்டாது. அந்த க்ஷேத்திரத்தில் புண்ணியகோடி விமானத்தில் இருக்கும் வரதனைச் சேவை பண்ணுகிறவர்களெல்லாரும் பாபங்களினின்றும் விடுபடுவார்கள். எந்த மனுஷியனாகிலும் விருச்சிக மாசத்தில் கந்த புஷ்பாதிகளாலே அந்த வரதனை அர்ச்சிப்பானேயானால் அவன் முக்தியை யடைவான். அவ்விடத்தில் பாப நிவாரணமான அநந்த தீர்த்தமென்றும் வேகவதியென்றும் இரண்டு தீர்த்தங்களிருக்கிறதுகள். அந்த இரண்டில் அநந்த தீர்த்தம் உத்தமம், அதற்கு சமானமானது ஏதுவுமில்லை. எந்த மனுஷியனாகிலும் சத்திய விருத க்ஷேத்திரத்துக்குச் சமீபத்தில் இருக்கும் வேகவதி நதியில் ஸ்நானம் பண்ணினாலும் அவனுக்கு ஆயிரம் அஸ்வமேதயாகபலம் உண்டாகும். எந்த மனுஷியனாகிலும் புண்ணியகோடி விமானச் சாயையுடன் கூடிக்கொண்டிருக்கும்

அநந்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினாலும் விஷ்ணுலோகம் சேருவான். அந்த காஞ்சிபுரமானது மூன்று யோசனை தூரம் விஸ்தாரமாயிருக்கும். சகல லோகங்களிலும் பிரசித்தமானதாயிருக்கும். சகல பாபஹரமாயிருக்கும். அந்தப் புரமத்தியில் இப்பவும் புண்ணியகோடி விமானம் எல்லாராலேயும் பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலிருக்கும் வரதனை எந்த மனிதனாகிலும் புஷ்ய சுத்த ஏகாதசி தினம் உபவாசமிருந்து துவாதசியில் வேகவதியில் ஸ்நானம் பண்ணி பாயசத்தாலே பூசிப்பானேயானால் அவன் மறு ஜன்மம் எடுக்கமாட்டான். ஓ கஜேந்திரா! நீ அவ்விடத்துக்குப்போ அந்த வேதிகை மத்தியிலிருக்கும் வரதனைப் பார்த்தால் உன் கண்கள் சபலங்களாகும். இதற்குச் சந்தேகமில்லை. நீ அவ்விடம்போ, முதல் அந்த அநந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அநந்தனைப் பார்த்து அந்த பர்வத விவரமூலத்தில் எல்லாருக்கும் கண்ணில் படாமல் நரசிம்ம தேவனைக்குறித்து அதியுக்கிரமாய் தபசு பண்ணிக்கொண்டிருக்கும் புலஸ்தியனையும் பாரும். அவன் பிதாமகனாலே உபதேசிக்கப்பட்டிருக்கிற நரசிம்ம மந்திரத்தை ஜபித்துக்கொண்டு சிம்ம வியாக்கிராதி பயத்துக்காக தானிருக்கும் பிலத்துவாரத்தை ஒரு சிலையால் மூடிக்கொண்டிருக்கும் அவனையும் தரிசனம் பண்ணி அவனுடைய ஆக்கினையினாலே நரசிம்ம தேவனை ஆராதித்து அஸ்தகிரிக்கு பிரதக்ஷணமாக நமஸ்காரம் பண்ணி அதிலிருக்கும் ஜகன்னாதனான வரதனை ஆராதியும். பிரம்மதேவன் உனக்கு சாலோக்கியத்தைக்

கொடுப்பானென்று மிருகண்டு முனி சொன்னதைக்
கேட்டு கஜேந்திரன் அப்பொழுது சத்தியவிருத சே
த்திரம் சேர்ந்து அனந்தருலேயும், புலஸ்தியருலேயும்,
ஆக்கிரமிக்கப்பட்டவருய் வரதனை மூன்று காலத்தி
லும் காஞ்சிபுரத்தில் விஸ்வகர்மா நிர்மிதங்களான வபீர
கூப தடாகங்களிலிருக்கும் சுவர்ண கமலங்களாலே
பூஜித்துக்கொண்டு சுகமாயிரு. அந்த கஜேந்திரன்
அனேக கரிணிகளுடன் கூடி சஞ்சரிக்கிறதா
லே அவ்விடத்தில் சிம்ம வியாக்கிராதியங்கள் இடை
யாது. ஆகையாலே பக்கத்து மனுஷியர்கள் பயமில்
லாமல் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். புலஸ்
தியன் தானிருக்கும் பிலத்தை மூடி இருப்பான்.
கல்லைத் தள்ளி நரசிம்ம தேவனைப் பூஜைப் பண்ணிக்
கொண்டிருந்தான். இப்படி கஜேந்திரன் சர்வகாலத்
திலும் அனேக விதபுஷ்பங்களாலே வரதனைப்பூஜித்
துக்கொண்டு ஸ்தோத்திரத்தைப் பண்ணிக்கொண்டு
அந்த ஜகன்னாதன் கதையைக் கேட்டுக்கொண்டு சில
காலம் யோகத்தில் நிர்த்தனுயும் சில காலம் பூஜையில்
நிர்தனுயும் மனதில் விஷ்ணு தேவனை நினைத்துக்
கொண்டு உறுதியான பக்தியாலே கர்ம யோகத்
தாலே அந்த தேவனை சந்தோஷிப்ப கோரி, பிரதி
தினங்களிலும் பதினுலாயிரம், கமலங்களாலே பூஜித்
துக்கொண்டு திரேதாயுகாந்திரம் வரையில் இருந்
தான். அந்த காலத்தில் ஆயிரம் வருஷகாலம் மழை
யில்லாமல் பூமிகளெல்லாம் திருண விருக்ஷ லதா குன்
னியங்களாய் சுஷ்கங்களாய் விட்டதுகள். அப்பொழு
து கஜேந்திரன் அதிக பிரயாசத்தாலே கமலங்களைக்

கொண்டுவந்து வரதனைப் பூஜித்துக்கொண்டிருந்த.
ஒரு சமயத்தில் பூமிகள் நாலு திக்குகளிலும் திரிந்
தும் கமலங்களைப் பாராமல் அதிக துக்கத்துடன்
கூடினவனுய் கொண்டு இவ்விதமாய் சிந்தனையுற்றது.
நான் எல்லா இடங்களிலும் தேடினுலும் கமலங்கள்
அகப்படவே இல்லை. என் சரீரங்களெல்லாம் சிதி
லங்களாய் விட்டது. கண்கள் சுழல்கிறது, மனசு
சஞ்சலிக்கிறது. வாய் உலர்ந்து விடுகிறது. இனி
நானென்ன செய்வேன். எனக்குச் கதியென்ன வென்
று துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது, திரிகூட
சிகர பர்வதத்தினின்றும், கமலங்களுடைய வாசனை
யால் மதுரங்களாய் அலைகளுடைய சம்மந்தத்தாலே
சீதளங்களாய், உஷ்ணங்களாலே தப்தங்களாயிருக்
கும் ஜனங்களுக்கு சந்தோஷகரங்களாய் காற்று
வீசிற்று. கஜேந்திரன் அதிக சந்துஷ்டனுய்
கொண்டு அந்த க்ஷணத்திலேயே அவ்விடம் போய்
பத்து யோசனை விஸ்தாரங்களாயும் நூறு யோசனை
தூரம் நீள முள்ளதாயும் நிர்மல ஜலங்களையும்
உடைத்தாய் குமுத, கல்ஹார புஷ்பங்களுடன் கூடி
னதாய், வகுள, சூத, சம்பக, புன்னகாதி, பகு விரு
க்ஷ சேவிதங்களா யிருக்கும் ஒரு சரோவரத்தைப்
பார்த்து ஆனந்தத்துடன் அதில் பிரவேசித்து காஞ்
சன கமலங்களைப் பறித்துக் கொண்டிருக்க மகா கோ
ரைப் பற்களாலே அதிக பயங்கரமாயிருக்கும் ஒரு
முதலையானது அந்த கஜேந்திரனைப் பாதத்தில் பிடி
த்துக்கொண்டது. மகா பலசாலியான அந்த கஜேந்
திரன் அதிக கோபத்துடன் அதைக் கரைக்கு இழுக்க

அந்த முதலை உள்ளுக்கே இழுத்துக்கொண்டது. இப்படி அவை இரண்டும் அனேக காலம் சண்டை போட்டுக்கொண்டிருக்க, அந்த ஜலசரத்தின் பலம் அதிகமாக ஆய்விட்டது. கஜேந்திரன் பல க்ஷீணமாய் விட்டது. அப்பொழுது கஜேந்திரன் கந்தக கண்டத்தை யுடையவனாய் தூக்கிக் கொண்டிருக்கும் நேத்திரத்துடன் பிராமணனைத் தரிக்கமாட்டாமல் கண் ஜலத்தை விட்டுக்கொண்டு கை கால்களை அசக்கமாட்டாமல் நின்றுவிட்டது. அப்போது, ஆபத்நிவாரகனை, வரதனை ஸ்தோத்திரஞ் செய்துக்கொண்டு இப்படிச் சொல்லிற்று. ஓ தேவ தேவா! உன்னை சரணமடைந்தேன். மகா வேதனையாலே பிடிக்கப்பட்டவனாயிருக்கும் என்னை ரக்ஷகனான நீ ரக்ஷிக்க வேண்டியது. நீ சகலங்களுக்கு மாதாரமானவன். இனி நிமிஷம் உபேக்ஷித்தால் நான் மரணமடைவேன் என்று சொல்லிக்கொண்டு தீனனாய்ப் பிரார்த்திக்கிற அந்த கஜேந்திரனைப் பார்த்து பக்த வரதனான வரதன் அதிவேகத்துடன் கருடாரூட ரூபனாய் வந்து தன் சக்கரத்தாலே அந்த முதலையைப் பிளக்க, அது அந்த க்ஷணத்தில் கந்தர்வனாய் கொண்டு புருஷோத்தமனைப் பிரார்த்தித்துக்கொண்டு தன் லோகத்துக்குப்போயிற்று. அப்பொழுது கஜேந்திரன் விஷ்ணு பாதத்தில் சுவர்ண கமலங்களாலே பூஜித்து பிரணதாரியாய் ஸேவிக்கும்போது புண்டரீகாக்ஷன் ஆதரவுடன் அவன் சிரத்தை கைகளால் ஸ்பர்சித்து அவனும் சாலோக்கிய பதவியைக் கொடுத்தார். அப்பொழுது அந்த கஜேந்திரன் அந்த ரூபத்தை விட்டு

மகா சாந்தனாய் தபோ நிஷ்டனாயிருக்க வரதன் தன் பக்தர்கள் மஹாத்மியங்களெல்லாம் அவருக்கு தெரியச்சொல்லி அவனை கருடன் மேலேற்றிக்கொண்டு சித்த கந்தர்வர்களாலும் முனிகளாலும் சேவிக்கப்பட்டு அத்திகிரியைச் சேர்ந்தார். இப்படி வரதன் திரேதாயுகாந்தரம் வரையில் கஜேந்திரனால் பூஜிக்கப்பட்டு அவனுக்கு சாலோக்கியத்தைக் கொடுத்தார்.

பதினைந்தாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் பிரகஸ்பதி சாப விமோசன கதையையுடைய

பதினொருவது அத்தியாயம்.

பிருகு மகாரிஷி நாரதபகவானைப்பார்த்து ஓ முனீந்திரா! தேவகுருவினாலே வரதன் எப்படி பூஜிக்கப்பட்டான். அந்த விதத்தை சவிஸ்தாரமாய் தெரியப்படுத்தக் கோருகிறேன். அவரிப்படிச் சொல்லுகிறார். ஓ மகாத்மா! கேளும் திரேதாயுகம்போய் துவாபரயுகம் வரும்போது தேவாசுரர்களுக்கு அதிககோரமான யுத்தம் நடந்தது. அதில் பலத்தாலே மதித்திருக்கிற தானவர்களுக்கு பயந்து ஓடிப்போன தேவதைகள் பயத்தாலே சுவர்க்க லோகத்தைவிட்டு பிதாமகன் சமீபத்துக்குப்போய் தீனராய் சேவித்து இப்படிச் சொன்னார்கள். ஓ தேவா! ராக்ஷசர்களுக்கு பலம் அதிகம். எங்களுக்கு பலம் க்ஷீணித்திருக்கிறது. இது எதனாலே, தெரியப்படுத்தப் பிரார்த்திக்கிறோம். கமலாசனன் சொல்லுகிறார். ஓ தேவதைகளே! தேவ குருவான பிரகஸ்பதி, முனிகள் சாபத்தாலே உங்களைவிட்டு நீங்கிபோனார். ஆகையினாலே உங்களுக்கு பலம் குறைந்தது. அசுரர்களுக்கு பலம் அதிகரித்தது. உங்களுக்கு யிப்படிப்பட்ட உபத்திரவம் உண்டாயிற்று. பூமி நவக்கிரக பீடிதமாய்விட்டது. ஆகையால் அந்த குருவை அழைப்பித்தால் உங்களுக்கு நல்லதாகும். அவர் சத்தியவிரத

118221

க்ஷேத்திரத்தில் அநந்த ஸரோவர தீரத்தில் முனி ரூபத்துடன் தபசை பண்ணிக்கொண்டிருக்கிறார். பிரதி வருஷம் வரதரை சேவிக்க சித்திராபௌர்ணமி தினம் அவ்விடத்துக்குப்போவேன். நீங்கள் அவ்விடத்துக்குவாருங்கள். எல்லாரும் போங்களென்று சொல்ல, அவர்களெல்லாரும் சந்தோஷித்து உடன்கூடிக் கொண்டுபோய் விரிஞ்சி சொன்ன பிரகாரம் சித்திராபௌர்ணமி காஞ்சி நகரம் சேர்ந்தார்கள். பிதாமகனும் அப்பொழுது வந்தார். அவர்களெல்லாரும் வரதனை பூஜித்து அவ்விடத்தில் புண்ணியகோடி விமானத்திற்கு யெதிரில் விப்ர ரூபத்துடன் தபசைப்பண்ணிக் கொண்டிருக்கும் குருவைப்பார்த்தார்கள். அப்பொழுது பிதாமகன் வரதனை ஆராதித்து இப்படிச்சொன்னார். ஓ மகாத்மா! லோகங்களுக்கெல்லாம் ரக்ஷகன் நீ. சுவர்க்கத்துக்கு அதிக உபத்திரவமுண்டாயிருக்கிறது. அக்ஞானத்தாலே தன்னை சரணமடைந்த சுனிகையை பரித்தியஜித்து அந்த பாபத்தாலே பீடிக்கப்பட்டு இப்படிப்பட்ட துன்பம் ஸம்பவிச்சது. சுரரெல்லாரும் அசுரராலே பீடிக்கப்பட்டார்கள். இந்திராதிகளெல்லாரும் உன்னைச் சரணமடைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு பிரியமாய் பிரஹஸ்பதியை குருவாகப் பண்ணும்படி பிரார்த்திக்கிறார்கள். அந்த பிரஹஸ்பதி வரதனுடைய அநுக்கிரகத்தாலே விப்பிர ரூபத்தைவிட்டு நிஜ ரூபத்தை அடைந்து தேவதேவனுக்கு அநேக வந்தனங்களைப் பண்ணி இப்படி சொல்லி ஸ்லாகித்தார். ஓ புண்டரீகாக்ஷா! உன் பிரசாதத்தாலே என் பாபங்களெல்

லாம் ஸகிந்தீர்கள். நான் ஸ்வரூபத்தை அடைந்
திருந்த கிருத்தியனானேன். உம்மையும் பார்த்தேன்.
கஜேந்திரன் செய்ததுபோல் நான் ஆவாரயுகமெல்
லாம் உம்மை ஆராதிக்கக் கோருகிறேன். நான்
அனேக தினங்களிலிருந்து உன் தரிசனத்தை அபே
க்ஷித்திருந்தேன். அது எனக்குக் கிடைத்தது
என்று சொல்ல பக்தவச்சலனான வரதன் அவன்
கோரின வரத்தை கொடுத்தார். அப்போது குரு
வானவர் அந்த தேவ தேவனை ஆராதித்துக் கொண்
டிருந்தார். பிறகு அமரர்களுடைய சங்கடங்களெல்
லாம் போய்விட்டது. சகல லோகங்களும் விருத்தி
தியை யடைந்தது. அனாவிருஷ்டி தோஷம்போய்
விட்டது. அப்பொழுது அமரர்களெல்லாரும் பிர
மனைச்சேர்ந்து தங்கள் தங்கள் நிவாச ஸ்தான
தைச் சேர்ந்தார்கள்.

பதினாறுவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்டபுராணத்தில் பிருகு நாரதஸம்வாதத்தில்
ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் அநந்தார்ச்சனையையுடைய

பதினேழாவது அத்தியாயம்.

பிருகு மகாரிஷியைப் பார்த்து நாரதபகவானிப்
படிச் சொல்லுகிறார். அப்படியே தேவ குருவானவர்
நியமனம் பெற்றுக்கொண்டு எப்போதைக்கும் பஞ்ச
ராத்திரோக்த மார்க்கத்தாலே வரதனை ஆராதித்
துக்கொண்டிருக்க, வசந்தரா சஸ்யங்களாலே சமி
ருத்தியை உடைத்தானதாய் ஜனதான்னிய பூரிதங்க
ளாயிருந்தது. எக்கியதான தப:கிரியைகளெல்லாம்
நடந்தது. அனாவிருஷ்டி தோஷங்களெல்லாம் போய்
விட்டது. ராக்ஷசர்கள் தேவதைகளை இம்சிக்க அசக்
தரானார்கள். இப்படியிருக்க, அயோத்தியாதிபதி
யான இக்ஷ்வாகு வம்சத்துக்கு பூஷணமான குசநாப
சன் என்கிற ராஜன் தர்ம மார்க்கத்தாலே பிரஜைகளை
க்காத்து ரக்ஷித்து கொண்டிருக்க சந்தானம் இல்லா
மல் புத்திர காமேஷ்டியைப்பண்ண மகரிஷிகள் எல்
லாரும் நாரதபகவானைப் பூஜித்து புத்திரனைப் பிரார்த்
திக்க, அவருக்கு அக்கிர கண்ணியனான சகல சாஸ்
திரார்த்த வேதியான வேதவியாசர் அரசனுடன்
இப்படிச் சொன்னார். ஓ ராஜேந்திரா! உனக்கு ஒரு
ஹிதத்தைச் சொல்லுகிறேன் கேளும். இந்த யாகத்
தால் பிள்ளை உண்டாகமாட்டாது. வேகவதி தீரத்
தியசத்திய விருத க்ஷேத்திரத்தில் காஞ்சி பென்ற

ஓர் பட்டணமுண்டு. அதற்கு மேலே தேவதேவனுன
வரதன் இருக்கிறார். நீ அவ்விடத்துக்குப்போய் அவ்
விடத்தில் அந்த தேவதேவனைப் பூஜிப்பாயே யானல்
உன் அபீஷ்டசித்தியாகும் இதற்குச் சந்தேகம் கிடை
யாது என்று சொல்ல, அந்த ராஜாவானவன் அந்த
முனீந்திரனைப்பார்த்து அந்த க்ஷணத்தில் ஸத்திய
விருத க்ஷேத்திரம் சேர்ந்து தேவ குருத மார்க்கத்தா
லே அநந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விவிதான்
னந்தாலேயும் மாலைகள் முதலாகிய சந்தனாதிகளாலே
யும் அனேகவித பூஷணங்களாலேயும் ஸ்தோத்திரங்க
ளாலேயும் பிரணாமங்களாலேயும் உபவாசங்களாலே
யும் தானங்களாலேயும் அந்த வரதனை சந்துஷ்டனாக்
கும்போது அந்த தேவதேவன் அனுக்கிரகத்தாலே
சகல லக்ஷணங்கள் சகல தர்மங்களும் உடைத்தாய்
விசுவஜித் என்கிற ஒரு பிள்ளை அந்த ராஜனுக்குண்
டானன். அவன் அதிக பலசாலியாயிருந்தபடியால்
குசத்வஜன் ராஜ்ஜியத்தை புத்திரனுக்குக்கொடுத்து
விட்டு, வரதனை ஆராதித்துக்கொண்டிருந்து முக்தி
யை அடைந்தான். அப்பொழுது அந்தவிசுவஜித்தை
இந்திரன் சுவர்க்கலோகத்தை ரக்ஷிக்கிறதுபோல
பூமண்டலத்தையெல்லாம் ரக்ஷித்துக்கொண்டு காஞ்சி
புரத்திலிருக்கும் காடுகளையெல்லாம் நிர்மூலமாய்
போக்கடித்து முன்போலே பண்ணி அனேக மடத்
தைகள் கோபுரங்கள் முதலானதுகளை செய்து தே
வாலயங்களெல்லாவற்றையும் நூதனங்களாகச்செ
ய்து சகல ராஜாக்களாலேயும் பூஜிக்கப்பட்ட பா
தத்தை உடைத்தானதாய்க்கொண்டு அந்த காஞ்சி

புரத்தில் அனேக காலங்களிருந்து அஸ்த சைலத்தை
ச்சுற்றிலும் இரத்தினமய கோபுரங்களனேகங்களை
செய்து அந்த வரதராஜனுக்கு அனேக கிராமங்களை
விட்டு தன் ராஜ்ஜிய பாரங்களை வசுதனிடத்
தில் வைத்து அவனுடைய ஆக்கினையாலே ராஜ்ஜிய
பரிபாலனத்தை பண்ணிக்கொண்டிருந்தான். அனு
விருஷ்டிகிடையாது. சோரோபத்திரங்கள் வியாதிகள்
கிடையாது. அபத்தம் கிடையாது மேகங்கள் வர்
ஷித்தனுகள் பூமியானது பயிர்களாலே நிறைந்திருந்
தது. யமன் பிராணிகளைக் கொல்லாமலிருந்தான். யா
கங்களில் பிரீதனாயிருக்கிற இந்திரனுடைய அனுக்
கிரகத்தாலே காஞ்சிபுரத்திலே சுவர்ண விருஷ்டி வர்
ஷித்தது. இப்படி விசுவஜித்தென்கிற பூபாலன் ராஜ்
ஜிய பரிபாலனத்தைப்பண்ணிக்கொண்டு சுவர்ண கம
லங்களாலே வரதனை ஆராதித்துக்கொண்டு வெகு கால
மிருந்தான். அப்போது அந்த ராஜாவுக்கு சத்திய
சந்தன், பிறந்தான். வரதனை ஆராதித்துக் கொண்
டிருக்க முசுகுந்தனென்கிற ஒரு புத்திரன் உண்டா
னன். அவனுக்கு மகாபல மென்கிற ஒரு பிள்ளை
உண்டானன், அவனுக்குசர்வதர்மன்பிறந்தான், அவ
னுக்கு சந்தாமன் பிறந்தான். அவனுக்கு சஹஸ்வலி
ராம்சன் பிறந்தான். அவனுக்கு மரீசு உண்டானன்
அவனுக்கு சத்தியசித்தென்பவன் உதித்தான். அவ
னுக்கு அஜநன் பிறந்தான் இப்படி குசத்வஜன் வம்
சத்தில் பிறந்த ராஜாக்களெல்லாரும் வரதராஜனை
ஆராதித்து சகல தேசங்களையும் பரிபாலனம் பண்
ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கலியுகம் வர்

தது. அப்பொழுது வரதன் சந்துஷ்டனாய்ப் பிரகஸ்பதியைப் பார்த்துச் சொன்னார். ஓ பிரகஸ்பதியே! நீ அனேக காலம் என்னை பூஜித்தபடியாலே நான் சந்தோஷத்தை அடைந்தேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேளும் கொடுக்கிறேனென்று சொல்ல தேவகுருவானவர் இப்படிச் சொன்னார். ஓ மகாத்மா! மனுஷர்களுக்கு அகோசரமான உன்னைப் பார்த்து ஆராதிப்பதைக் காட்டிலும் எனக்கு வரமென்ன இருக்கிறது நானிவ்விடத்திலேயே இருக்கக் கோருகிறேன். புருஷோத்தமனிப்படிச் சொன்னார் ஓ தேவ குருவே! நான் பூர்வத்தில் தேவதைகளுக்குக் குருவாய் உன்னை நியமித்து சுரலோகத்தில் பிரளயகால பரியந்தம் இருக்கப்பண்ணினேன். நான் தேவதைகளுக்கெல்லாம் ரக்ஷகனாயிருந்தபடியாலே எனக்காகவே நீ அவ்விடம் போய் அவ்விடத்திலேயே என்னைப் பூஜியும் என்னுடைய கிருபையாலே சுவர்க்கத்தைக் காத்துக்கொண்டிரும். பிரளயகாலத்தில் என்னைச் சேருவாய் இதற்குச் சந்தேகமில்லை பாத்திரபத மாசத்தில் திருவோண நக்ஷத்திரத்தில் கூடின தினத்தில் பிரதி வருஷம் இவ்விடத்துக்கு வந்து என்னை ஆராதிக்கவேண்டியதென்று வரதன் சொன்னபின், அந்த தேவகுருவானவர் அந்த தேவனுக்கு நமஸ்காரம்பண்ணி திரும்பி சுரலோகம்போய்ச் சேர்ந்தார். அப்பொழுது வரதனை பிரளயகாலம்வரையில் அநந்தன் ஆராதித்துக்கொண்டிருந்தான். வரதன் பிரீதியை அடைந்தாராகையாலே கலிதோஷங்களவ்விடத்தில் இல்லை, [illegible] நாலுபக்கத்திலும் நடந்தது, எல்லாரும்

பக்தியுடையவர்களாயிருந்தார்கள். ராஜ்ஜியமெல்லாம் தனதான்னிய சமிருத்திமாயிருந்தது. ஓ பிருகுமகாரிஷியே! நீர் கேட்ட ஹஸ்திசைல மகாத்மியத்தையும் ... மகிமையும் சவிஸ்தாரமாய்த் தெரியப்படுத்தினேன். எந்த மனிதனாகிலும் விஷ்ணு பக்தியுடையவனாய் இந்த உபாக்கியானத்தைப் படித்தாலும், கேட்டாலும் அவன் சாயுஜ்ஜிய பதவியை அடைவான். எந்த மனிதனாகிலும் சாயங்காலம் பிராதக்காலத்தில் ஹஸ்திசைலத்தில் ஸ்ரீபேசனுடன் இருக்கிற வரதனை மனசில் நினைத்துக்கொண்டிருந்து புண்யகரமான ஹஸ்தகிரிமகாத்மியத்தை ஸ்மரித்துக்கொண்டிருக்குமவன் விஷ்ணு பக்தனாய் சகல பாபங்களினின்றும் விடுபட்டு குரோத லோப அகங்காரத்தை விட்டு வரதனுடைய அனுக்கிரகத்தாலே சகல ஐஸ்வரியங்களையும் சித்தியையும் அடைவான்.

பதினேழாவது அத்தியாயம் சம்பூரணம்.

பிரம்மாண்ட புராணத்தில் பிருகு நாரத ஸம்வாதத்தில் அஸ்தகிரி மஹாத்மியத்தில் அஷ்டாங்க யோகமென்னும் கதையடங்கிய

பதினெட்டாவது அத்தியாயம்

பிருகு மகாரிஷி நாரதபகவானைப் பார்த்து இக்
கப்படிச் சொன்னார். ஓ முனீந்திர சந்திரா! சதுர்முக
னுடைய ஜெபமோக்ஷக்கிரமத்தையும் விரக்தி யுக்தியை
யும் உன்னிடத்தில் கின்றாம் கேட்டு நான் கிருதகிருத
தியனானேன். உன்னைக் காட்டிலும் தர்மங்களைத் தெளி
யச்சொல்லுகிறவன் யாரும் கிடையாது. உன்னை
உபாசிக்கிறவனுக்கு துர்லபமானது ஒன்றுமே கிடையா
து. மகம்மேருபர்வதமுனியில் பிரமன் இருக்கும்போ
ண்டு யாக்ஞவல்கிய மகாமுனிக்குச் சொன்ன அஷ்டா
ங்க யோகக்கிரமத்தை நான் கேட்கக் கோருகிறேன்.
எனக்கு தயைசெய்ய வேணுமென்று பிரார்த்திக்கும்
போது நாரதபகவான் இப்படிச் சொன்னார். ஓ மகா
த்மா! சமஸ்த ஜீவியங்களில் உத்தமமே யோகம்.
அதைச் சொல்லவும் அதைக் கேட்கவும் நீ தான் அர்
ஹன். கேளும் எக்கியதான தபங்கள் ஸ்வாத்தியாய
அதிதி பூஜைகள் முதலானதுகளெல்லாம் யோகத்து
னுடைய, பதினாறாவது பாகத்துக்காகிலும் ஈடாகமா
ட்டாது. மனோ நிக்கிரஹமே யோகம், வைராக்கியம்,
சமம், ஆஸ்திக்கியம், திருதி, மவுனம், ஏகாந்தம்

இதெல்லாம் மனோநிக்கிரகத்துக்குச் சாதகம். வியாதி,
விஷாதங்கள், வியாயாமம், ஜாடியத்வம், மிஷ்பிர
சிதம், [illegible] ஜம் விஷயானுராகம் இதுகள் பாதகங்
களாயிருக்கும் யமநியமப்பிராணயாம, ஜபஹோம, பிரத்தி
யாஹார தாரணத்தியான சமாதிகள் யோகங்களாயிரு
க்கும் சர்வபூத தயாளுத்வம் யோகாலயம். சிருத்தை
சௌமனஸியம் விசுத்தி சத்திய வாதித்வம் சர்வபூத
தயாளுத்வம் மிருதகளுடன் கூடினவனே யோகி
யென்று சொல்லப்படுவான். அவன் பொய்யைச்
சொல்லாமல் விருதா பிரஜல்பத்தை விட்டு அசத்
கதைகளைக் கேளாமல் விவாதத்தை அடையாமல்
ஆத்மஸ்துதியையும் பரநிந்தையையும் அசத்திய ஹா
சம் முதலானதுகளை விட்டு இருப்பான். தவிர, அவன்
கொடுக்கிற பத்திர புஷ்பபலாதிகளை ஒரு சமயத்திலா
வது சொல்லாமல் பரஸ்திரீகளைப் பாராமல் பிரம்ம
சரியத்தில் நிரதராய் குருசிஸ்ருஷா பரனாய் தன்
சரீரபோஷணத்துக்கு அன்னபானங்களை மிதமாய்
கிரகித்துக்கொண்டு வாக்கு, மனசு, கர்மங்கள் இந்த
மூன்றுவிதங்களாயிருக்கும் கர்மங்களைப் பண்ணிக்
கொண்டு சம்சயமில்லாமலிருக்கிற கியானத்தை அ
டைந்திருப்பான். தபதியானம்பண்ணுவதே மனசுத்
தி ஆகும். இதர்களுக்கு ஹிதத்தைச் சொல்லுவதே
வாக்குசுத்தி ஆகும். தன்னுடைய தர்மங்களைப் பண்
ணுவதே காயசுத்தியாகும். யோகி தன்னுடைய சித்த
த்தை தனக்கு சுவாதீனமாக செய்துகொண்டு சீதோ
ஷ்ணங்கள் பிரியாப்பிரியங்கள் சத்துரு மித்திரர்கள்
இதுகளையெல்லாம் சமமாக எண்ணிக்கொண்டு

விருச்சாபலாச ஜபஹோம சாராயண விரதனாய் தேவ
ரிஷி மனுஷியர்களை ஆராதித்துக்கொண்டு சுத்தமான
அன்னத்தைப் புசித்துக்கொண்டு நித்யத்துவங்களை
விட்டுக்கொண்டு ஸ்வாத்தியாயபரனாய் மௌனியாய்
அஷ்டாக்ஷரத்தையாகிலும் துவாதசாக்ஷரத்தையா
கிலும் ஜபித்துக்கொண்டு யோகயுக்தனாயிருந்து
கொண்டு ஆத்மஞானத்தாலே நிர்மல சித்தனாய் சித்
தியை அடைந்திருக்கு புஷ்பாதிகளாலே விஷ்ணுதே
வனை ஆராதித்துக்கொண்டு பிரதக்ஷிண ஸ்துதி நமஸ்
காரங்களைப் பண்ணிக்கொண்டு அந்த பரமாத்மாவை
தன் மனதில் நிறுத்தி யம நியமாதிகளுடன் கூடி, வைதி
கிய சக்தனாய் யேகாங்கியாக இருந்துகொண்டு யோகா
ஹாரனாய் நிம்மோன்னதவர்ஜிதமான சமமாயிருக்கு
பிரதேசத்தில் சாஸ்தரணத்தில் ஸ்வஸ்திகாதி வீரா
சனங்களில் உட்கார்ந்துகொண்டு ஜிதேந்திரியனாய்
வீராகனாய் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு,
பத்து, பன்னிரண்டு கணக்குகளாலே பிராணாயாமங்
களை சரீர சுத்திக்காக சகற்பமாய்ப் பண்ணுகிறது. தியா
னமந்திரங்களோடே கட்டுகிறது சகற்பமென்று
சொல்லப்படும். வாயு நிரோதமாயிருக்கும் ஸமயமாம்
அகர்ப்பமென்று சொல்லப்படும். இப்படி பிராணாயாம
பரனாய் பிருதிவி அப்தேயு வாயுக்களை ஜயித்து
களாலே லீனமாய்ச்செய்து யோகேந்திரியங்களோடே
ஞானேந்திரியங்களோடே [illegible]
களைச் சேர்த்து பூதாதிகளை புத்தியிலே புத்தியை பிர
கிருதியிலே நிறுத்தி அந்த பிரகிருதியை நிர்குணமா
யிருக்கும் பரமாத்மாவினிடத்தில் லயத்து [illegible]

[illegible]தல் மக்ஷமான [illegible]ருஷனை இருவருடன் ஐந்த
[illegible]ராகத் தெரிந்துகொண்டு அவனை வாசுதேவனை
[illegible]டாம் சேர்த்து சமாதிதனாய் விஷயங்களில் சம்பந்தப்
[illegible] விஷ்ணுவை தன் மனதில் வைத்து யோகா
[illegible] ஸ்திராஸனனாய் மூக்குநுனியில் வைத்து
[illegible] உடையவனாய், க்ஷீணம
[illegible] ஆபிரமய [illegible] பரியந்தம் வியாபி
த்திருக்கும் விஷ்ணுவை [illegible] முதலில்
சிந்தித்து பின்பு நிர்தோஷமான அந்த தேவ
னைச் சூக்ஷ்ம ரூபத்தில் சிந்தித்துக்கொண்டிரு
ந்தும். அந்த சூக்ஷ்ம ரூபங்கள் இரண்டு விதங்கள்
அதெப்படியென்றால் சங்க சக்ர கதா பத்ம ஸ்ரீவ
த்ஸ கௌஸ்துபாதி லக்ஷண லக்ஷிதனாய் பிரசன்ன வதன
னாய் பதும பத்திர நிபேக்ஷணனாய் பீதாம்பர தாரி
யாய் வனமாலா விராஜிதனாய் சுத்தஸ்படிக சங்காச
னாய் விக்ரஹவானாயும், அவ்வியனாய், நிஷ்களங்கனாய்,
நித்தியனாய், நிர்குணனாய், சகுணனாய் இருக்கிற
து ஒன்று. இரண்டாவது சர்வகதனாய், சூக்ஷ்மமாய்,
நிர்லக்ஷணனாய், [illegible]னாய், அக்ஷயமாய், நித்திய
மாய், நிராகல்பமாய், நிரஞ்சனமாய், வாசுதேவ
னென்கிற பேரை உடைத்தாய் அவ்வியக்தமாய் பரம
ஞான ரூபமாய் விளங்காநிற்கும். யோகீந்திரன் அப்
படிப்பட்ட விஷ்ணுதேவன் இரண்டு ரூபத்தையும்
தரித்துக்கொண்டு மனதில் நினைத்து யோக யுக்த
னாய் சப்தாதி பாவங்களை எப்பவும் நினைக்காமல் யோ
[illegible] வியயங்களை விட்டு சுகாசீனனாய்
[illegible] மனனாய், நிராசனனாய் சாந்

தியை அடைந்து விசிஷ்ட சமாதியாலே தன்மயத்வத்தை அடைந்து கிலேசங்களை விட்டு நீங்கி கர்மங்களை விட்டு திரஸ்காரி சயாகத்தை அடைந்து உண்மையத்தை அடைவான். இது யோக சாரத்து தெரியப்படுத்தினேன். இனி சாங்கிய [illegible] சொல்லுகிறேன் [illegible] ந்துக்கொண்டு பா [illegible] ப்பிரணவாய களை நியமித்து [illegible] வாயுவைப் பூரித்து ஆத்தி மாய் [illegible] ஸ்புரிதமாய் இருக்கிறாய் ஜோதிய [illegible] ளங்கும் அஷ்டாக்ஷர மந்திர தியானத்தைப்பண்ணி பரமாத்மாவைத் தெரிந்துக் கொள்ளுபவன் நிரந்தர நிர்மலனாய் பிரகாசித்துக்கொண்டிருப்பன் என் இந்த விதமாய் நாரதபகவான் பிருகு மகாரிஷிக்கு சொன்னார்.

இது ஸ்ரீமத் ராமாநுஜ சரணாரவிந்த தயுக [illegible] ளைந்த ஒழுகப்பெற்ற அதிகாரி ராமய்யரால் திராவிட பாஷையில் வசன ரூபமாய்ச் செய்யப்பட்ட

பதினெட்டாவது அத்தியாயம் சம்பூரணம்.

1182